கம்பன் உணர்த்தும் பரம்பொருள் நிலை

சித்தாந்த வித்தகர்

முரு. பழ. இரத்தினம் செட்டியார்

கம்பன் கழகம், சென்னை

கம்பன் உணர்த்தும் பரம்பொருள் நிலை

[அமரர் ஏவி. எம். அறக்கட்டளை நினைவுச் சொற்பொழிவு—1991]

1030

சித்தாந்த வித்தகர்
முரு. பழ. இரத்தினம் செட்டியார்

வெளியீடு :
கம்பன் கழகம்
சென்னை-600 040

முதற் பதிப்பு : ஆகஸ்ட், 1991

முதற் பதிப்பின் விற்பனை உரிமை :

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை-600 017

விலை : ரூ. 15-00

(இந்நூலின் முதற் பதிப்பு மட்டும்
ஏவி. எம். அறக்கட்டளை
நிறுவனத்தாரால் வெளியிடப்படுகிறது)

அச்சிட்டோர் :
ஸ்ரீ கோமதி அச்சகம்
41, சூரப்பன் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005 போன் : 844554

பதிப்புரை

சென்னைக் கம்பன் கழகம் 1975 இல் நிறுவப் பெற்றது. திரு ஏவி. மெய்யப்பன் அவர்கள் 12-8-1979 அன்று இயற்கை அடைந்தமை வரையில், கழகத்தின் துணைத் தலைவர்களுள் ஒருவராக இருந்து வந்தார்கள்.

சினிமாத்துறையில் பெரும் பெயர் பெற்றிருந்த அவர்கள், கம்பன் கழகத்தோடு தொடர்பு கொண்டதி லிருந்து கழகத்தின் வளர்ச்சியிலும், கம்பனுடைய கவி நயத்தைப் பருகுவதிலும், முழுமையான ஈடுபாடு கொண் டிருந்தார்கள். ஒவ்வோர் ஆண்டும் தாம் தலைவராக இருந்த ஏவி. எம். அறக்கட்டளையினுடைய ஏவி. எம் இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் கம்பன் விழா நிரந்தரமாக நடைபெறுவதற்கு வழி வகுத்ததோடு, கழகத்திற்கு அவ்வப்போது தேவையான உதவிகள் அனைத்தையும் நிறைந்த உள்ளத்துடனும், மட்டற்ற மகிழ்ச்சியுடனும் செய்து வந்தார்கள்.

அன்னாருடைய மறைவுக்குப்பின், அமரர் ஏவி. எம். அவர்களின் குடும்பத்தினர், அதே ஈடுபாட்டையும் அக்கறையையும் காட்டி வருகிறார்கள். அமரர் ஏவி. எம். அவர்களுடைய நினைவில் ஆண்டுதோறும் கம்பனைப் பற்றிச் சென்னைக் கம்பன் கழகத்தின் ஆதரவில், ஒரு நினைவுச் சொற்பொழிவு நடக்க வேண்டுமென்று விரும்பி அதற்காக ஆவன செய்வதற்குமுன் வந்தார்கள்.

அந்தத் திட்டத்தின்படி அமரர் ஏவி. எம். அவர்களின் இவ்வாண்டின் (எட்டாம் ஆண்டைய) நினைவுச் சொற் பொழிவு 1991ஆம் ஆண்டு, ஜூலைத் திங்கள் 28, 29

தேதிகளில் ஏவி.எம். இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

சொற்பொழிவை சித்தாந்த வித்தகர் திரு முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள், "கம்பன் உணர்த்தும் பரம்பொருள் நிலை" என்ற தலைப்பில் நிகழ்த்தினார்கள். வானதி பதிப்பக உரிமையாளர் திரு வானதி ஏ. திருநாவுக்கரசு அவர்கள் தலைமை ஏற்றார்கள்.

இந்த நினைவுச் சொற்பொழிவின் நூல் வடிவமே இது. இதனை நூல் வடிவாக்கி, அச்சிடும் பொறுப்பையும் அமரர் ஏவி. எம் குடும்பத்தினரே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தச் சொற்பொழிவினை ஏற்பாடு செய்து, அதனைக் கம்பன் கழகத்தின் மூலம் நிறைவேற்றிய, ஏவி.எம். குடும்பத்தார்க்கு எங்கள் மனம் கனிந்த நன்றி.

கம்பன் கழகத்தார்

9-8-1991 சென்னை

முன்னுரை

''கம்பன் உணர்த்தும் பரம்பொருள் நிலை'' என்னும் இந்நூலைப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னேயே எழுதுவதற்குத் திட்டமிட்டேன். கம்பன் பாடல்களில் பரநிலைத் திருமால்,பிரமாவோடும்,சிவனோடும் இணைந்திருக்கிறார் என வருவது சைவ சமயத்தைச் சார்ந்த எனக்கு ஓர் ஊக்கத்தை அளித்தது. ஆனால் திவ்வியப் பிரபந்த உரையாசிரியர்கள் இக் கருத்தை ஒப்புக் கொள்ளாமல் வன்மையாக மறுத்திருக்கிறார்கள். இதனால் மணிப்பிரவாள நடையில் உள்ள அவர்கள் உரையை ஆராய வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த ஆராய்ச்சி நீண்டு கொண்டே சென்றதால் நூல் எழுதும் முயற்சியை அப்பொழுது விட்டுவிட்டேன். இடையில் இதுபற்றி இரண்டு கட்டுரைகள் சுருக்கமாக எழுதிக் காரைக்குடிக் கம்பன் மலரிலும், புதுக்கோட்டைக் கம்பன் மலரிலும் வெளியிட்டேன். அவற்றிற்கு வைணவப் பெரியோர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்கள். மேலும் ஆராய வேண்டும் என்னும் எண்ணத்தில் ஆண்டுகள் பல ஓடிவிட்டன.

சென்னைக் கப்பன் கழகத்தில் சென்ற ஆண்டு பேசினேன். நீதிபதி இஸ்மாயில் அய்யா அவர்கள் ஒரு நூல் எழுதும்படி என்னைப் பணித்தார்கள்,என் எண்ணத்தில் ஊறிக்கிடந்த பரம்பொருள் நிலை பற்றியே நூல் எழுதவேண்டும் என உறுதிபூண்டேன். இடைக்காலத்தில் செய்திருந்த ஆராய்ச்சிகளும் இதற்குத் துணையாக அமைந்தன.

நூலை எழுத ஒப்புக்கொண்ட பின்னர் நான் மலேசியா சென்றுவிட்டேன். அங்கு சில வேலைகள் காரணமாக எழுதும் முயற்சி தடைப்பட்டது. இந்த

ஆண்டு மே மாதம்தான் நான் மலேசியாவிலிருந்து திரும்பினேன். திரும்பியதும் என் மனைவிக்கு உடல்நிலை குன்றியது. இதனால் மன அமைதியிழந்த நான்,'' நூல் எழுதும் முயற்சியை விட்டுவிடுகிறேன்'' எனச் சென்னைக் கம்பன் கழகத்திற்குத் தெரிவித்தேன், "இந்த ஆண்டு AV.M அறக்கட்டளையில் நூல் வெளியிடப்பட வேண்டும்; எனவே முயற்சியை விட்டுவிடக் கூடா''தென நீதிபதி அய்யா அவர்கள், செயலர் பழ. பழனியப்பன் அவர்கள் வாயிலாகத் தெரிவித்தார்கள்; தந்தி சொன்னார்கள்; ஆள் அனுப்பினார்கள்; நெருக்கடிகளுக்கிடையில் நூலை எழுதி விடுவதென முடிவு செய்து எழுதத் துவங்கினேன். 45 நாட்களுக்குள் நூலை எழுதி அனுப்ப வேண்டும் எனப் பணிக்கப்பட்டேன். மிக முயன்று குறிப்பிட்ட அந்தக் காலத்திற்குள் எழுதி நூலைக் கம்பன் கழகத்திற்கு அனுப்பிவிட்டேன்.

நீதிபதி இஸ்மாயில் அய்யா அவர்களின் கடுமையான வற்புறுத்தல் இல்லாவிட்டால் இந்நூல் உருவாகியிருக்க முடியாது. நூல் வெளிவருவதற்கு நீதிபதி அய்யா அவர்களின் விடாப்பிடியான தூண்டுதலே காரணம் ஆகும். ஆதலால் அவர்களே இந்நூலை உருவாக்கியவர்கள் எனச் சொல்வது மிகையாகாது. அவர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

A V. M. அறக்கட்டளையின் சார்பாக நூல் வெளிவருவது பெரியதொரு கௌரவமாகும். A V. M. அவர்கள் கம்பனுக்காகவே உயிர் வாழ்ந்தவர்கள். சென்னைக் கம்பன் விழா நடைபெற்ற சமயம் அவர்கள் உடல்நலமின்றி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார்கள்; அங்கிருந்து அடிக்கடி தொலைபேசி மூலம் விழாவைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தார்கள். விழா முடிந்ததும் செயலர் பழ. பழனியப்பன் அவர்கள் நன்றியுரை சொன்னார்கள். நன்றியுரை சொல்லி முடிந்து மேடையை விட்டு இறங்கியதும் மருத்துவமனையில் இருந்து தொலைபேசியில் மெ. அவர்கள் காலமாகி

விட்டார்கள் என்ற செய்தியைத் தெரிவித்தார்கள். விழா முடிவதற்காக அவர்கள் உயிர் தாங்கிக் கொண்டிருந்தார்கள் என்னும் உணர்ச்சியை அது விளைவித்தது. அவர்களுக்குப் பின் அவர்கள் தம் துணைவியார் ராஜேஸ்வரி அம்மையார் அவர்களும் திருப்புதல்வன் சரவணன் அவர்களும் கண்ணும் கருத்துமாக அறக்கட்டளையை ஆண்டுதோறும் நடத்தி வருகிறார்கள். என் நூல் அந்த அறக்கட்டளையின் சார்பில் வெளிவர இடம் அளித்த மெ. அவர்களின் குடும்பத்தாருக்கு என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இனி நூலைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

பரத்துவ நிலையில் சிவனுக்கு இடம் உண்டு என்பதை கம்பன், ஆழ்வார்களின் வாக்குகளை ஆதாரமாகக் கொண்டு பாடியிருக்கிறான். இதனைத் தமிழ் உலகம் அறிய வேண்டும் என்னும் நோக்கிலேயே இந்நூலை எழுதியுள்ளேன். ஆனால் அதற்காக நடுநிலைமை பிறழ்ந்து எதுவும் சொல்லக் கூடாதென எனக்குள் ஒரு முடிவு செய்து கொண்டேன். "வைணவ சித்தாந்தத்தை வைணவ அடிப்படையில்தான் எழுதவேண்டும்; அது சரியா? பிழையா? என்னும் ஆராய்ச்சியில் இறங்கக்கூடாது; அது என்ன சொல்கிறது? என்பதைத்தான் நாம் விளக்க வேண்டும். நாம் சைவன் என்பதற்காகப் பாட்டுக்களை வலிந்தோ, திரித்தோ பொருள் செய்யக்கூடாது; சிவனைக் குறைத்துச் சொல்லியிருக்கும் இடத்தில் குறைத்துத்தான் சொல்ல வேண்டும்; உண்மையை எழுதுவதுதான் குறிக்கோளாக அமையவேண்டும்." என்னும் முடிவில் இந்நூலை எழுதியுள்ளேன். என் கருத்துக்களை ஒப்புக் கொள்ளாதவர்கள் கூட நான் நடுநிலைமை பிறழவில்லை என்பதை ஒப்புக் கொள்வார்கள் என்றே நம்புகிறேன்.

கம்பன் வரலாறு பலபடியாகச் சொல்லப்படுகிறது. அவன் சைவன் என்றும், அவன் மகன் பெயர் அம்பிகாபதி

என்றும், அவனை ஆதரித்த வள்ளல் சடையன் எனப் பெயர் உடையவராக இருப்பதால் அவர் சைவர் என்றும், ஸ்ரீரங்கத்தில் கம்பன் நூலை அரங்கேற்றமுடியாமல் தடை செய்து விட்டார்கள் என்றும், தேரழுந்தூரில் நரசிம்ம மூர்த்தி சிரக்கம்பம் செய்த பின்னரே நூல் அரங்கேறியது என்றும் சொல்லப்படுகிற செய்திகளுக்குத் தகுந்த ஆதாரங்கள் இல்லை. சடையப்ப வள்ளல் பற்றிக் கம்பன் பாடியிருக்கிறான். அவன் காலத்தில் வள்ளல்கள் சைவ, வைணவ பேத நோக்கின்றி இலக்கிய நோக்கில் உதவி செய்திருக்கிறார்கள் என நான் நினைக்கிறேன். எப்படி இருப்பினும் கம்பன் வைணவனா? என்பதை அவன் நூலைக் கொண்டுதான் முடிவு செய்ய வேண்டும் எனக் கருதினேன். அதன்படியேதான் ஆராய்ச்சி செய்துள்ளேன். ஆழ்வார் திருவாக்குகளுக்குத் திவ்வியப் பிரபந்த உரையாசிரியர்கள் பொருத்தமற்ற சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவ்வுரைகளையும் என் சிற்றறிவிற்கு எட்டிய அளவில் இங்கே ஆராய்ச்சி செய்துள்ளேன். கம்பன் திவ்வியப்பிரபந்த உரையாசிரியர்களுக்கு முன்னே தோன்றியவன். அதனால் அவ்வுரைகள் அவனைப் பாதிக்கவில்லை என நான் கருதுகிறேன். மணிப்பிரவாள நடையை அவன் ஒரு சிறிதும் கையாளாமல் இருப்பது இதற்குச் சிறந்த சான்றாகும்.

வாலிவதையைப் பற்றி ஏற்கனவே நான் ஒரு நூல் எழுதியிருக்கிறேன். அதில் 'கிட்டுவார் பொரக் கிடைக்கின்' என்னும் தொடருக்கு வாலி கையில் அகப் பட்டால்தான் பாதிப்பலம் போகும் எனக் குறிப்பிட்டிருக் கிறேன். அதனை அறிஞர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. அதனை ஒப்புக்கொள்ளாவிட்டாலும் இலக்குவன் சொல் வதைத்தான் நாம் காரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என இந்நூலில் கூறியிருக்கிறேன். கம்பன் காரணம் சொல்லாமல் இருந்திருந்தால் நாம் காரணம் கற்பிக்கலாம்; ஆனால் அவன் ஒரு காரணத்தைச் சற்பாத்திரமாகிய இலக்குவன் வாயிலாகச் சொல்லி

விட்டதால் அதனைத்தான் நாம் சிந்தித்து முடிவு செய்ய வேண்டுமென இந்நூலில் கூறியுள்ளேன்.

விராதன் சீதையைத் தன் கையால் தொட்டுத் தூக்கியுள்ள செய்தி கம்பன் கொள்கைக்கு ஏற்புடையதன்று என்றும் மூல நூல் வலிமையால் பாதிப்புற்று இவ்வாறு சொல்லியிருக்கிறான் என்றும் குறிப்பிட்டிருக்கிறேன்.

வியூக நிலையில் சங்கர்ஷணன், அநிருத்தன், பிரத்தியும்நன் முதலியோர் கூறுகள் பிரமாவிடத்தும் திருமாலிடத்தும் சிவனிடத்தும் பதிந்து செயலாற்றுவதால் கம்பன் மும்மூர்த்திகள் எனப் பிரமாவையும், திருமாலையும் சிவனையுமே குறிப்பிடுகிறான் எனச் சொல்லியிருக்கிறேன்

பரநிலை, வியூகநிலை முதலியவற்றை இடநோக்கியும், சந்தர்ப்பம் நோக்கியும் நாம் முடிவுகாண வேண்டும். பெரும்பாலும் இராமனின் பேராற்றலைப் பேசும்போது பரநிலையையே அவன் சுட்டுகிறான் என்பது தெளிவு

கம்பன் 'காலமும், கணக்கும் நீத்த காரணன்' எனப் பரநிலைத் திருமாலைச் சுட்டுவதால் திருமால் உடம்பில் காணப்படுவதாக ஆழ்வார் திருவாக்குகளில் பேசப்படும் சிவனும் பிரமாவும் பரநிலையைச் சேர்ந்தவர்கள் எனக் கொள்வதே பொருத்தம் எனக்கூறியிருக்கிறேன். பரநிலை, வியூகநிலை பற்றி அவர்கள் விளக்கமாக வேறுபடுத்திப் பேசாவிட்டாலும் கம்பனை ஆதாரமாகக் கொண்டு அந்நிலைகளை நிர்ணயிக்க வேண்டும் என்பது எளியேன் கருத்தாகும்.

காய்தல், உவத்தல் இன்றி இந்நூலை நான் எழுதியிருப்பதால் தமிழ் உலகம் இதனை ஏற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கிறேன். 28-7-91, 29-7-91 இரு நாட்களிலும் சென்னைக் கம்பன் கழகத்தில் இந்நூலைப் பற்றி விரிவாகப் பேசினேன். நீதிபதி இஸ்மாயீல் அய்யா அவர்களும், வானதி உரிமையாளர் திரு. ஏ. திருநாவுக்கரசு-

அவர்களும் என்னைப் பாராட்டியதிலிருந்து இந்நூலைத் தமிழ் உலகம் அங்கீகரிக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

வானதி பதிப்பக உரிமையாளர் திரு. ஏ. திருநாவுக்கரசு அவர்கள் இந்நூலைச்சென்னைக்கம்பன்கழகம் பதிப்பித்து வெளியிடுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். அவர்களின் இனிய பண்பு என் உள்ளத்தைக் கவர்ந்தது. பலநாள் பழகிய ஓர் உணர்வு அவர்களை முதலில் சந்தித்ததும் எனக்கு ஏற்பட்டது. இந்நூலைப் பதிப்பிக்கும் பணியை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என் வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை இங்ஙனம்

31-7-91 முரு. பழ. இரத்தினம்செட்டியார்

பொருளடக்கம்

1. இராமன் திருமால் அவதாரம்

"நடையின் நின்று உயர்நாயகன் தோற்றத்தின்
இடை நிகழ்ந்த இராமாவதாரப் பேர்த்
தொடை நிரமபிய தோம்அறு மாக்கதை
சடையன் வெண்ணெய் நல்லூர்வயின் தந்ததே."

—பால காண்டம், பாயிரம் 11ம் பாடல்.

"திருமால் அவதாரங்களுள் இடையே நிகழ்ந்த இராமவதாரம் பற்றிய குற்றமற்ற பெருங்கதையை யான் பாடுவதற்குச் சடையப்ப வள்ளல் உறுதுணையாக நின்றார்." எனக் கம்பன் சொல்கிறான்.

"நிகழ்ந்த" என்றால் "நடந்த" என்று பொருள். இராமாவதாரம் உண்மையில் நடந்த நிகழ்ச்சி எனக் கம்பன் நம்புகிறான்.

ஞானசம்பந்தர் மதுரைக்கு வந்துள்ள செய்தியைச் சமணர்கள் சென்று பாண்டியனிடம்,

"சூலபாணிபால் ஞானம் பெற்றான் என்று சுருதிப்
பாலன் அன்பர் தங்குழாத் தொடும்பனி முத்தின் சிவிகை
மேலணைந்தனன் எங்களை வாதினில்வெல்ல"

எனக் கூறுவதாகச் சேக்கிழார் சொல்கிறார். "சூலபாணியாகிய சிவபெருமானிடம் அருள்பெற்ற வேதியச்சிறுவன்" எனச் சமணர்கள் சொல்லவில்லை. 'சிவபெருமானிடம் அருள் பெற்றான் என்று சொல்லப்படும் வேதியச்

சிறுவன்'' என்றே அவர்கள் சொல்வதாகச் சேக்கிழார் பாடுகிறார். ''என்று'' என்பதன் மூலம் ஞானசம்பந்தர் சிவபெருமானிடம் அருள் பெற்றவர் என்பதைச் சமணர் கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெரிகிறது. இது போலக் கம்பன் இராமன் திருமால் அவதாரம் என்பதை நம்பாதவனாக இருந்தால் ''இடை நிகழ்ந்த தென்னும் இராமாவதாரம்'' எனப் பாடியிருப்பான். ''நிகழ்ந்த'' எனப் பாடுவதால் அவன் அதனை நம்புகிறான் என்றே கொள்ள வேண்டியதிருக்கிறது.

சைவர்கள் இறைவன் மானிடமாக அவதாரம் செய் வான் என்பதை நம்புவதில்லை. அடியார்களுக்கு மானிட உருவில் திடீரெனத் தோன்றி அருள் பாலித்துவிட்டு மறைந்து விடுவதுதான் இறைவன் இலக்கணத்திற்குப் பொருந்தும் என அவர்கள் கூறுகிறார்கள். மானிடக் கர்ப்பத்தில் தோன்றுவது இறைவன் இலக்கணத்திற்கு முரண் என அவர்கள் கருதுகிறார்கள். இறைவன் ''பிறப்பிலி, இறப்பிலி'' என்பது மணிவாசகம். 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்பது சிலப்பதிகாரம்.

உலகை உய்விக்க இறைவன் ''மான் காட்டி. மான் பிடித்தல் போல.'' உயர்ந்தஆன்மாக்களாகிய நாயன்மார் களையும், ஆசாரியர்களையும் அவதரிக்கச் செய்வானே தவிரத்தானே அவதரிக்க மாட்டான் என்று சைவம் உறுதியாகச் சொல்லுகிறது. ''இறைவன் மானுடமாக அவதாரம் செய்தாலும் பின்னர் மக்கள் அவனை இறைவன் என உணர்ந்ததும், 'அவன் போல நம்மால் நடக்க முடியுமா?' என்றெண்ணி அறநெறியைக் கை விட்டு விடுவர்; ஆகவே இறைவன் அவதாரம் செய்வது பயன் தராது என்பது சைவக் கொள்கை.

வைணவர்கள் கருணைமிகுந்த இறைவன் தன் எளிமை காரணமாக உலகை உய்விக்க வேண்டி மானிடக் கர்ப்பத் தில் புகுந்து, பிறந்து செயலாற்றுவான் எனக் கூறு கின்றனர். ''கீதை'' இன்றும் பயன் தருகிறது என்பது

அவர்கள் கருத்து. கம்பன் வைணவக் கொள்கையை உடன் பட்டே இவ்வாறு பாடியிருக்கிறான் எனக் கொள்வதில் தவறில்லை.

தசரதன் மகப்பேறு இன்றி வருந்தித் தன் குல குரு வாகிய வசிட்டனிடம் முறையிடுகின்றான். அப்போது வசிட்ட முனிவன் கடந்தகால நிகழ்ச்சியைத் தன் ஞான திருட்டியால் நினைவு கூர்கின்றான்:

''அலைகடல் நடுவண், ஓர் அனந்தன் மீ மிசை,
மலை என விழிதுயில் வளரும் மாமுகில்
'கொலை தொழில் அரக்கர் தம்கொடுமை தீர்ப்பென் என்று
உலைவுறும் அமரருக்கு உரைத்த வாய்மையை''
—பாலகாண்டம், திரு அவதாரப்படலம் **6**ம் பாடல்

''அவதாரம் செய்து அரக்கர்களை அழிப்பேன்'' எனத் திருமால் தேவர்களிடம் சொல்லியிருப்பது வசிட்ட னுக்கு நினைவு வருகிறது. தசரதனுக்கு மகனாகத் திருமால் பிறப்பார் என்பதை உணர்ந்து வசிட்டன் தசரதனை வேள்வி இயற்றும்படி கூறுகின்றான். இப் பாடல் சென்னைக் கம்பன் கழகப் பதிப்பில் எவ்வித அடையாளக் குறியும் இன்றிப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே இது கம்பன் பாட்டுத்தான்என்பதில் ஐயமில்லை. இப்பாடல் வாயிலாகத் திருமால்தான் இராமனாக அவதாரம் செய்தார் என்பதைக் கம்பன் உறுதிப்படுத்து கிறான்.

வேள்வியில் தோன்றிய பூதம் ஒரு தட்டில் அமுதத்தை ஏந்தி வந்து தசரதனிடம் கொடுக்கிறது. அதனைத் தசரதன் தன் தேவியர் மூவர்க்கும் பகிர்ந்து அளிக்கிறான். பிதிர்ந்து வீழ்ந்த மீத அமுதத்தைச் சுமித்திரைக்கு வழங்கு கிறான். மூவரும் கருத்தரிக்கின்றனர். உரிய காலம் வந்ததும் கோசலை இராமனைப் பெற்றெடுக்கிறாள் :

'ஒரு பகல் உலகு எலாம் உதரத்துள் பொதிந்து
அருமறைக்கு உணர்வு அரும், அவனை அஞ்சனக்
கருமுகிற் கொழுந்து எழில் காட்டும் சோதியை
திருஉறப் பயந்தனள்—திறம் கொள் கோசலை'

—பாலகாண்டம், திருஅவதாரப்படலம் 103ம் பாடல்

''உலகம் முழுவதையும் தன் வயிற்றினுள் அடக்கி வைத்திருந்த திருமால் இப்பொழுது கோசலை வயிற்றினுள் அடங்கியிருந்து உரிய காலத்தில் இராமனாக அவதரிக்கிறார்'' என இப்பாடல் கூறுவதால் திருமால் தான் கோசலை வயிற்றில் இராமனாகத் தோன்றினார் என்பது தெளிவாகிறது.

இராமனுக்கு வசிட்ட முனிவர் பெயர் இடுகிறார். அவ்விடத்தில் கம்பன்,

'கரா மலைய, தளர்கைக் கரி எய்த்தே,
''அரா-அணையில் துயில்வோய்!'' என அந்நாள்
விராவி அளித்தருள் மெய்ப் பொருளுக்கே
'இராமன்' எனப் பெயர் ஈந்தனன் அன்றே'

எனக் கூறுகிறான்.

—பாலகண்டம், அவதாரப் படலம் 117ம் பாடல்

முதலையால் பிடியுண்ட கஜேந்திரன் என்னும் யானை 'பாம்பணையில் துயில்வோய்'' என அழைத்ததும் உடனே வந்து அதற்கு அருள் செய்த மெய்ப் பொருளாகிய திருமாலுக்கு இராமன் எனப் பெயரிடப் பட்டதென இப்பாடல் கூறுகின்றது. கஜேந்திரனுக்கு அருள் புரிந்த கதை புராணப் பிரசித்தம். திருமால்தான் யானைக்கு அருள் புரிந்தார் என்பதை வைணவப் புராணங்களும் ஆழ்வார் திருவாக்குகளும் எடுத்தியம்புகின்றன.

இதுகாறும் திருமால்தான் இராமன் எனக் கம்பன் சொல்லியிருக்கும் பாட்டுக்களை ஆராய்ந்தோம். இனித் திருமாலின் தேவியாகிய இலக்குமிதான் சீதாப் பிராட்டி என்பதைக் கம்பன்,

''மை அறுமலரின் நீங்கி, யான் செய் மாதவத்தின் வந்து
செய்யவள் இருந்தாள்' என்று செழு மணிக்கொடிகள் என்னும்
கைகளை நீட்டி அந்தக் கடிநகர், கமலச் செங்கண்
ஐயனை, ஒல்லை வா' என்று அழைப்பது போன்றது அம்மா!'

எனப் பாடுகிறான்.

—பாலகாண்டம், மிதிலைக் காட்சிப்படலம் 1ம் பாடல்.

தாமரைப் பூவிலிருந்த இலக்குமி அதனைவிட்டு நீங்கி மிதிலையில் சீதாப்பிராட்டியாக வந்திருக்கிறாள் என்பதை இப்பாடல் இனிது உணர்த்துகிறது.

'மருங்கு இலா நங்கையும், வசை இல் ஐயனும்,
ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினார்
கருங்கடல் பள்ளியில் கலவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால், பேசல் வேண்டுமோ?'

—பாலகாண்டம், மிதிலைக் காட்சிப் படலம் 38ம் பாடல்.

''திருப்பாற்கடலில் திருமால் பள்ளிகொண்டிருக்கிறார். அவர் இதயத்தில் இலக்குமி வீற்றிருக்கிறாள். அவதாரம் செய்யும் போது திருமால் அயோத்தியில் இராமனாக அவதரிக்கிறார். இலக்குமி மிதிலையில் சீதாப் பிராட்டியாகத் தோன்றுகிறாள். இருவரும் திருப்பாற் கடலை விட்டுவெவ்வேறு நகரங்களில் வந்து பிறந்திருக்கிறார்கள். பிரிந்து போன அவர்கள் மீண்டும் ஒருவரையொருவர் மிதிலையில் சந்திக்கிறார்கள்.'' இந்நிகழ்ச்சியைச் சொல்லுகின்ற இப்பாடலில், பாற் கடலைக் கம்பன் கருங்கடல் என்று சொல்லுகிறான். ''திருமாலின் கரிய நிற சோதி கடல் முழுவதும் பரவியிருப்பதால் ''பாற்கடல் கருங்கடல் ஆயிற்று'' என அவன் கூறுகிறான். இப்பாடலால் திருப்பாற்கடலில் சயனித்திருந்த திருமால் தான் இராமனாகப் பிறந்திருக்கிறான் என்பது தேற்றம்.

கம்ப இராமாயணம் முழுவதிலும் திருமால்தான் இராமனாக அவதரித்தார் என்பதைச் சொல்லுகின்ற பாடல்கள் ஏராளமாக உண்டு.

''ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்'' என்னும் நியாய அடிப்படையில் காண்டம் தோறும் இராமன்தான் திருமால் என்பதை உணர்த்தும் ஒவ்வொரு பாடலை இங்கே காட்ட விரும்புகிறேன்.

மேலே காட்டப்பெற்றுள்ள பாடல்கள் பாலகாண்டத்தில் உள்ளவையாகும். அயோத்தியா காண்டத்தில் திருமாலும், இலக்குமியுமே இராமரும் சீதையுமாக வந்துள்ளனர் என்பதைப் பின் வரும் பாடல் உணர்த்துகிறது.

'துறந்துபோம்' எனச் சொற்ற சொல் தேறுமோ
உறைந்த பாற்கடற் சேக்கை உடன் ஒரீஇ,
அறம் திறம்பும் என்று ஐயன் அயோத்தியில்
பிறந்த பின்பும், பிரியலள் ஆயினாள்?''

—அயோத்தியா காண்டம், நகர் நீங்கு படலம்
219ம் பாடல்

''திருமால் உலகிடை அறம்பிறழாமல் காப்பாற்ற வேண்டும் எனக் கருதியே அவதரித்திருக்கிறார். அவரோடு பாற்கடல்ல் உடனாக இருந்த இலக்குமியும் சீதாப்பிராட்டியாகத் தோன்றியிருக்கிறாள். எனவே இராமன் காட்டிற்குப் பிரிந்து செல்வதை அவள் ஆற்ற முடியாதவளாய்னாள்'' என இப்பாடல் கூறுகிறது. பாற்கடல் என்ற சொல்லை இதில் கம்பன் பயன்படுத்தியிருக்கிறான்.முன்னர் கருங்கடல் என்று சொல்லியிருப்பது பாற்கடலைத்தான் என்பது இதிலிருந்து புலனாகிறது.

ஆரணிய காண்டத்தில்,

''கடுத்த கராம் கதுவ, நிமிர் கை எடுத்து மெய்கலங்கி,
உடுத்த திசை அனைத்தினும் சென்று ஒலி கொள்ள
உறுதுயரால்
''அடுத்த பெருந்தனி மூலத்து அரும் பரமே! பரமே!
என்று
எடுத்து ஒரு வாரணம் அழைப்ப, நீயே அன்று
''ஏன்?'' என்றாய்

—ஆரணிய காண்டம்,விராதன் வதைபடலம்
48ம் பாடல்

என விராதன் இராமனை நோக்கித் துதி செய்கிறான். இங்கே கஜேந்திரனுக்கு அருள் புரிந்த திருமால்தான் இராமனாக அவதரித்திருக்கிறான் என்பது பெறப் படுகிறது. அதுமட்டுமல்லாமல் திருமால்தான் மூலப்பரம் பொருள் என்பதை 'மூலத்து அரும் பரமே' என யானை எடுத்துச் சொல்லித் துதிக்கிறது'' என விராதன் கூறுகிறான்.

கிட்கிந்தா காண்டத்தில் அனுமன் பேசுகின்ற பேச்சு இராமன்தான் திருமால் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காட்டுகிறது.

''சங்கு சக்கரக் குறிஉள, தடக்கையில் தாளில்;
எங்கும் இத்தனை இலக்கணம் யாவர்க்கும் இல்லை
செங்கண் விற்கரத்து இராமன் அத்திருநெடுமாலே;
இங்கு உதித்தனன், ஈண்டு அறம் நிறுத்துதற்கு,
இன்னும்''

—கிட்கிந்தா காண்டம், நட்புக்கோட் படலம்
74ம் பாடல்

இப்பாடலில் ''கையில் சங்கு சக்கரக் குறியோடு இருக்கின்ற இராமன் திருமால்தான் என்றும்; அவன்தான் அறம் நிறுத்துவதற்காக இராமனாக உதித்தான்'' என்றும் சொல்லின் செல்வனான அனுமான் மிக நயமாக எடுத்துச் சொல்லுகிறான். சுந்தர காண்டத்தில் இதே அனுமான் இராவணனிடம்,

''காரணம் கேட்டி ஆயின், கடை இலாமறையின் கண்ணும்
ஆரணம் காட்டமாட்டா அறிவினுக்கு அறிவும், அன்னோன்;
போர் அணங்கு இடங்கர் கவ்வ பொது நின்று ''முதலே'' என்ற
வாரணம் காக்க வந்தான் அமரரைக் காக்க வந்தான்'

—சுந்தர காண்டம், பிணிவிட்டு படலம் 79ம் பாடல்

என்று சொல்லுகிறான். கஜேந்திரனின் கதையை எடுத்துக் காட்டி திருமால்தான் இராமன் என்பதை அனுமான் இராவணனுக்கு உணர்த்துகிறான்.

யுத்த காண்டத்தில் நாம் காட்டப் போகும் பாடல்கள் மிக முக்கியமானவை ஆகும். அந்தக் காண்டத்திறுதியில் அதாவது இராமாயணத்தின் இறுதியில் இராமருக்கு முடிசூட்டு விழா முடிந்த பின்னர் விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் இராமன் பரிசில்கள் நல்கி விடைகொடுக்கின்றான். சீதாப் பிராட்டியார் அனுமனுக்கு ஒரு முத்துமாலையைப் பரிசிலாக வழங்குகிறாள். அப்பொழுது கம்பன்,

''பூமலர்த் தவிசை நீத்து பொன் மதில் மிதிலை பூத்த
தேமொழித் திருவை ஐயன் திருவருள் முகத்து நோக்க
பாமறைக் கிழத்தி ஈந்த பரு முத்த மாலை கைக் கொண்டு
ஏமுறக் கொடுத்தாள், அந்நாள், இடர் அறிந்து உதவினாற்கே''

—யுத்த காண்டம், விடைகொடுத்த படலம் 22ம்பாடல்.

எனப் பாடுகிறான். சீதாப் பிராட்டியார் யார்? என்பதை இராமாயணத்தின் இறுதியில் கம்பன் எடுத்துச்

சொல்வது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். தாமரைப் பூவினின்றும் நீங்கி வந்த இலக்குமிதான் சீதாப்பிராட்டி என்பதைக் கம்பன் உறுதிப்படுத்துகிறான்.

இந்நூலில் நாம் காட்டுகின்ற பாடல்களும், பாடல் எண்களும் சென்னைக் கம்பன் கழகப் பதிப்பில் உள்ளவையாகும் அப்பதிப்பின்படி கம்ப இராமாயணத்தில் உள்ள ஆகக்கடைசிப் பாட்டு பின்வருமாறு கூறுகிறது,

'உம்பரோடு இம்பர் காறும், உலகம் ஓர் ஏழும் ஏழும்.
'எம்பெருமானே!' என்று ஏத்தி, ஏத்தி, இறைஞ்சி நின்று,
ஏவல் செய்ய
தம்பியரோடும், தானும், தருமமும், தரணிகாத்தான்
அம்பரத்து அனந்தர் நீங்கி அயோத்தியில் வந்த வள்ளல்
- யுத்தகாண்டம் 'விடை கொடுத்தபடலம் 37ம்பாடல்.

இப்பாடலில் ''அம்பரத்து அனந்தர் நீங்கி அயோத்தியில் வந்த வள்ளல்'' எனக் கம்பன் சொல்லியிருக்கிறான். ''பாற்கடலில் நித்திரை கொண்டிருந்த திருமால், அதனை விட்டு நீங்கி இராமனாக அயோத்திக்கு வந்து பூவுலகைக் காத்தான்'' என்பது இதன் பொருளாகும்.

இராமாயணத்தைத் துவங்கும் பொழுது இராமன் தான் திருமால் எனச் சொன்ன கம்பன், இராமாயணத்தை முடிக்கும் போதும் கடைசிப் பாட்டில் திருமால்தான் இராமன் என்பதைத் திட்டவட்டமாகத் தெளிவுறுத்தியிருக்கிறான்.

இராமாயணத்தின் இடையில் இராமன் மும்மூர்த்திகளாகிய பிரமா, திருமால், சிவன் ஆகிய மூவருக்கும் மேற்பட்டவன் என்றும், பரம்பொருள் என்றும் சொல்லுவது பலர்க்குக் குழப்பத்தை விளைவித்திருக்கிறது.

கம்ப இராமாயண அறிஞர்கள் இதற்குப் பின் வருமாறு சமாதானம் சொல்லுகிறார்கள்:—

"கம்பன் துவக்கத்தில் உலகம் சொல்லுகின்ற முறைப்படியே இராமன்தான் திருமால் எனச் சொல்லி யிருக்கிறான். அது அவன் உலகை எதிர்க்க விரும்ப வில்லை என்பதைக் காட்டுகிறது. பின்னர் படிப்படியே தன் பாட்டுடைத் தலைவனாகிய இராமனை உயர்த்தி விரிந்த பொருளில் அவன்தான் பரம்பொருள் எனச் சொல்லியிருக்கிறான். மும்மூர்த்திகளில் ஒருவனாகத் தன் பாட்டுடைத் தலைவனை அடக்க அவன் விரும்ப வில்லை. சமரச மனப்பான்மையுடன் யாண்டும் வியாபித்து இருக்கின்ற பரம்பொருளே இராமன் என உணர்த்த அவன் எண்ணுகிறான். தன் பாட்டுடைத் தலைவன் மீதுள்ள ஈடுபாட்டால் அவனைக் குறுகிய வட்டத்திற்குள் அடைக்காமல் அவனைப் பரம்பொருளாக்கி எல்லா மதத்தவரும் எல்லா நாட்டினரும் அவனை ஏற்றுக் கொள்ளும்படியாகச் சொல்லியிருக்கிறான். பாட்டுடைத் தலைவனை உயர்த்திச் சொல்லும் உரிமை கவிஞனுக்கு உண்டு."

அறிஞர்களின் மேற்கண்ட சமாதானம் சிறிதுகூடப் பொருத்தமற்றது என்பதை மேலே நாம் காட்டியுள்ள பாடல்கள் இனிதுணர்த்தும். துவக்கத்தில் திருமால் என்று சொன்னவன் படிப்படியாக அவனைப் பரம் பொருளாக்கிய பின்னர் மீண்டும் அவனைக் கீழே தள்ளித் திருமால் எனச் சொல்வது பொருந்துமா? இராமாயணத்தை முடிக்கும் போதும் இராமனைத் திருமால் என்றுதான் கம்பன் சொல்லுகிறான். இடையில் இராமனைப் பரம்பொருள் என்று சொன்ன கம்பன் ஓரிடத்தில் கூடச் சீதாப்பிராட்டியைப் 'பராசக்தி' என்று சொல்லவில்லை. அவளை இலக்குமி என்றே சொல்லுகிறான். இராமாயணத்தின் இறுதியிலும் அவ் வாறுதான் சொல்லுகிறான். உலகத்தாருக்காக அவனைத்

திருமால் என்று ஒத்துக் கொண்ட கம்பன் பரம் பொருளாக அவனை ஆக்கிய பின்னர் கடைசிப் பாட்டில் அவனைப் பரம்பொருள் என்றே சொல்லி முடித்திருக்க வேண்டும். அவ்வாறு சொல்லாமல் இராமன் திருமால் தான், எனச் சொல்லியிருப்பதைப் பார்க்கும் போது அவன் பாட்டுடைத் தலைவனைத் திருமால் என்று சொல்லுவதுதான் மிக உயர்வு எனக் கருதியிருக்கிறான் என்பது தெரிகிறது. எனவே அறிஞர்கள் சொல்லும் சமாதானம் மிகப்போலியானது என்பதைக் கூற வேண்டுவதில்லை.

இராமனைப் பரம்பொருள் என்று சொன்னதற்கும் அவன் மூவர்க்கும் மேற்பட்டவன் என்று சொன்னதற்கும் வேறு காரணங்கள் இருக்க வேண்டும்.

கம்பன் மிகப்பெரிய சிந்தனையாளன். தக்க ஆதார மில்லாமல் இராமன் மூவர்க்கும் மேற்பட்டவன் என்றும் பரம்பொருள் என்றும் சொல்லியிருக்க மாட்டான். நாமாகக் கற்பனை செய்து அவன் பாட்டுடைத் தலைவனை உயர்த்துவதற்காக இப்படிப்பாடியிருக்கிறான் என்று சொல்லுவது நகைப்புக்கு இடமாகும்.

இனி அடுத்து இவ்வாறு கம்பன் சொல்லுவதற்குக் காரணங்கள் யாவை என்பதை அவன் வாக்குகளைக் கொண்டே ஆராய்வோம்.

2. இராமன் திருமால் அல்லன்

சீதாப்பிராட்டியாரை இராவணன் பர்ணசாலையோடு பெயர்த்து எடுத்துக் கொண்டு அசோக வனத்தில் சிறை வைக்கிறான். அவளுக்குப் பாதுகாவலாக அரக்கிமார் பலரை நியமிக்கிறான். அரக்கிமார்களைக் கொண்டு தனக்கு இணங்குமாறு அவளை வற்புறுத்தும்படி செய்கிறான். சீதையின் மனஉறுதிகண்டு அவன் நெஞ்சம் கலங்குகிறான். அசோகவனத்திற்கு வந்து சீதாப் பிராட்டியாரோடு உரையாடத் துவங்குகிறான்.

> 'தேவர் தேவியர் சேவடி கை தொழும்
> தா இல் மூஉலகின் தனி நாயகம்
> மேவுகின்றது, நுன் கண், விலக்கினை
> ஏவர் ஏழையர் நின்னின், இலங்கிழாய்
>
> —சுந்தர காண்டம்,—காட்சிப்படலம் 113ம் பாட்டு

'மூவுலகத்தில் உள்ள யாவரும் உன்னைத் தொழுவர். ஆனால் அந்த உலகங்கள் என் ஆட்சியில் அடங்கியுள்ளன. இந்நிலையில் என்னை நீ விலக்குவது பேதமை ஆகும்.' என்று இராவணன் கூறுகிறான். அப்பொழுது சீதாப்பிராட்டியார் இராவணனிடம் மிகக் கடுமையாகப் பேசத்துவங்குகிறார்.

'அங்கண்மா ஞாலமும், விசும்பும் அஞ்ச வாழ்
வெங்கணாய்!-புன் தொழில் விலக்கி மேற்கொளாய்,
செங்கண்மால், நான்முகன், சிவன் என்றே கொலாம்
எங்கள் நாயகனையும் நினைந்தது?-ஏழை நீ.''
—சுந்தரகாண்டம்,காட்சிப்படலம் 126ம் பாடல்.

இப்பாடல் சீதாப்பிராட்டியாரின் வாக்காக இருப்பதால் மிகவும் சிந்தனைக்குரியதாகும் "இராவணா! பூவுலகமும், விண்ணும் அஞ்சும் வண்ணம் நீ வாழ்கின்றாய். உன் தீய தொழிலை விலக்கிக் கொள்ளுவது நல்லது. திருமால், பிரமா, சிவன் என்று என் நாயகனை நீ நினைப்பாயானால் அஃது உன் அறிவின்மையையே காட்டும்'' என்று பிராட்டி எடுத்துரைக்கிறாள். ''இராமன் சிவனும் அல்லன்; பிரமாவும் அல்லன்; திருமாலும் அல்லன்; அவன் மூவருக்கும் மேற்பட்டவன்; அவனை அம்மூவருள் ஒருவன் என நீ கருதினால் ஏமாந்து போவாய்!'' எனச் சீதாப்பிராட்டியார் உரைப்பது நம் சிந்தனையைக் கிளர்கிறது.

விபீடணனிடம் இராவணன் பேசும்போது 'தான் எவ்வளவு ஆற்றல் உடையவன் என்பதை' விளக்குகிறான்.

''அச்சொல் கேட்டு,' அவன் ஆழியான் என்றனை, ஆயின்
கொச்சைத் துன்மதி எத்தனை போரிடைக் குறைந்தான்?
இச்சைக்கு ஏற்றன, யான் செய்த இத்தனை காலம்
மூச்சு அற்றான் கொல், அம்முழுமுதலோன்? என முனிந்தான்''

—யுத்தகாண்டம், இராவணன் மந்திரப்படலம் 112ம் பாடல்.

''சிவனும், நன்முகத்து ஒருவனும் திருநெடுமாலாம்
அவனும், மற்றுஉள அமரரும், உடன் உறைந்து அடங்க
புவனம் மூன்றும் நான் ஆண்டுளது ஆண்ட
அப்பொரு இல்
உவன் இலாமையினோ? வலிஒதுங்கியோ உரையாய்.''

—யுத்தகாண்டம், இராவணன் மந்திரப்படலம்
114ம் பாடல்.

'விபீடணா! இராமன் திருமால் என்று சொன்னாய்! நான் என் விருப்பத்திற்கு என்னென்னவோ செய்கிறேன். எத்தனையோ போரில் அவன் தோற்றிருக்கிறான். நான் செய்கின்ற செயலைத் தடுக்காமல் மூச்சற்றுப் போய் அவன் இருப்பது உனக்குத் தெரியாதா? சிவனும் பிரமாவும், திருமாலும் தேவர்களும் அடங்கப் புவனம் மூன்றையும் நான் ஆண்டு வருகின்றேன்; அந்தத் திருமால் என்னை ஒன்றும் செய்ய முடியவில்லையே?'' என அவன் வினவுகின்றான். இந்த எண்ணம் இராவணனிடம் ஆழமாகப் பதிந்துள்ளதை ''உலகமும் விண்ணும் என் வசம் உண்டு'' என்று அவன் சொல்லுவதிலிருந்து சீதாப்பிராட்டி உணர்ந்து கொள்கிறாள். அவன் எண்ணத்தைத் தகர்க்க வேண்டும் எனக்கருதிய பிராட்டி ''நீ என் கணவனைத் திருமால் என்று நினைத்தாயா? அவன் மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்டவன்'' எனச் சொல்கிறாள். இந்த உண்மையை இதுவரை இராவணனிடம் யாரும் சொல்லவில்லை. 'இராமன் மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்டவன் என்றால் அவன்தான் பரம்பொருள் என்று அர்த்தம். 'பரம்பொருள் நினைத்தால் உன்னைக் கொன்றுவிடும். மும்மூர்த்திகள் உன்னைக் கொல்ல மாட்டார்கள்; என் நாயகன் பரம்பொருளாதலால் உன்னைக் கொன்றுவிடுவான்.'' இதுதான் சீதாப்பிராட்டியார் இராவணனுக்கு உணர்த்த நினைக்கும் கருத்தாகும்.

பிரமா, திருமால், சிவன் ஆகிய மூவரும் உலகைப் படைத்தும், காத்தும், அழித்தும் வருகின்ற மூர்த்திகள் ஆவர். உலகம் இயங்குவதற்காக இவர்களுள் ஒருவர் கொடுத்த வரத்தை மற்றவர் அழிப்பதில்லை. பிரமாவிடத்தும், சிவனிடத்தும் இராவணன் வரம் பெற்றிருக்கின்றான். அவ்வரங்களைத் திருமால் அழிக்க மாட்டார்; இதனை உணர்ந்தே இராவணன் மூவுலகிலும் தன் மனம் போனவாறு திரிகின்றான்.

சீதாப்பிராட்டியார் இராவணனின் தவறான எண்ணத்தைப் போக்க எண்ணுகிறாள். "இராமன் திருமாலாக இருந்தால் உன்னைக் கொல்ல மாட்டார் என்பது உண்மையே! ஆனால் அவரோ நீ நினைத்துக் கொண்டிருக்கின்ற பிரமா, திருமால், சிவன் ஆகிய மூவருக்கும் மேற்பட்ட பரம்பொருள். ஆதலால் உன்னைக் கொன்றுவிடுவார்" என அவள் இராவணனுக்கு அறிவு தெருட்டுகிறாள். சீதாப்பிராட்டியார் இலக்குமியே என்பதை முன்னர் பல பாடல்களில் கம்பன் கூறியிருக்கிறான். இலக்குமிக்கு நாயகன் திருமால்தான். இங்கே தன் நாயகனாகிய "இராமன் திருமால் அல்லன்," எனச் சொல்வது பலர்க்கு வியப்பை விளைவிக்கும். இதன் உண்மையை இன்னும் பல பாடல்களை ஆராய்ந்த பின்னரே முடிவுகட்ட முடியும் இங்கே சீதாப்பிராட்டி இராமன் திருமாலுக்கு மேற்பட்ட பரம் பொருள் என்று சொல்வதை மட்டும் நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அனுமனும் சீதாப்பிராட்டியார் போலவே இராவணனிடத்தில் பேசியிருக்கிறான். சீதாப்பிராட்டி யாருக்கு அடுத்தபடியாக இராமனைப் பற்றிய உண்மையைப் பேச உரிமை உடையவன் அனுமனே யாவான்.

அனுமன் சீதாப்பிராட்டியாரை அசோகவனத்தில் கண்டு உரையாடினான். அவளிடம் விடைபெற்றான். அசோக வனத்தில் புகுந்து மரங்களைப் பெயர்த் தெறிகிறான். தான் சீதாப்பிராட்டியாரை மட்டும் பார்த்து விட்டுப் போவது சிறப்பாகாது என அவன் கருதுகிறான்.

'வஞ்சனை அரக்கனை நெருங்கி. நெடுவாலால்
அஞ்சினுடன் அஞ்சுதலை தோள் உற அசைத்தே
வெஞ் சிறையில் வைத்தும் இலென்: வென்றும்
இலென்; என்றால்
தஞ்சம் ஒருவர்க்கு ஒருவர் என்றல் தகும் அன்றோ!

—சுந்தரகாண்டம், பொழில் இறுத்த படலம்
3ம் பாடல்

''இராவணனை வெனறு சிறை வைக்கா விட்டால் என் அடிமைத்தனம் என்ன?'' என அவன் குமுறுகிறான். ''அசோக வனத்தை அழித்தால் இராவணனின் ஆட்கள் முதலில் வருவார்கள்; அவர்களைக் கொன்று விட்டால் இராவணனே போருக்கு வருவான். அவன் தலையைச் சிதற அடித்து வெற்றி கொள்ளலாம்.'' என அனுமன் எண்ணுகிறான். இலங்கையில் புகுந்தபோது இராவணனை அவன் மெல்லணையில் தூங்கும் நிலையில் கண்டான். அப்பொழுது அவன் எண்ணிய எண்ணங்கள் வேறு.

'என்று, ஊக்கி, எயிறு கடித்து, இரு கரனும் பிசைந்து
எழுந்து
நின்று ஊக்கி உணர்ந்து உரைப்பான் 'நேமியோன்
பணி அன்றால்;
ஒன்று ஊக்கி, ஒன்று இழைத்தல், உணர்வு உடைமைக்கு
உரித்து அன்றால்,
பின் தூக்கின், இது சாலப் பிழைபயக்கும் எனப் பெயர்ந்தான்.

—சுந்தர காண்டம், ஊர் தேடுபடலம் 221ம் பாடல்.

"என் தலைவன் இவனைக் கொல்லும்படி என்னைப் பணிக்கவில்லை. "ஒன்று ஊக்கி, ஒன்று இழைத்தல்' நியாயமன்று." என அனுமன் எண்ணிப் பின் வாங்குகிறான்.

"இற்றைப் போர்ப்பெருஞ்சீற்றம் என்னோடும் முடிந்திடுக
"கற்றைப் பூங்குழலாளைச் சிறைவைத்த கண்டகனை
முற்றப்போர் முடித்தது ஒருகுரங்கு" என்றால்
முனைவீரன்
கொற்றப் போர் சிலைத் தொழிற்குக் குறை
உண்டாம் எனக் குறைந்தான்.

—சுந்தரகாண்டம்-ஊர் தேடுபடலம் 223ம் பாடல்

"ஒரு குரங்கு இராவணனை முடித்து விட்டது என்றால் அஃது இராமன் வில்லுக்கு இழுக்கு" என்னும் முடிவிற்கு அனுமன் வருகிறான், இராவணனைக் கொல்ல முயலக் கூடாது என்ற முடிவிற்கு வந்த அனுமான் அசோகவனத் ல் புகுந்ததும் தன் எண்ணத்தை மாற்றிக் கொள்கிறான். "இராவணனை வென்றே தீருவேன்" என்று கூறுகிறான். இந்த மாற்றம் ஏற்படக் காரணம் என்ன?

இராவணனைத் தூங்கும்பொழுது அனுமான் காண்கின்றான். அப்போது சீதை எங்கேயிருக்கிறாள் என்னும் விவரம் அவனுக்குத் தெரியாது. சீதையை அசோகவனத்தில் பார்த்ததும் அனுமனுக்கு ஆர்வம் பொங்குகிறது. இராவணனுக்குத் தெரியாமல் சீதையைத்தூக்கிக்கொண்டு போய்விடலாம் என அவன் எண்ணுகிறான். அது வஞ்சகச் செயலெனச் சீதை மறுத்துவிட்டதால் அந்த எண்ணத்தைத் தவிர்க்கிறான் வஞ்சகமாக இல்லாமல் நேரடியாகவே இராவணனை வென்று சீதையைத் தூக்கிக் கொண்டு போய்விடலாம் என்னும் எண்ணம் அவனுக்கு மிகுந்து வருகிறது. தலைவன் பணியாக இல்லாவிட்டாலும் அதனைச்செய்ய வேண்டுவது தன் கடமை என

அவன் கருதுகிறான். இராமனின் விற்சிறப்பிற்காகச் சீதையை அசோகவனத்தில் தவிக்க விடுவது நல்லதன்று என்னும் முடிவிற்கு வருகிறான். இவ்வாறு அவன் முடிவிற்கு வந்தது இராமனிடத்தும், சீதாபிராட்டியாரிடத்தும் அவன் கொண்டுள்ள அளவற்ற ஈடுபாட்டைக் காட்டுவதால் அதனைத் தவறெனக் கூற முடியாது. ஆனால் மற்றொரு செய்தியை இங்கே கூறுகிறான். அது மிகத் தவறான எண்ணம் என்றே நாம் கருத வேண்டியிருக்கிறது.

'கண்ட நிருதக் கடல் கலக்கினென், வலத்தின்
திண்திறல் அரக்கனும் இருக்க ஓர் திறத்தின்
மண்டவு தரத்தவள் மலர்க்குழல், பிடித்து
கொண்டு சிறை வைத்திடுதலில் குறையும் உண்டோ?'

—சுந்தர காண்டம்—பொழில் இறுத்த படலம்4ம் பாடல்

''சீதாபிராட்டியாரை இராவணன் தூக்கிக் கொண்டு வந்ததற்குப் பதிலாக இராவணனின் மனைவியாகிய மண்டோதரியைக் கூந்தலைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து சிறைவைப்பதில் தவறில்லை'' என்னும் எண்ணம் அனுமன் உள்ளத்தில் தோன்றுவது வியப்பாக இருக்கிறது. பதிலுக்குப் பதில் எனச் செயல் செய்வது சிறியோர் மனப்பான்மையாகும். அனுமன் பூர்ண பிரம்மச்சாரி; எல்லாக் கலைகளும் கற்றவன்; பண்பு மிக்கவன். அவன் மண்டோதரியின் கூந்தலைப் பிடித்திழுக்க நினைப்பது சரியான செயலாகாது. இராவணன் செய்த தவறுக்காக அவன் மனைவியைத் தண்டிப்பது நியாயமன்று. பெருங்கற்புக்கரசியாகிய மண்டோதரியைப் பற்றி அனுமன் இவ்வாறு எண்ணியது தவறாகும். கம்பன் இத்தகைய ஒரு பாடலை அனுமான் மேல் ஏற்றிப் பாடாதிருந்திருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும் என விமர்சகர்கள் நினைக்கிறார்கள். ஆனால் கம்பன் அனுமானுக்கு ஏற்பட்ட ஆத்திரத்தையும், துடி துடிப்பையும் காட்டுவதற்கே இப்பாடலைப் பாடியிருக்

கிறான்,'சினம் மிகுந்து விட்டால் பண்புடையோரும் நிலை தடுமாறுவர் என்பதை இப்பாடல் புலப்படுத்துகிறது. மனோதத்துவ அடிப்படையில் கம்பன் இதனைப் பாடியிருக்கின்றானே அன்றி அனுமனுக்கு உண்மையில் அந்த எண்ணம் இல்லையென்பதை நாம் உணரவேண்டும்.

அசோக வனத்தில் அனுமன் புரிந்த அட்டகாசத்தைக் கண்டு அவனைப் பிடிப்பதற்காக இராக்கதர்கள் பலர் வருகின்றனர். சம்புமாலி தலைமையில் படைவருகிறது. பஞ்சசேனாதிபதிகள் வந்து போரிடுகின்றார்கள். இராவணனின் மகனாகிய அக்ககுமாரன் வந்து போரிடுகிறான். எல்லோரும் அனுமானால் கொல்லப்படுகிறார்கள். இறுதியில் இந்திரஜித்து அனுமனைப் பிடிக்க எண்ணிப் போருக்கு வருகிறான். அனுமனைக் கொல்லாது கொண்டு வருமாறு இராவணன் பணித்திருக்கிறான்.

இந்திரஜித் பிரமாத்திரத்தைப் பயன்படுத்திஅவனைக் கட்டி இராவணன் முன் கொண்டு போய் நிறுத்துகிறான். 'இவ்வளவு பேர்களைக் கொன்ற குரங்கு, தேவர்களாலோ மும்மூர்த்திகளாலோ அனுப்பப்பட்டதாக இருக்குமோ? என இராவணன் ஐயப்படுகிறான். அவன் யார்? என்பதைப் பட்டியல் இட்டு வினாவத் துவங்குகிறான்.

'நேமியோ? குலிசியோ? நெடுங் கணிச்சியோ?
தாமரைக் கிழவனோ? தறுகண் பல்தலைப்
பூமி தாங்கு ஒருவனோ? –பொருது முற்றுவான்,
நாமமும் உருவமும் கரந்து நண்ணினாய்!'

'நின்று இசைந்து உயிர் கவர் நீலக் காலனோ?
குன்று இசைத்து அயில் உற எறிந்த கொற்றனோ?
தென் இசைக் கிழவனோ? திசைநின்று ஆட்சியர்
என்று இசைக்கின்றவர் யாருள், யாவன் நீ?'

'அந்தணர் வேள்வியின் ஆக்கி, ஆணையின்
வந்துற விடுத்தது ஓர் வயவெம் பூதமோ?
முந்து ஒரு மலருளோன், 'இலங்கை முற்றுறச்
சிந்து'' எனத் திருத்திய தெறுகண் தெய்வமோ?

'யாரை நீ? என்னை, இங்கு எய்து காரணம்?
ஆர் உனை விடுத்தவர்? அறிய, ஆணையால்
சோர்விலை சொல்லுதி' என்னச் சொல்லினான்.
வேரோடும் அமரர்தம் புகழ் விழுங்கினான்.

—சுந்தர காண்டம்—பிணிவிட்டு படலம் 70,71,72, 73
பாடல்கள்

திருமாலோ? இந்திரனோ? சிவனோ? பிரமாவோ? ஆதிசேடனோ? நீ யார் என முதற் பாட்டில் இராவணன் வினவுகின்றான்.

'உயிர் கவர்கின்ற எமனோ? குன்று எறிந்த குமர வேளோ? அகத்தியனோ? திக்குப்பாலர்களோ? யார் நீ? என இரண்டாம் பாட்டில் கேட்கின்றான். இங்கே முருகனைக் குறிப்பிடுவது ஒரு நயம். "பிராமணர்கள் வேள்வயில் உற்பத்தி செய்தனுப்பிய பூதமோ! பிரமா! "இலங்கையை அழித்துவிடு" எனச் சிருட்டித்து அனுப்பிய தெய்வமோ! யார் நீ? என மூன்றாம் பாட்டில் கேட்கிறான். "யார் என்று சோர்வில்லாமல் சொல்" என ஒரே மூச்சாகப் பலரையும் குறிப்பிட்டுவிட்டு நான்காம் பாட்டில் பேச்சை நிறுத்துகிறான். இதற்கு விடையாக அனுமன் பின்வருமாறு சொல்கிறான்.

'சொல்லிய அனைவரும் அல்லென்; சொன்ன அப்
புல்லிய வலியினோர் ஏவல் பூண்டிலேன்;
அல்லி அமகமலமே அனைய செங்கண் ஓர்
வில்லிதன் தூதன் யான்; இலங்கை மேயினேன்'

'அனையவன் யார்? என அறுதியாதியேல்,
முனைவரும், அமரரும். மூவர் தேவரும்,
எனையவர் எனையவர் யாவர், யாவையும்,
நினைவு அரும் இருவினை முடிக்க நின்றுளோன்;'

'ஈட்டிய வலியும், மேல்நாள் இயற்றிய தவமும் யாணர்க்
கூட்டிய படையும், தேவர் கொடுத்த நல்வரமும்கொட்டிம்
தீட்டிய பிறவும், எய்தித் திருத்திய வாழ்வும் எல்லாம்
நீட்டிய பகழி ஒன்றால், முதலொடு நீக்க நின்றான்;

'தேவரும் பிறரும் அல்லன்; திசைக்களிறு அல்லன்; திக்கின்
காவலர் அல்லன்; ஈசன் கைலை அம்கிரியும் அல்லன்
மூவரும் அல்லன்; மற்றை முனிவரும் அல்லன் எல்லைப்
பூவலயத்தை ஆண்ட புரவலன் புதல்வன் போகலாம்'

—சுந்தரகாண்டம்—பிணிவிட்டு படலம், 74, 75, 76, 77 பாடல்கள்

''நீ சொன்ன அனைவரும் நான் அல்லேன்; வலி குறைந்த அவர்களின் ஏவலில் நான் வரவில்லை. ஒப்பற்ற வில்லையுடைய ஒருவனின் தூதனாக நான் வந்துள்ளேன்!'' என முதல் பாட்டில் மாருதி கூறுகிறான். இராவணன் திருமாலோ? என்று வினவியிருந்தும் கூட நான் குறைந்த வலிவுடைய அவர் ஏவலில் வரவில்லை என அனுமான் சொல்லுவது சிந்தனைக்குரியது. திருமாலே இராமன் எனச் சுக்கிரீவனிடத்தில் சொன்ன அனுமன் இங்கே திருமால் குறைந்த வலியுடையவர் என்று சொல்லுவது எவ்வாறு பொருந்தும்?

அடுத்து, ''அந்த இராமன் யார் என்றால் தேவர்களும் மூவர்களும் செய்ய முடியாத வினையை முடிப்பதற்காக வந்தவன்'' என இரண்டாம் பாட்டில் பேசுகிறான். இங்கே மூவரெனத் திருமாலையும் சேர்த்தே குறிப்பிடுகிறான்.

மூன்றாம் பாட்டில் ''தேவர்கள் உனக்குக் கொடுத்த வரம் எல்லாவற்றையும் ஓர் அம்பால் தவிடுபொடியாக்கக் கூடிய ஒரு தலைவனின் ஏவலில் நான் வந்துள்ளேன்', எனக் கூறுகிறான். இதுவரை இராவணன் சொன்ன

தெய்வங்களின் ஏவலில் தான் வரவில்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறான்.

இராமன் யார்? என்பதை நான்காம் பாட்டில் கூறுகிறான். "அவன் தேவர்களுள் ஒருவன் அல்லன்; திக்கு யானைகளைச் சேர்ந்தவனும் அல்லன்; திக்குக் காவலர்களும் அல்லன்; சிவபெருமானின் கைலைமலையும் அல்லன்; பிரமா, திருமால், சிவன் ஆகிய மூவரும் அல்லன் முனிவரும் அல்லன். உலகத்தை ஆள்கின்ற ஓர் அரசனின் புதல்வன் அவன்' எனத் தன் உரையை முடிக்கிறான்.

இப்பாட்டில் இராமன் அரசகுமாரன் எனச் சொன்னது சரியே! ஆனால் மூவரில் ஒருவராகிய திருமாலும் அல்லன் என அவனைச் சொன்னது சரியாகுமா? இப்படிச் சொன்ன அனுமான் பின்னர் இராவணனிடமே "காரணம் கேட்டியாயின்" என; நாம் முன்னர் காட்டியுள்ள பாடலில் கஜேந்திரனைக் காக்க வந்த திருமால்தான் இராமன் எனச் சொல்லுகின்றான். இது முன்னுக்குப்பின் முரணாகத் தோன்றுகின்றதன்றோ? இவற்றிற்கு எல்லாம் விடை பின்னர் நாம் கண்டறிவோமாக.

சீதையும் அனுமனும் இராவணனிடத்தில் கூறியது போலவே இராவணனும் ஓரிடத்தில் இது பற்றிப் பேசுகின்றான்.

இராவணனுக்கும், இராமருக்கும் கடுமையான யுத்தம் நடக்கின்றது. இராமன் பல்வேறு பாணங்களைப் பயன்படுத்தி இராவணனின் பாணங்களைத் தவிடு பொடி ஆக்குகிறான். இராவணனுக்கு அளவற்ற சினம் உண்டாகிறது அவனிடத்தில் சூலாயுதம் ஒன்று இருக்கிறது. அது வரம்பெற்ற சூலாயுதம். எப்படிப் பட்டவர்கள் மீது எய்தாலும் அஃது அவர்களைக் கொன்றுவிடும். இத்தகைய வரபலம் வாய்ந்த சூலாயுதத்தை இறுதியாக இராமன் மீது இராவணன்

பிரயோகிக்கிறான். உக்கிரத்துடன் அது இராமனை நோக்கி வருகின்றது. இராமன் தன்னிடம் உள்ள பாணங்களை எல்லாம் பிரயோகித்துப் பார்க்கிறான். அவ்வளவையும் அந்த சூலாயுதம் தகர்த்து விடுகிறது. தேவர்கள் திடுக்கிடுகிறார்கள்.

இராமன் சூலாயுதம் நெருங்கியதும் ஒரு செயலும் இல்லாமல் வாளா நிற்கிறான். சூலாயுதம் அவன் மார்பின் உள்ளே புகமுயல்கிறது. அப்பொழுது இராமன் கோபத்தோடு ஊங்காரம் செய்கிறான். சூலாயுதம் சுக்குநூறாகி விடுகிறது.

இந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற இராவணன் திகைத்துப் போகிறான்.

'சிவனோ? அல்லன்; நான்முகன் அல்லன்; திருமாலாம்
அவனோ? அல்லன்; மெய்வரம் எல்லாம் அடுகின்றான்
தவனோ என்னின், செய்து முடிக்கும் தரன் அல்லன்;
இவனோதான் அவ்வேத முதல் காரணன்? என்றான்''

— யுத்தகாண்டம், இராவணன் வதைபடலம் 134ம்பாடல்

''எதிரே நிற்கின்ற இராமன் சிவனாகவோ, பிரமாவாகவோ, திருமாலாகவோ இருக்க முடியாது, வரம் பெற்ற சூலாயுதத்தை அவன் சுக்குநூறாக்குகிறான், மும்மூர்த்திகள் தம்முள் ஒருவர் கொடுத்த வரத்தை ஒருவர் அழிப்பதில்லை. இராமன் அந்த வரத்தைஅழித்திருப்பதால் மும்மூர்த்திகளில் ஒருவனாக அவன் இருக்கமுடியாது. தவம் செய்து ஆற்றல் பெற்று இதனை அழித்திருக்கிறான் எனச் சொல்லவும் இயலவில்லை. அவன் உடம்பு தவம் செய்யும் ஆற்றலுடையதாகக் காணப்படவில்லை. மெய் வரத்தை அழிக்கின்ற இவன் வேதமுதற்காரணனாகிய பரம்பொருளாகத்தான் இருக்கவேண்டும்.'' இவ்வாறு இராவணன் தனக்குள் சிந்தித்து முடிவுக்கு வருகிறான். சீதையும், அனுமனும், ''இராமன் மூவரும் அல்லன்'' எனச்

சொல்லியிருப்பதற்குப் பொருள் அவன் பரம்பொருள் தான் என்று குறிப்பிட்டோம். இராவணன் இங்கே மூவரும் அல்லன் எனச் சொல்லிவிட்டு வேதமுதற் காரண னாகிய பரம் பொருளோ? என வினவுகின்றான். ஆகவே இராமன் மூவராக இல்லாவிட்டால் வேதமுதற் காரண னாகிய பரம்பொருளாகத்தான் இருக்கவேண்டும் என்பது பெறப்படும். இராமனைத் திருமால் அல்லன் எனச் சொல்லிவிட்டுப் பரம்பொருளோ? என் இராவணன் நினைப்பதால் திருமால் வேறு;பரம் பொருள் வேறு எனக் கொள்ள வேண்டியதிருக்கிறது. சூலாயுதத்தை அழித்ததைக் கண்டு இராமன் பரம்பொருள் என இராவணன் முடிவிற்கு வருகிறான்.

''வாலி பெற்ற வரத்தை அழித்தால் அஃது அவ்வரம் கொடுத்த மூர்த்தியை அலட்சியம் செய்ததாகி விடும் எனக் கருதி இராமன் ஒளிந்து நின்று அம்பெய்தான்'' என்பது அறிஞர் சிலரின் கருத்தாகும். பரம்பொருள் இந்தக் கட்டுப்பாட்டை மீறலாம். அப்படிச் செய்தால் இராமன் பரம்பொருள் என்பது உலகிற்குத் தெரிந்துவிடும். இது அவன் எடுத்த அவதாரத்தில் மானிடமாக நிற்கவேண்டும் என்னும் சங்கற்பத்தை உடைத்து விடும். இராமன் தன்னைப் பரம்பொருள் எனக் காட்டிக்கொள்ள விரும்ப வில்லை. மற்ற மூர்த்திகள் கொடுத்த வரபலத்தை மதித்து ஒளிந்து நின்று அம்பெய்திருக்கிறான்.'' என அறிஞர்கள் தம் கருத்திற்கு விளக்கம் தந்திருக்கின்றனர். இராமன் இராவணனின்வரம்பெற்ற சூலாயுதத்தை அழித்துத் தான் பரம்பொருள் என்பதை வெளிப்படுத்தியிருக்கிறான். இதே போல வாலியின் வர பலத்தை அழித்துத் தான் பரம் பொருள் என்பதை நிலைநாட்டுவது எவ்வாறு தவறாகும்? ''வாலிக்கு ஒரு நியாயம்; இராவணனுக்கு ஒரு நியாயம்'' என்பது பொருந்தாது. இதனால்தான் இராமன் ஒளிந்து நின்றதற்குக் காரணம் வேறு என்று கம்பன் சொல்லுகிறான்.

“ஏன் என்னை ஒளிந்து நின்று கொன்றாய்?'' என வாலி வினவுகின்றான். அதற்கு விடையாக இலக்குவன்-

முன்பு, நின் தம்பி வந்து சரண்புக 'முறை இலோயைத்
தென் புலத்து உய்ப்பென்' என்று செப்பினன்: செருவில் நீயும்
அன்பினை உயிருக்கு ஆகி, 'அடைக்கலம் யானும்' என்றி
என்பது கருதி அண்ணல், மறைந்து நின்று எய்தது என்றான்.

—கிட்கிந்தா காண்டம்- வாலிவதைப்படலம் 125ம் பாடல்

பரம்பொருள் என்பதை மறைக்க வேண்டும் என்பதற்காகவோ ஒருவர் கொடுத்த வரத்தை ஒருவர் மதிக்க வேண்டும் என்பதற்காகவோ இராமன் மறைந்து நின்று அம்பு எய்ததாக இலக்குவன் சொல்லவில்லை, இந்த உண்மையை வெளிப்படுத்தக் கூடாது என்பதற்காக இலக்குவன் பொய் சொல்லியிருக்கிறான் என்றுகூட அறிஞர்கள் எழுதுகிறார்கள். இலக்குவன் வாய்மை பிறழாதவன். கம்பனே அவனை 'வாய்மை யாதும் சோர்விலன்' எனக் கூறுகிறான். மேலும் இலக்குவன் கூற்றைக் கேட்டபின் தான் வாலிக்கு ஞானம் பிறக்கிறது. செர்ய்ம்மையிலிருந்து ஞானம் பிறக்கக் கூடாது. வாலி இராமனை நோக்கிக் கேட்ட கேள்விக்கு இலக்குவன் எந்தப் பதிலும் அளிக்காமலே இருந்திருக்கலாம். இத்தகைய ஒரு கேள்விக்குப் பொய் சொல்லித்தான் தப்ப வேண்டுமென்றால் வாலி வாயிலிருந்து இக்கேள்வி எழாத வண்ணம் கம்பன் செய்திருப்பான். இலக்குவன் வாயிலாக உலகிற்கு ஒரு பேருண்மையைக் கம்பன் புலப்படுத்த எண்ணுகிறான். “உன் தம்பி வந்து சரண் புகுந்த போது முறையில்லாதவனாகிய அதாவது பிறனில் விழைந்தவனாகிய உன்னைக் கொல்வதாக என் அண்ணன் வாக்குக் கொடுத்து விட்டான். போரில் நேரில் வந்தால் நீ

என் அண்ணனிடம் சரணாகதி அடைந்து உன் உயிரைக் காப்பாற்ற வேண்டும் எனக் கேட்டால் என்ன செய்வது?' எனக் கருதித்தான் என் அண்ணன் ஒளிந்து நின்று அம்பெய்தான்'' என்பது இலக்குவன் விடையாகும்.

சுக்கிரீவனுக்கு ஏன் இராமன் வாக்குறுதி கொடுத்தான்? 'பிறனில் விழைந்தானுக்கு மன்னிப்பேயில்லை; அவனைத் தண்டித்தே ஆக வேண்டும்'' என்று எண்ணித்தான் இராமன் அந்த வாக்குறுதியை நல்கியிருக்கிறான். ''வாலி சரணாகதி அடைந்து விட்டால் அவனுக்கு மன்னிப்பளிக்க வேண்டிய நிலை ஏற்படும்; பிறனில் விழைந்தானுக்கு மன்னிப்பே கிடையாது என உலகம் உணரவேண்டும்; எனவே வாலி சரணாகதி கேட்க இடமில்லாதபடி இராமன் ஒளிந்து நின்றான்'' என்பது இலக்குவன் விடையின் கருத்தாகும். பிறனில் விழைந்தானுக்கு மன்னிப்பில்லை என்னும் உண்மையை உலகம் உணர வேண்டும் என்பதற்காக இராமன் தனக்குப் பழி வந்தாலும் குற்றமில்லை என எண்ணி ஒளிந்திருக்கிறான். இந்த அருமை சிதைந்து போகுமாறு நாம் காரணங்கள் கூறக்கூடாது. கம்பன் காரணம் சொல்லியிருக்கும் போது நாம் அதற்குமாறாக வேறு காரணம் கற்பிப்பது அவனுக்குப் பெருமை செய்ததாகாது.

எப்படியிருப்பினும் இராமன் இராவணனின் வரபலத்தை உடைத்தெறிந்திருக்கிறானாதலால் அவன் திருமாலாக இருக்க முடியாது; பரம்பொருளாகத்தான் இருக்க வேண்டும்'' என இராவணன் முடிவு கட்டுகிறான். இப்பாடலிலிருந்து திருமால் வேறு, பரம்பொருள் வேறு என்பது தெளிவாகிறது. வைணவப் பெரியார் ஒருவர் திருமால் வேறு; பரம்பொருள் வேறு எனப்பொருள் கொள்வதைச் சகிக்காமல் ''இராவணனின் கூற்றைப் பிரமாணமாக எடுத்துக் கொள்ளக் கூடாது.'' எனக் கூறியிருக்கின்றார். விபீடணன் சொன்னதைத்தான் இராவணன் நினைவுக்குக்

கொண்டு வந்திருக்கிறான் எனக் கம்பன் முந்திய பாட்டில் விளக்கியிருக்கிறான்.

> **'வென்றான்' என்றே உள்ளம் வியந்தான் விடுசூலம்**
> **பொன்றான் என்னின் போகலது' என்னும் பொருள் கொண்டான்**
> **ஒன்று ஆம் உங்காரத்திடை உக்கு, ஒடுதல் காணா**
> **நின்றான், அந்நாள் வீடணனார் சொல் நினைவுற்றான்.**

— *யுத்தகாண்டம் இராவணன் வதைப்படலம் 133ம் பாடல்.*

சூலாயுதம் தவிடுபொடி ஆனதும் விபீடணன் சொன்ன அறிவுரைகள் இராவணன் நினைவிற்கு வருகின்றன. அந்த நினைவுகளைத்தாம் அவன் "சிவனோ அல்லன்; நான்முகன் அல்லன்!" என்னும் பாடலில் வெளிப்படுத்துகின்றான். விபீடணன் சற்பாத்திரம். ஆழ்வார் என்னும் நிலையில் வைத்துப்போற்றப்படுபவன். சற்பாத்திரத்துக்கு இழிவு வரக்கூடாதென்னும் நோக்கில் உண்மைச் செய்திகளைத் தாம் கம்பன் அப்பாத்திரம் வாயிலாக வெளியிடுவான்.

சீதையும் அனுமனும் இராவணனும், ஒரே கருத்தைத் தான் வெளியிட்டுள்ளார்கள். மூவருக்கும் மேற்பட்ட பரம்பொருள் இராமன் என்பதுதான் அந்தக் கருத்தாகும்.

வசிட்ட முனிவன் துவக்கத்திலேயே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளான். இராமனுக்கு முடிசூட்ட வேண்டும் என்று தசரதன் நினைக்கிறான். இதனை வசிட்டனிடம் அவன் தெரிவிக்கிறான். வசிட்டன் இராமனுக்கு முடிசூட்டுவது தக்கதே என்று சொல்லுகிறான்.

> **'புறத்து நாம் ஒரு பொருள் இனிப்புகல்கின்றது எவனோ,**
> **அறத்தின் மூர்த்தி வந்து அவதரித்தான் என்பது அல்லால்**
> **பிறத்து, யாவையும் காத்து, அவைபின் உறத்துடைக்கும்**
> **திறத்து மூவரும் திருந்திடத் திருத்தும், அறத்திறலோன்.**

—*அயோத்தியா காண்டம், மந்திரப் படலம் 36ம் பாடல்.*

''உலகத்தைப் படைத்தும், காத்தும், அழித்தும் வருகின்ற பிரமா, திருமால், சிவன் ஆகிய மூவரும் ஒழுங்கு பிறழாமல் நடக்கும்படி செய்யும் பரம்பொருளே இராமனாக வந்து அவதரித்தது'' என்று வசிட்டன் கூறுகின்றான்.

கம்ப இராமாயணத்தில் ''மூவர்'' எனக் கூறப்படுபவர் யார்? என்பதை இப்பாடலில் கம்பன் விளக்கியிருக்கிறான். வைணவப் பெரியோர்கள் ஆழ்வார் பாசுரங்களில் வரும் ''மூவர்'' என்னும் சொல்லுக்குத் தங்கள் கருத்துக்கு ஏற்றவாறு பொருள் கண்டுள்ளார்கள். திருமால் பெருமைக்கு இழுக்கு வராத இடமாக இருந்தால் ''மூவர்'' என்பவர் பிரமா, திருமால், சிவன் என்னும் மூர்த்திகள் எனக்கூறுவர். திருமால் பெருமைக்கு ஊனம் வருவதாக இருந்தால் ''மூவர்'' என்பவர் பிரமா, சிவன், இந்திரன் என்று கூறுவர். இவ்வாறு பொருள் செய்வது மரபன்று. எவ்விடத்தும் ''மூவர்'' என்பது மும்மூர்த்திகளையே குறிக்கும் இதனைத் தான் கம்பன் ''பிறந்து, யாவையும் காத்து அவை பின் உறத்துடைக்கும் திறத்து மூவரும்'' எனக் கூறுகிறான். படைத்தல், காத்தல், அழித்தலாகிய மூன்று தொழில்களையும் செய்யும் மும்மூர்த்திகள் என்பது இதன் பொருள்.

வசிட்டன் மும்மூர்த்திகளையும் திருத்துகின்ற மூர்த்தி இராமன் எனச் சொல்வதால் அந்த மூர்த்தி மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்டவன் என்பதுதானே புலப்படும்.

திருமால் எனப்படும் இராமன் மும்மூர்த்திகளில் ஒருவராகிய திருமாலுக்கு மேற்பட்டவன் என்பது எவ்வாறு பொருந்தும் என்பதை இனி நாம் ஆராய வேண்டும்.

3. இராமனே பரம்பொருள்

பரம் பொருள் என்பதற்குப் பொருள் யாவற்றிற்கும் மேலானது என்பதாகும். எல்லாக் கடவுளர்க்கும் மேலாய், எல்லா ஆற்றலும் நிறைந்ததாய் யாவற்றுக்கும் மூலமாய் விளங்குகின்ற முழுமுதற் கடவுளே பரம் பொருள் எனக் கூறப்படும்.

கம்பன் இத்தகைய பரம்பொருளுக்கு என்ன பெயரிட்டிருக்கிறான்? என்பதை அவன் வாக்கைக் கொண்டே நாம் தீர்மானிக்க வேண்டும்.

இரணியன் வதைப் படலத்தில் பிரகலாதனின ஆசிரியர் ''இரணியாய நம'' என அவனை ஓதச் சொல்கிறார். அவன் அதற்கு மாறாக ''ஓம் நமோ நாராயணாய நம'' எனச் சொல்கிறான். ஆசிரியர் இதனைக் கேட்டதும் திடுக்கிட்டு, ''இந்தப் பெயரைச் சொல்லலாமா?'' என வினவுகிறார்.

'ஆரைச் சொல்லுவது, அந்தணர் அருமறை அறிந்தோர்,
ஓரச் சொல்லுவது, எப்பொருள், உபநிடதங்கள்
தீரச் சொல் பொருள் தேவரும் முனிவரும் செப்பும்
பேரைச் சொல்லுவது அல்லது, பிறிதும் ஒன்று உளதோ?'

'வேதத்தானும், நல் வேள்வியினானும், மெய் உணர்ந்த
போதத்தானும், அப்புறத்துள எப்பொருளானும்
சாதிப்பார் பெறும் பெரும்பதம் தலைக்கொண்டு
சமைந்தேன்
ஓதிக் கேட்பது பரம்பொருள் இன்னம் ஒன்று உளதோ?

—யுத்தகாண்டம் இரணியன் வதைப்படலம்
29, 30ம் பாடல்கள்.

''உபநிடதங்கள் அனைத்தும் ஒருமுகமாகச் சொல்லும் பெயர்தான் நாராயணன். அதனைத்தான் நான் ஓதச் சொல்லுகிறேன். ஓதுவதற்கு நாராயணனைவிட வேறு பரம்பொருள் ஒன்று உண்டோ?'' எனப் பிரகலாதன் ஆசிரியர்க்கு விடையிறுக்கிறான். நாராயணன்தான் பரம்பொருள் என்பதைப் பிரகலாதன் வாயிலாகக் கம்பன் வெளிப்படுத்துகிறான். இதிலிருந்து திருமாலே பரம்பொருள் என அவன் கருதுகிறான் என்பது தெரிகிறது.

''கஜேந்திரனுக்கு அருள்புரிந்த நாராயணனே 'தனி மூலத்து அரும் பரம்'' என யானை துதிப்பதாக விராதன் பேசுகிறான். ''அரும் பரம்'' என்றால் மூலமாக உள்ள பரம் பொருள் என்று பொருள் இனித் தன் சொந்த வாக்காகத் திருமாலே பரம்பொருள் என்று கம்பன் கூறுகின்ற இடத்தைச் சிந்திப்போம்.

திரு அவதாரப் படலத்தில் இராமன் தம்பிமாரோடு இனிது வீற்றிருப்பதைச் சொல்ல வந்த கம்பன்,

'இப்பரிசு, அணிநகர் உறையும் யாவரும்,
மெய்ப்புகழ் புனைதர, இளைய வீரர்கள்
தப்பு அற அடிநிழல் தழுவி வந்துற,
முப்பரம் பொருளுக்கு முதல்வன் வைகுறும்.''

—பாலகாண்டம்-திருஅவதாரப்படலம் 134ம் பாடல்

எனக் கூறுகிறான்.

இப்பாடலின் ஈற்றடி ''முப்பரம் பொருளுக்கு முதல்வன் வைகுறும்'' என்பதாகும். கம்ப ராமாயணத்தில் வருகின்ற தெய்வங்களில் மிக மேம் பட்டவையாக இருப்பவை பிரமா, திருமால், சிவன் ஆகிய மூன்று தெய்வங்களேயாகும். இவர்கள் மும்மூர்த்தி கள் எனப்படுவர். இந்த மூம்மூர்த்திகளையே கம்பன் இங்கே முப்பரம் பொருள் எனக் குறிப்பிடுகிறான். முப் பரம் பொருளுக்கு முதல்வன் இராமன் என்றால் அவன் அவர்கள் மூவருக்கும் மேலானவன் என நாம் நினைக்க வேண்டி வரும். அவ்வாறு நினைக்கக்கூடாது என்பதற் காகவே அவன்,

'முப்பரம் பொருளிற்குள் முதலை, மூலத்தை
இப்பரம் துடைத்த்வர் எய்தும் இன்பத்தை
அப்பனை, அப்பினுள் அமிழ்தை, தன்னையே
ஒப்பனை, ஒப்பனை உரைக்க ஒண்ணுமோ?

—பாலகாண்டம்—கடிமணப்படலம் 68ம் பாடல்

எனக்கூறுகிறான். இப்பாடல் முப்பரம்பொருளுக்குள்ளே உள்ள மூலமாகிய முதல்வனே இராமன் எனக் கூறுகிறது. பிரமா, திருமால், சிவன் ஆகிய மூவருக்குள்ளே மூலமாக வும், முதலாகவும் இருப்பவன் யார்? என்பதை நாம்இங்கு காணவேண்டும்.

இராமனைத் திருமால் எனப் பல இடங்களில் கம்பன் கூறுகிறான். மும்மூர்த்திகளுக்குள்ளே திருமாலும் ஒருவரா வார். எனவே மும்மூர்த்திகளுக்குள்ளே மூலமாகவும் முத லாகவும் இருப்பவன் திருமால் தான் என்பது இதிலிருந்து தானே புலப்படும். இப்பாடலின் மூன்றாவது அடியில் ''அப்பினுள் அமிழ்தை'' எனக் கம்பன் சொல்லுகிறான். திருப்பாற் கடலில் உள்ள அமிழ்தமாகிய திருமாலையே இவ்வாறு அவன் குறிப்பிடுகிறான். திருமால்தான் மூவருக் குள் மூலப்பரம்பொருள் என்பதை இது உறுதிப்படுத்து கின்றது.

'தன்னையே ஒப்பனை' என்றால் தனக்குத்தானே ஒப்பானவன் என்று பொருள், ''தனக்கு உவமை இல்லாதவன்'' என்பதைத்தான் ''தன்னையே ஒப்பனை'' எனக் கவிநயத்தோடு கம்பன் பேசுகிறான். ''திருமால் தான் பரம்பொருள்; அப்பரம்பொருள்தான் இராமன்'' என்பது இப்பாடல் கூறும் கருத்தாகும்.

இராமனைப் பரம்பொருள் எனக் கம்பன் கூறுவது பாட்டுடைத் தலைவனை உயர்த்துவதற்காக அன்று என்பதை இப்பாடலின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். பாட்டுடைத் தலைவனாகிய இராமன் திருமாலாக இருப்பதாலும் அத்திருமால் பரம்பொருளாக இருப்பதாலும் இராமனைப் பரம்பொருள் என அவன் கூறியிருக்கிறான்.

சிவனைப் பரம்பொருள் எனச் சைவசித்தாந்தம் கூறும். பராசக்தியைப் பரம்பொருள் எனச் சாக்த சித்தாந்தம் சொல்லும். பிரமத்தைப் பரம்பொருள் எனச் சங்கர வேதாந்தம் சொல்லும். திருமாலைப் பரம்பொருள் என வைணவ சித்தாந்தம் மட்டுமே சொல்லும்: வைணவ சித்தாந்தத்தைப் பின்பற்றியே கம்பன் திருமாலாகிய இராமனைப் பரம்பொருள் எனக் கூறியிருக்கிறான்.

திருப்பாற்கடலில் உள்ள திருமால்தான் மூலப் பரம்பொருள் என்றால் ஏனைத் தெய்வங்களாகிய சிவனும், பிரமாவும் துணைப் பரம் பொருள்களாகக் கொள்ளப் படுவர். இம்மூவர்களுள்ளும் தலைவனாக விளங்குவது திருமாலே என்பது வைணவ சமயக் கருத்தாகும்.

இராமனாகிய பரம்பொருள் பிரமாவிற்கும் சிவனுக்கும் மேற்பட்டது என்பது சரியே! திருமாலாகிய இராமன் திருமாலுக்கு மேற்பட்டவன் எனச் சொல்லுவதுதான் பலருக்குக் குழப்பத்தை விளைவிக்கிறது. இவ்வாறு கம்பன் சொல்லுவதும் வைணவ சித்தாந்த

அடிப்படையில்தான் என அறிந்து கொண்டால் எந்தக் குழப்பமும் ஏற்பட இடமில்லை.

வைணவ சித்தாந்தத்தில் திருமாலுக்கு ஐந்து நிலைகள் உண்டு. அவை 1. பரநிலை 2. வியூகநிலை 3. அவதார நிலை 4. அர்ச்சை நிலை 5. அந்தர்யாமியாக நிற்கும் நிலை எனக் கூறப்படும்.

பரநிலை என்பது திருமால் பரமபதத்தில் அதாவது குண்டத்தில் தேவியர் சமேதனாக வீற்றிருக்கும் நிலையாகும். அவன் அங்கிருந்து படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களைச் செய்வதில்லை; அவதாரம் எடுப்பதில்லை. எல்லா ஆற்றலும் நிறைந்தவனாகக்–காலம், இடம், கடந்தவனாக எல்லாக் கடவுளர்க்கும் தலைவனாக நித்திய சூரிகளும், முத்தர்களும் புடைசூழ வீற்றிருந்து அவர்களுக்கு அருள் பாலிப்பதே அவன் தொழிலாகும்.

வியூக நிலை என்பது திருமால் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் நிலையாகும்.

அவதார நிலை என்பது இராமன், கிருஷ்ணன் முதலியோர்களாக அவதாரம் எடுக்கும் நிலையாகும். பாற்கடலில் உள்ள திருமால்தான் அவதாரம் எடுப்பார்.

அர்ச்சை நிலை என்பது எல்லாத் திருக்கோவில்களிலும் விக்கிரக வடிவில் திருமேனி கொண்டிருக்கும் நிலையாகும்.

அந்தர்யாமியாக நிற்கும் நிலை என்பது எல்லாப் பொருள்களினுள்ளும் நிறைந்திருக்கும் நிலையாகும்.

திருமால் எல்லா ஆற்றல்களும் உடையவராதலால் இந்த ஐந்து நிலைகளிலும் ஏககாலத்தில் என்றும் இருப்பார். பரநிலையில் இருக்கும் போது அவரைப் பரம்பொருள் என்றும், பரந்தாமன் என்றும் வைணவம் சொல்லும். அவரையே வியூக நிலையில் பாற்கடல் பெருமான் என அது சொல்லும்.

வியூக நிலையில் உள்ள திருமால் உலகை நடத்துவதற்காகத் தன்னிலிருந்து சிவனையும், பிரமாவையும் தனித் தனியே பிரித்துப் படைத்தல், அழித்தல் தொழில்களைச் செய்யும்படி ஏவிக் காத்தல் தொழிலை மட்டுமே தாம்மேற் கொண்டு அவர்களுக்குத் தலைவனாக விளங்கிக் கொண் டிருப்பார் இத்தொழில்கள் தடையின்றி நிகழ்வதற்காக அத்திருமால் தமக்குத் தாமே சில கட்டுப்பாடுகளை விதித்துக் கொள்வார் இதனைச் சங்கற்பம் என்றுகூறுவர். காலம், இடம் முதலியவற்றைக் கடக்காமல் அவற்றிற்கு உட்பட்டு செயலாற்றுவார். இவ்வாறுசெயலாற்றினாலும் அவரேதான் தலைவராவார். பரநிலையில் உள்ள பெருமான் தம் ஆற்றலை வேண்டும் என்றே குறைத்துக் கொண்டு பாற்கடல் பெருமானாக விளங்குகிறார். இருவரும் பொருளால் ஒருவரே என்பதை மறக்கக்கூடாது. ஆனால் ஆற்றலில் இருவருக்கும் வேறுபாடுண்டு. பரம் பொருள் திருமால், வியூகநிலைத் திருமாலைவிட ஆற்றலில் மேம்பட்டவர் ஆவார்.

திருமால்தான் இராமனாக அவதரித்தார் என்று கம்பன் சொல்லுகிறான். அவதாரம் எடுப்பது பாற்கடல் பெருமானைச் சார்ந்ததாகும். அதனால்தான் பாற்கடலை விட்டு இராமனாகப் பூவுலகில் அவதரித்தான் என்று அவன் பேசுகிறான்.

இராமாவதாரம் பூர்ண அவதாரம் ஆகும். அவன் பாற்கடல் பெருமான் நிலையிலிருந்து அவதரித்திருந் தாலும் இராவணனைச் சங்கரிக்க வேண்டும் என்பதற் காகப் பரம்பொருள் பெருமானின் ஆற்றலைத் தம்முள் வாங்கிக் கொண்டு பிறந்திருக்கிறான்.

சிவன், பிரமா ஆகியோர் இராவணனுக்குக் கொடுத்த வரங்களைத் தவிடுபொடியாக்குவதற்காகவே பாற்கடல் பெருமான் பரம்பொருள் பெருமானின் ஆற்றலை மேற்

கொண்டு இராமனாக அவதரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

இராமனைத் திருமால் எனச் சொல்லும்போது அவதார நோக்கில் அவனைப் பாற்கடல் பெருமானாகக் கம்பன் குறிப்பிடுகிறான். அவன் ஆற்றலை நோக்கிச் சொல்லும்போது பரம்பொருள் திருமால் எனக் கூறுகிறான்.

இரண்டு நிலையிலும் ஒரே பெருமான்தான் என்றாலும் ஆற்றல் வேறுபாடு நோக்கி இராமனை இருவேறு வகையாகக் கம்பன் குறிப்பிடுவது வைணவ சித்தாந்தப்படி பொருத்தமேயாகும்.

சீதையும், அனுமனும், இராவணனும் இராமனின் ஆற்றல் நிலைபற்றியே பேசுவதால் அவர்கள் வாயிலாக மும்மூர்த்திகளுக்கு மேற்பட்டவன் இராமன் எனக் கம்பன் பேசுகிறான். சிவனும், பிரமாவும் பாற்கடல் பெருமானின்றும் பிரிந்து தனித்தனியே செயலாற்றுவதால் பாற்கடல் பெருமானைவிடமிகமிகக் குறைந்த ஆற்றல் உடையவர்களாவர். இந்நிலை பற்றியே இவர்களைத் தாழ்த்தியும், குறைத்தும் வைணவ நூற்கள் பேசும்.

பாற்கடல் பெருமானையும் பரநிலைப் பெருமானையும் வைணவம் வேறுபடுத்திப் பேசுவதில்லை. பொருளால் ஒன்றாக இருப்பதால் இருவரையும் ஒரேவிதமாகவே அவை பெரிதும் பேசும். ‘முப்பரம் பொருளுக்குள் முதலை மூலத்தை’ என்னும்பாடலில் திருப்பாற்கடல் அமுதமாகிய திருமால்தான் மூலப்பரம் பொருள் எனக் கம்பன் சொல்லியிருப்பதும் இவ்வொற்றுமை பற்றியே ஆகும். ஆனால் கம்பன் இராமனின் ஆற்றலை வெளிப்படுத்துவதற்காகச் சில இடங்களில் பரநிலைப் பெருமானுக்கும் வியூகநிலைப் பெருமானுக்கும் வேறுபாடுகாட்டிச் சொல்லியிருக்கிறான்.

வைணவ சித்தாந்தத்தின்படி பரநிலைப்பெருமானை வியூகநிலைப் பெருமானைவிட மேற்பட்டவனாகச் சொல்வதில் தவறில்லை. கம்பன் இந்த அடிப்படையில் தான் இராமனை மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்டவன் எனப் பேசியிருக்கிறான்.

வைணவ சித்தாந்த நுட்பத்தை நாம் தெரிந்து கொண்டால் இராமனைக் கம்பன் சில இடங்களில் பாற்கடல் பெருமான் என்றும் சில இடங்களில் பரநிலைப் பெருமான் என்றும், சில இடங்களில் மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்டவன் என்றும் பேசியிருப்ப தில் எவ்வித முரண்பாடும் இல்லையென்பது புலனாகும்.

வைணவப் பெரியோர் ஒருவர் கம்பன் இராமன் மீது கொண்ட ஈடுபாட்டால் அவனைத் திருமாலுக்கு மேற்பட்டவன் எனச் சொல்லியிருக்கிறானேயன்றி உண்மையில் அவன் திருமால்தான் என்று ஒரு கட்டுரை யில் எழுதியிருக்கிறார். கம்பன் ஓரிடத்தில் கூடத் திருமாலைத் தனியாகக் குறிப்பிட்டு அவரின் மேம்பட்ட வன் இராமன் எனச் சொல்லவில்லை. எப்பொழுது சொன்னாலும் பிரமாவையும், சிவனையும் திருமாலோடு ஒருங்கு வைத்து எண்ணியே அவர்களின் மேம்பட்டவன் இராமன் எனப் பேசுகிறான். அவர்கள் இருவரையும் சேர்க்காமல் திருமாலை மட்டும் தனியாகச் சொல்லியிருந் தால் வைணவப் பெரியோர் சொல்லுகின்ற நயத்தை ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம்.

இராவணன் கூற்றாகக் கம்பன் சொல்லும்போது, ''இராமன் திருமால் அல்லன்; வேதமுதற் காரணன்,'' என வேறுபடுத்திப் பேசிவிட்டதால் பெரியார் சொல்லும் நயம் அடிபட்டுப் போகிறது. மூவரையும் ஒருங்கு வைத்துச் சொல்வதால் வியூகநிலையையே கம்பன் உளம் கொண்டு பேசுகிறான் என்பது தெரிகிறது. அவதார நிலையில் அவன் வியூகநிலைத் திருமாலாக இருந்தாலும்

ஆற்றல் நோக்கில் அவன் பரநிலைத் திருமாலாக விளங்குவதால் மூவரும் அல்லன் எனக் கம்பன் கூறுகிறான். ''அல்லன்'' என்பது இங்கே வியூகநிலைத் திருமாலையே சுட்டுகிறது. ஆற்றல் பற்றிப் பேசுகின்ற இடத்தில் மட்டும்தான் இராமன் மூவரின் மேம்பட்டவன் எனக் கம்பன் சொல்லுகிறான் என்பதை நினைவிலிருத்திக் கொள்ள வேண்டும்.

இலக்குமி பரநிலையிலும், வியூகநிலையிலும் ஒரே விதமாகவே இருப்பவளாதலால் சீதாபிராட்டியைக் கம்பன் இருவேறு வகைப்படுத்திப் பேசவில்லை.

இனிக் கம்பன் சொல்லுகின்ற ஒரு புதிய செய்தியை ஆராயப் போகிறோம். உண்மையில் அது பழைய செய்திதான். ஆழ்வார்கள் அதுபற்றி நிறையப் பேசியிருக்கிறார்கள். ஆனால் திவ்வியப் பிரபந்த உரையாசிரியர்கள் அதனை அடியோடு மறைத்து விட்டனர். எனவே கம்பன் அதுபற்றிப் பேசியிருந்தும் இன்றைய தமிழ் உலகம் அதனை அறியாமலே இருக்கின்றது. இதனாலேயே அதனைப் புதிய செய்தி என்று குறிப்பிடுகிறோம்.

வைணவ சித்தாந்தத்தில் திருமால் உருவத் திருமேனியோடு தான் பரமபதத்தில் வீற்றிருக்கிறார் எனக் கூறப்படுகிறது. பரம்பொருள் திருமாலின் உருவத்தில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதைக் கம்பன் வெளிப்படுத்தியிருக்கிறான்.

இராவணனிடத்தே அனுமன் இராமனின் ஆற்றல் பற்றிப்பேசும் பொழுது பின்வருமாறு கூறுகிறான்:—

'மூலமும் நடுவும் ஈறு இல்லது ஓர் மும்மைத்து ஆய
காலமும் கணக்கும், நீத்த காரணன்—கைவில் ஏந்தி
சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து தொல்லை
ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு
அயோத்தி வந்தான்

—சுந்தர காண்டம்—பிணிவீட்டு படலம் 80ம் பாடல்

'மூலமும் நடுவும ஈறும் இல்லதோர் மும்மைத்தாய காலமும், கணக்கும் நீத்த காரணன்.'' என்னும் அடிகள் பரம்பொருளைக் குறிக்கும். ''அப்பரம் பொருள் சிவ பெருமானுக்குரிய சூலத்தையும் அவன் இருப்பிடமாகிய கைலையையும், திருமாலுக்குரிய சக்கரம், சங்கையும், அவன் இருப்பிடமாகிய ஆல் இலையையும்,பிரமாவுக்குரிய கமண்டலத்தையும் அவனுக்கு இருப்பிடமாகிய தாமரை மலரையும் விட்டு விட்டு இராமனாக அயோத்தி வந்தது'' என இப்பாடலின் பின் அடிகள் இரண்டும் குறிப்பிடு கின்றன.

''யாவர்க்கும் தலைவனாகப் பரப்பொருள் நிலையில் பரமபதத்தில் வீற்றிருக்கும் திருமால் தன் உருவத்தில் சிவனையும், பிரமாவையும் இணைத்துக் கொண்டு மூவுருவும் ஓர்வுருவாய் விளங்குகிறான்.'' என்பதே இவ் வடிகளின் பெருளாகும். பரம் பொருளாகிய திருமால் உடம்பில் இடம் பெற்றதாலேயே சிவனும் பிரமாவும் துணைப் பரம்பொருள்களாகக் குறிப்பிடப்படுகின்றனர்.

வியூக நிலையில் திருமால் சிவனையும், பிரமாவையும் தனியேபிரித்து விட்டுப்படைத்தல், அழித்தல்ஆகியதொழில் களைச் செய்யுமாறு ஏவுகிறார். சங்கார காலத்தில் அவர் கள் இருவரையும் தம்முள் ஒடுக்கிக் கொண்டு ஆலிலையில் பள்ளி கொள்கிறார். பரநிலையில் திருமால் சிவனையும் பிரமாவையும் தம்முள் இணைத்துக் கொண்டு ஓர் உருவாக என்றும் விளங்குகிறார்.

பரநிலைத் திருமால் மூவுருவும் ஓர் உருவாய் விளங்கும் போது அவரோடு இணைந்துள்ள சிவனையும், பிரமா வையும் வைணவம் குறைத்துச் சொல்லுவதில்லை. திருமாலாகவே அவர்களை ஆழ்வார்கள் கருதிப் போற்றிப் பாடி இருக்கின்றனர். வியூக நிலையில் திருமாலை விட்டுப் பிரிந்து நிற்பதால் சிவனையும்

பிரமாவையும் அவர்கள் தாழ்த்தியும், குறைத்தும் பாடி இருக்கின்றனர்.

இப்பரம் பொருள் நிலையை வைத்தே இராமனை மூவுருவும் சேர்ந்த வடிவாகச் சில இடங்களில் கம்பன் பேசி இருக்கிறான். கம்ப இராமாயணத் துவக்கத்திலேயே பரசுராமப் படலத்தில், திருமால்—சிவன் இணைப்புப் பற்றிக் கம்பன் குறிப்பிட்டிருக்கிறான்.

'சிவனுடைய வில் பெரியதா? விஷ்ணுவினுடைய வில் பெரியதா?'' என்னும் விவாதத்தைத் தேவர்கள் கிளப்பி விட்டார்கள் என்றும் அது காரணமாக சிவனுக்கும், விஷ்ணுவுக்கும் போர் நடக்குமாறு பிரமன் செய்து விட்டான் என்றும் கம்பன் கூறுகிறான்.

> **''சீரிது தேவர் தங்கள் சிந்தனை'' என்பது உன்னி**
> **வேரிஅம் கமலத்தோனும், இயைவது ஓர்வினயம் தன்னால்**
> **யாரினும் உயர்ந்த மூலத்து ஒருவர் ஆம் இருவர் தம்மை,**
> **மூரிவெஞ்சிலை மேல் இட்டு, மொய் அமர் மூட்டி விட்டான்**
>
> —பாலகாண்டம்—பரசுராமப்படலம் 28ம் பாடல்

இப்பாடலில் வரும், ''மூலத்து ஒருவர் ஆம் இருவர் தம்மை'' என்னும் தொடர் ஆராய்ச்சிக்குரியது. 'மூல நிலையில் அதாவது பரம்பொருள் நிலையில் சிவனும் திருமாலும் ஒருவராகவே இணைந்து இருக்கின்றனர், வியூகநிலையில் அவர்கள் இருவராகப் பிரிந்திருப்பதை வைத்துப் பிரமன் அவர்களுக்குள் போர் மூட்டிவிட்டான்'' என்பது இப்பாடலின் பின் அடிகள் கூறும் கருத்தாகும். இதிலிருந்து மூல நிலையில் இருவரும் ஒன்றாக இணைந்து நிற்பர் என்பது தெரிகிறது. இங்கே பிரமாவின் இணைப்புப் பற்றிப் பேச வேண்டிய அவசியமில்லாததால் கம்பன் அது பற்றிக் குறிப்பிடவில்லை ''மூலமும்

நடுவும் ஈறும்'' என்னும் பாட்டில் பிரமாவையும் சேர்த்துக் குறிப்பிடுகிறான்.

வைணவப் பெரியார் ஒருவர் ''மூலத்து ஒருவராம் இருவர்'' என்பது இடைச்செருகல் எனக் குறிப்பிட்டிருக் கிறார். ஏட்டுப் பிரதிகள் அனைத்திலும் இப்பாடல் இவ்வாறேதான் இருக்கிறது. இதற்குப் பாட பேதம் காணப்படவில்லை சென்னைக் கம்பன் கழகப் பதிப்பிலும் இப்படியேதான் இருக்கிறது. எனவே இது கம்பன் வாக்கு என்பதில் ஐயமில்லை.

மேலே குறிப்பிட்ட அதே வைணவப் பெரியார், ''மூலமும் நடுவும் ஈறும்'' என்னும் பாடலுக்குத் 'திருமால் அந்தர்யாமியாகச் சிவனுள்ளும், பிரமாவினுள்ளும் இருக் கிறார்; அவ்வொற்றுமை பற்றித் திருமால் அவர்கள் ஆயுதங்களைத் தாங்குகின்றார் என்னும் அவர்கள் இருப்பிடத்தில் உள்ளார்' என்றும் கம்பன் பாடி இருப்பதாகச் சமாதானம் சொல்லியிருக்கிறார். அந்தர் யாமியாக இருப்பது என்றும் உள்ள நிலையாகும். இராமனாக இருக்கும் போதும் திருமால் சிவனுள்ளும், பிரமாவினுள்ளும் அந்தர்யாமியாகத்தான் இருப்பார். அந்நிலையை அவர் எக்காலத்தும் எவ்விடத்தும் விட முடியாது. ஆயுதங்களைத் துறந்தும், இருப்பிடத்தை விட்டும் வருவதாகக் கம்பன் சொல்வதால் அந்தர்யாமி யாக உள்ள நிலையை அவன் குறிப்பிடுகிறான் என்பது பொருந்தாது. புறத்தே உள்ள நிலையைத்தான் அவன் பேசியிருக்கிறான். காலமும், கணக்கும் நீத்த காரண னாகிய பரம்பொருள் புறத்தே தாங்கிக் கொண்டிருந்த சூலத்தையும் சக்கரத்தையும், கமண்டலத்தையும் விட்டு விட்டு இராமனாக வந்திருக்கிறதென்பதுதான் இப்பாடலுக்குரிய பொருளாகும். ஆகவே பரம்பொருள் என்பது ''மூவரும் சேர்ந்த வடிவம்'' என அறிதல் வேண்டும்.

காலமும், கணக்கும் நீத்த காரணன் என்று சொன்னாலே அத்தகையவன் பரம்பொருள் என்பது தானே புலப்பட்டுவிடும். அந்தர்யாமியாகஒற்றுமைபற்றிச் சிவனையும், பிரமாவையும் இங்கே கொண்டுவர வேண்டிய அவசியமில்லை. அனுமன் அவர்களையும் சேர்த்து ஏன் பேசியிருக்கிறான்? என்பதைச் சிந்திக்க வேண்டும். அந்தர்யாமி இருப்பதைச் சொல்வதால் இராவணனுக்கு எந்த அச்சமும் ஏற்படப் போவதில்லை. பரம்பொருள் என்றால்தான் அவனுக்கு அச்சம் உண்டாகும். பிரமாவையும், சிவனையும் சேர்த்துச் சொல்லிருப்பதற்குக் காரணம். பரம்பொருள் இலக்கணம் மூவுருவும் சேர்ந்ததென்பதை உணர்த்துவதற்கேயாகும்.

அனுமன் இராவணனிடத்தே முதலில் 'இராமன் மூவரும் அல்லன்' எனக் கூறுகிறான். அப்புறம் அதனை மாற்றிக் "காரணம் கேட்டியாயின்" என்னும் பாடலில் "திருமாலே இராமன்" எனக் குறிப்பிடுகிறான். அதற்கு அடுத்த பாட்டில் இதனையும் மாற்றிச் "சிவனும், பிரமாவும், திருமாலும் ஒன்று சேர்ந்த வடிவமாகிய பரம்பொருள் இராமனாக வந்திருக்கிறது" என்று கூறுகிறான். இப்படி ஒருவனிடத்தேயே ஒரே சமயத்தில் பாட்டுக்குப்பாட்டு மாற்றிச் சொல்லுவது பாட்டுடைத் தலைவனைச் சிறப்பிப்பதாகவும் ஆகாது; ஈடுபாட்டைக் காட்டுவதாகவும் ஆகாது கேட்பவர்கள் அனுமனுக்குப் பைத்தியமோ? என எண்ண வேண்டியது வரும். வைணவ சித்தாந்தப்படி கம்பன் இராமனை மூன்று வகைப்படுத்திப் பேசியிருக்கிறான் என அறிந்தால்தான் இப்பாடல்களில் உள்ள சிக்கல் அறும்.

மூலமும், நடுவும், ஈறும் என்னும் பாட்டிற்குத் தோற்றுவாயாக அயோத்தியா காண்டத்தில் ஒரு பாடலைக் கம்பன் பாடியிருக்கிறான்.

தந்தையின் மரணச் செய்தி கேட்டுப் புலம்பும் இராமனை வசிட்டமுனிவன் தேற்றுகிறான். அப்பொழுது "காலம் என்பதை மும்மூர்த்திகளும் கடக்க முடியாது" எனத் தெரிவிக்கிறான். இவ்விடத்தில் மும்மூர்த்திகளுக்கும் மேலாக நிற்கும் பரம்பொருள் யாது என்பதை அவன் விளக்குகிறான்.

"சிலமும் தருமமும் சிதைவில் செய்கையாய்!
சூலமும் திகிரியும் சொல்லும் தாங்கிய
மூலம் வந்துதவிய மூவர்க் காயினும்
காலம் என்றொரு வலை கடக்கல் ஆகுமோ?"

—அயோத்தியா காண்டம், திருவடி
சூட்டு படலம் 73ம் பாடல்

சூலம்—சிவபெருமானுக்குரியது. திகிரியாகிய சக்கரம் திருமாலுக்குரியது; வேதம் சொல்லுதல் பிரமாவுக்குரியது; இம்மூன்றையும் தாங்கிய மூலம், அதாவது மும்மூர்த்திகளும் ஒன்று சேர்ந்து நிற்கிற மூலப் பொருளாகிய பரம்பொருள் வந்துதவினாலும் தனித்தனியே உள்ள அம்மூன்று மூர்த்திகளும் காலத்தைக் கடக்க முடியாது" என்பது இப்பாடலின் பொருளாகும்.

வியூக நிலைத் திருமால் தாமே சங்கற்பித்துக் கொண்ட நியதியின்படி காலத்திற்கு கட்டுப்பட வேண்டியவராகிறார். பரம்பொருள் நிலையிலுள்ள திருமால் காலம் கடந்தவர். அவர் வந்து உதவினாலும் நியமித்துக் கொண்ட விதியை யாரும் மீற முடியாதாதலால் "மூவரும் காலத்தைக் கடக்க முடியாது' என இப்பாடல் கூறுகின்றது. மூலப் பொருள் மூவரும் சேர்ந்த நிலையில் இருக்கும் என்பதற்கு இப்பாடல் ஓர் ஆதாரம் ஆகும்.

இன்னொரு பாடல் இக்கருத்தை இன்னும் தெளிவாக விளக்குகிறது. இராமனுக்குத் திருமணம் நடக்கப்

போகிறது. அதற்காக அவன் மார்பில் பூணூலை அணிந்துகொள்கிறான். அவ்விடத்தில்,

"மேவருஞ் சுடர்ஒளி விளங்கும்மார்பின் நூல்
ஏவருந் தெரிந்தினி துணர்மின் ஈண்டெனத்
தேவரு முனிவருந் தெரிக்க லாமுதல்
மூவருந் தானென முடித்த தொத்ததே"

—பாலகாண்டம்—கடிமணப்படலம் 60ம் பாடல்.

எனக் கம்பன் பாடுகிறான்.

பூணூல் மூன்று வடங்களை உடையது. மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து முடிந்துதான் அதனை மார்பில் அணிய வேண்டும். பரநிலையில் பிரமா, சிவன், திருமால் மூவரும் ஒன்றாக இணைந்து நிற்பதுபோலப் பூணூலின் மூன்று வடமும் ஒன்றாக இணைந்து நிற்கிறது என இப்பாடல் சொல்லுகிறது. "அந்தர்யாமிக நிலைபற்றி மூவரும்தான்" எனக் கம்பன் இங்கே குறிப்பிட்டு இருக்கிறான் என்று இன்றைய வைணவ அறிஞர்கள் சமாதானம் சொல்ல முயல்கின்றனர். ஆனால் பூணூல் பற்றி அவன் சொல்வது இதற்கு இடையூறாக இருக்கிறது. பூணூல் மூன்றாக முடிக்கப்பட்டு விளங்குவது போல மூவரும் ஒன்றாக இணைந்து விளங்குகின்றனர் என்றுதான் இப்பாடலுக்குப் பொருள் காண வேண்டியதிருக்கிறது. மூவரும் இணைந்த நிலையில் பரம்பொருள் ஒருருவாக அதாவது தானாக நிற்கிறதென்பதே கம்பன் சொல்லும் கருத்தாகும்.

கவந்தன் துதியில்,

"ஈன்றவனோ எப்பொருளும்? எல்லை தீர் நல்
அறத்தின்
சான்றவனோ? தேவர் தவத்தின் தனிப்பயனோ?
மூன்று கவடுஆய் முளைத்து எழுந்த மூலமோ?
தோன்றி, அருவினையேன் சாபத்துயர் துடைத்தாய்!"

—ஆரணிய காண்டம்—கவந்தன் படலம் 40ம் பாடல்.

என ஒரு பாடல் வருகிறது. அதில் ''மூலம்'' எனப் பரம்பொருள் நிலையை அவன் சுட்டுகிறான். ''மூலமே மூன்று கவடாய் முளைத்துள்ளது'' என்பதால் மூலப் பரம் பொருள் பிரமா, சிவன், திருமால் ஆகிய மூவுருவாய் நிற்கும் என்பது புலனாகிறது. மூலத்திலேயே மூன்று கூறுகள் அமைந்துள்ளதாகச் சொல்வதால் இங்கே அந்தர்யாமிகத் தத்துவத்தைச் சொல்ல இயலாது.

சந்தேகங்கள் அனைத்தும் தீரும் வண்ணம் கம்பன் கிட்கிந்தா காண்டம் கலன் காண்படலத்தில் ஒரு பாடல் சொல்லியிருக்கிறான்.

''முளரிமேல் வைகுவான் முருகன், தந்தை அத்
தளரியல் பாகத்தான், தடக்கை ஆழியான்
அளவி ஒன்று ஆவரே அன்றி—ஐயம் இல்
கிளவியாய்! தனித் தனி கிடைப்பரோ துணை?

—கிட்கிந்தா காண்டம்—கலன் காண் படலம்
17ம் பாடல்.

முளரிமேல் வைகுவான்—பிரமா; முளரி என்றால் தாமரை. முருகன் தந்தை—சிவன். தடக்கையாழியான்—திருமால் ''அளவி ஒன்று என்றால்'' இணைந்து ஒன்று எனப் பொருள்.

''பிரமா, சிவன், திருமால் ஆகிய மூவரும் இணைந்து ஒன்றானால்தான் இராமனாகிய உனக்கு ஈடு; தனித் தனியே பார்த்தால் திருமால் உள்ளிட்ட மூவரும் உனக்கு ஈடில்லை'' என்று சுக்கிரீவன் இராமனைப் பார்த்துச் சொல்லுகிறான். மூவரும் சேர்ந்த நிலை பரம்பொருள் நிலையாதலால் பரம்பொருள் இராமனாகிய உனக்கு அந்நிலைதான் ஈடு'' என்பது சுக்கிரீவன் சொல்லும் கருத்தாகும்.

இராமன் மீது கொண்ட ஈடுபாட்டால் கம்பன் அவனைத் திருமாலைவிட உயர்த்திப் பேசுகிறான் என வைணவ அறிஞர்கள் கூறும் நயம் இந்தப் பாட்டில் அடிபட்டுப் போகிறது. இராமன் பரம்பொருள் என்றால் அவனுக்கு ஈடாக யாரையும் சொல்லக் கூடாது. அவனுக்கு ஒப்பில்லை எனக் கம்பன் முன்னர் பேசியிருக்கிறான். இங்கே தனித்தனி மூர்த்திகள் தாம் இராமனுக்கு ஈடில்லையே ஒழிய மூவரும் சேர்ந்தால் அவனுக்கு ஈடு என அவன் சொல்லுகிறான். பரம்பொருள் நிலையில் உள்ள திருமால் தம் அளவில் எல்லாம் வல்லவர். காலம் இடம் கடந்தவர். அவர் மற்ற இருவரையும் இணைத்துத் தான் வலிமை பெறவேண்டும் என்பது சிறிதும் பொருந்தாது. அந்தர்யாமியாக உள்ள திருமாலால்தான் சிவனும், பிரமனும் இயங்க முடிகிறது. ஆகவே அவர் களைச் சேர்த்துப் பரநிலைத் திருமால் வலிமை பெறுகிறார் என்பது அபத்தம்.

கம்பன் மூவரும் சேர்ந்தால் இராமனுக்கு ஈடு என்று சொல்லும் கருத்தை ஆழ்ந்து சிந்திக்கவேண்டும். தம் இயல்பால் மற்ற இருவரையும் பரநிலைத் திருமால் இணைத்துக் கொண்டிருக்கிறார். அந்நிலை பற்றித் தான் நாம் இங்கே சிந்திக்கவேண்டும்.

கம்பன் பரநிலைத் திருமால் பரம்பொருளாகிய இராமனுக்கு ஈடு எனச் சொல்ல நினைக்கிறான். மூவரும் சேர்ந்த நிலைதான் பரம்பொருள் நிலையாக இருப்பதால் அந்த நிலையைச் சுட்டுவதற்காகவே அம்மூவரையும் சேர்த்துச் சொல்லியிருக்கிறான். அவர்கள் மூவரும் சேர்ந்துள்ள கூட்டு ஆற்றலால் இராமனுக்கு ஈடாகிறார்கள் என்னும் கருத்தில் கம்பன் இங்கே பேசவில்லை. பரநிலை இன்னதுதான் என உணர்த்துவதற்காகவே அவன் இவ்வாறு பேசியிருக்கிறான். பரநிலை எப்படி இருக்கும் என்பதை இப்பாடல்தான் மற்ற பாடல்களை

விட இனிது விளக்குகிறது. இப்பாடலுக்கு வேறு பொருள் கொள்ள முடியாது. வைணவ அறிஞர்கள் இப்பாட்டிற்கு எந்தச் சமாதானமும் சொல்ல முடியவில்லை. ஆகவே பரநிலை என்பது மூவரும் சேர்ந்த நிலைதான் என்பதை நாம் இப்பாடல் வாயிலாக நன்கு அறிந்து கொள்ளலாம். மூவரும் சேர்ந்த நிலைதான் பரம்பொருள் நிலைக்குரிய இலக்கணம் என்னும் அளவில் இப்பாடலை நாம் நோக்கவேண்டும்.

சுக்ரீவன் இராமனால் சகோதரனாக ஏற்றுக் கொள்ளப்பட்டவன். அவனை ஆழ்வார்கள் நிலையில் வைத்து வைணவர்கள் போற்றுகின்றனர். எனவே அவன் வாக்கு தள்ளப்படக்கூடிய ஒன்றன்று என்பதைக் கூறவேண்டுவதில்லை.

இதுவரை கம்பன் இராமனை நான்கு வகையாக வெளிப்படுத்தியிருக்கிறான் என்பதைக் கண்டோம். (1) திருமால் இராமன் அவதாரம் (2) இராமன் திருமாலுக்கு மேற்பட்டவன் (3) இராமன் திருமால் உள்ளிட்ட மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்டவன் (4) இராமன் மும்மூர்த்திகளும் சேர்ந்த பரம்பொருள் வடிவம் இந்நான்கும் ஒன்றுக்கொன்று முரணானவை போலத் தோன்றும். நாம் மேற்காட்டிய வைணவ சித்தாந்தப்படி பார்த்தால் இவற்றில் எந்த முரண்பாடும் இல்லை என்பது புலனாகும். பரம்பொருள் நிலையில் மற்ற இருவரையும் சேர்த்தால் திருமாலுக்கு இழுக்கு எனத் திவ்வியப்பிரபந்த உரை ஆசிரியர்கள் கருதி அதனை மறைத்திருக்கிறார்கள்,

"பரநிலையில் திருமால்தான் தலைவர்; அவர் தன்னில் இருவரையும் இணைத்துக் கொண்டு பரிபூரண சுதந்தரத்தோடு விளங்குகிறார்" என்னும் போது இந்த இழுக்கு அடிபட்டுப்போகிறது.

வைணவ புராணங்கள் அனைத்தும் "முதற்கடவுளர் மூவர்" எனஒருமுகமாகச் சொல்லுகின்றன, "முதலாவார் மூவர்" என ஆழ்வாரும் சொல்லியிருக்கிறார். வைணவ புராணங்கள் திருமாலின் நாபிக் கமலத்தில் பிரமா தோன்றியிருக்கிறார்என்றும்பிரமாவின்தொடையிலிருந்து சிவன் தோன்றியிருக்கிறார் என்றும் சொல்லுகின்றன. இதனாலேயே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரையும் இணைத்துப் பரம் பொருள் நிலை சொல்ல வேண்டிய அவசியம் ஆழ்வார்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆழ்வார்கள் பல இடங்களில் இதுபற்றிக் குறிப்பிடுகிறார்கள். அவற்றை அடுத்த பகுதியில் பார்ப்போம்.

4. ஆழ்வார்கள் கண்ட வைணவ சித்தாந்தம்

பரம்பொருள் திருமாலே என்றும் ஆனால் அவர் பரநிலையில் தன்னோடு சிவனையும், பிரமாவையும் இணைத்துக் கொண்டு ஓர்வுருவாய் விளங்குவார் என்றும் கம்பன் தன் பாடல்களில் இனிது விளக்கியிருப்பதை முன்னர் கண்டோம். அவன் ஆழ்வார்களின் வாக்குகளைப் பிரமாணமாகக் கொண்டே இவ்வாறு பேசியிருக்கிறான்.

ஆழ்வார்களின் வாக்குகளை ஆராயும் முன்னர் அவர்கள் காலத்தில் இருந்த வைணவத்தின் நிலையை நாம் முதலில் தெரிந்து கொள்ளுவது பயனுடையதாக இருக்கும். வைணவம் இருபிரிவுகளாக இன்று இயங்குகிறது. ஒன்று வடகலை வைணவம். மற்றொன்று தென்கலை வைணவம். இரண்டுமே வடமொழி வேதங்களையும், உபநிடதங்களையும் வைணவ புராணங்களையும், இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்களையும் ஆதாரமாக ஏற்றுக் கொள்ளுகின்றன.

வடகலை வைணவம் வேதங்களுக்கும் இதர வடமொழி நூற்களுக்கும் முதன்மை அளிக்கிறது. ஆழ்வார்கள் வாக்குகளை அவற்றிற்கு அடுத்தபடியாகவே அது கொள்கிறது.

தென்கலை வைணவம் ஆழ்வார்களின் வாக்குகளுக்கு முதன்மை அளிக்கிறது. அவற்றிற்கு அடுத்தபடியாகவே வடநூல் ஆதாரங்களை அது ஏற்றுக் கொள்கிறது.

வேதங்கள் சிவனுக்கும் முதன்மை அளிக்கின்றன; திருமாலுக்கும் முதன்மை அளிக்கின்றன. சிவனுக்குரிய 'ஸ்ரீருத்ரம்' வேதத்தில் மிகப் பிரபலமானதாகும். இதே போலத் திருமாலுக்குரிய 'புருஷசூக்தமும்' முக்கியமான தாகும். வேதங்களில் பல்வேறு தெய்வங்களுக்குரிய துதிகள் காணப்படுகின்றன, ஆனால் சிவனும் திருமாலும் அத்தெய்வங்களுக்கு மேற்பட்டவை என அவை கூறுகின்றன.

உபநிடதங்களில் பரம்பொருள் பிரமம் எனப் பேசப் பட்டுள்ளது, சில இடங்களில் உபநிடதம் பிரமப் பொருள் சிவன் எனக் கூறுகிறது; சில இடங்களில் பிரமப்பொருள் நாராயணன் எனக் கூறுகிறது. இவ்வாறு சிவனுக்கும், திருமாலுக்கும் உயரிய இடங்களை அவை அளித்துள்ளன.

வைணவ புராணங்கள் திருமாலுடைய லீலைகள் பற்றியும் அவர் அசுரர்களையும், அரக்கர்களையும் அழித்த நிகழ்ச்சி பற்றியும் கூறுகின்றன. பிரமாவும், சிவனும் அவரை நோக்கித் தவம் பண்ணி வரம் பெற்ற கதைகளையும், சிவனுக்கும், பிரமாவுக்கும் அசுரர்களால் இடையூறு வந்த பொழுது திருமால் சென்று உதவிய நிகழ்ச்சிகளையும் பலவாறாக எடுத்துப் பேசுகின்றன. இப்படிப் பேசினாலும் முதற்கடவுளர் மூவர் என்றும் அவர்களுள் உலகத்தைப் படைப்பவர் பிரமா என்றும், அதனைக் காப்பவர் திருமால் என்றும் அழிப்பவர் சிவன் என்றும் சொல்லுகின்றன. இத்தொழில்களை வேறு எந்தத் தெய்வங்களும் செய்ய முடியாது என்பதனையும் அவை தெரிவிக்கின்றன. திருமாலின் புதல்வர் பிரமா என்றும், பிரமாவின் புதல்வர் சிவன் என்றும் அவை

சொல்லுகின்றன. திருமாலுக்குப் பரத்துவம் கூறுவதில் வைணவ புராணங்கள் முனைப்பாக இருக்கின்றன.

பாரதம் வைணவர்களுக்கு ஒரு முக்கியமான இதிகாசம் ஆகும். அதனை வியாசர் சொல்ல விநாயகப் பெருமான் இமயமலையில் எழுதினார் என்று சைவ நூற்கள் பேசுகின்றன,

வைணவத்தில் விஸ்வக்சேனர் எனப் பேசப்படுபவரும், விநாயகப் பெருமானும் ஒருவரே எனச் சிலர் கருதுகின்றனர். இது தவறாகும். விஸ்வக்சேனர் வைணவத்தைச் சார்ந்தவர். விநாயகர் சைவத்தைச் சார்ந்தவர்.

சைவத்தைச் சார்ந்த விநாயகக் கடவுள்தான் மகாபாரதத்தை எழுதினார் என வில்லி பாரதத்தில்உள்ள காப்புக் கூறுகிறது.

> ''நீடு ஆழி உலகத்து மறை நாலோடு ஐந்து என்று
> நிலை நிற்கவே
> வாடாத தவ வாய்மை முனிராசன் மகாபாரதம்
> சொன்ன நாள்
> ஏடு ஆக வடமேரு வெற்பு ஆகவம்கூர் எழுத்தாணி தன்
> கோடு ஆக எழுதும் பிரானைப் பணிந்து அன்பு
> கூர்வாம் அரோ''

விநாயகர், வியாசர் சொல்லப் பாரதம் எழுதிய கதையை வடமொழியாளர் பின்வருமாறு சொல்லுகின்றனர்:—மாபாரதம் மிகப் பெரிய கதையாதலால் யாரைக் கொண்டு அதனை எழுதச் சொல்லலாம்? என வியாசர் நினைந்து பார்த்தார். விநாயகப் பெருமான்தான் அதனை எழுதவல்லவர் என்னும் முடிவிற்கு அவர் வந்தார். விநாயகரை நோக்கிக் கடும் தவம் இயற்றினார், விநாயகர் அவருக்குப் பிரசன்னம் ஆகி, ''என்ன வரம் வேண்டும்?'' எனக் கேட்டார். ''மாபாரதத்தை நீதான் மேரு மலையை ஏடாகக் கொண்டு எழுத வேண்டும்'' என

அவர் வேண்டினார். இதற்கு விநாயகப் பெருமான் சம்மதித்தார் ஆனால், "ஒரு நிபந்தனை உண்டு" எனக் கூறினார். "என்ன நிபந்தனை?" என வியாசர் ஆவலோடு கேட்டார். "நான் எழுதும்போது ஒரு நிமிடம் கூட நிறுத்த மாட்டேன். அதற்குத் தக்கவாறு நீ தங்குதடையின்றிப் பாரதத்தைச் சொல்லி வரவேண்டும். எங்காவது யோசிப்பதற்காக நிறுத்தினால் நான் அதற்கு மேல் பாரதத்தை எழுத மாட்டேன்" என விநாயகர் சொன்னார். வியாசர் இதனை ஏற்றுக் கொண்டு ஒரு நிபந்தனை விதித்தார். "நான் சொல்லும் வாக்கியங்களை நீ தெளிவாகப் பொருள் விளங்கிக் கொண்டுதான் எழுத வேண்டும்" என்பது அவர் விதித்த நிபந்தனை. விநாயகர் இசைவு தெரிவித்ததும் அவர் பாரதத்தைச் சொல்லத் துவங்கினார்.

விநாயகப் பெருமான் நிறுத்தாமல் விரைந்து எழுதிக் கொண்டு வந்தார். வியாசருக்கு வாக்கியங்களைச் சிந்திக்க வேண்டிய தருணம் வந்தது. விநாயகர், "எழுதுவதை நிறுத்தி விடுவாரே!" எனப் பயந்து ஒன்றுக் கொன்று தொடர்பில்லாத பொருளற்ற வெற்றுரைகளை வாக்கியங்களாகச் சொன்னார். விநாயகர் அவற்றிற்குப் பொருள் விளங்காமல் சிந்தனையில் ஆழ்ந்ததும் இந்த அவகாசத்தை வியாசர் எடுத்துக் கொண்டு உண்மையாக எழுத வேண்டிய வாக்கியங்களை மனத்தில் ஆவாகனப் படுத்திச் சொல்லத் துவங்கினார். இப்படிப் பல இடங்களில் வெற்றுரைகளைச் சொல்லி அவகாசம் எடுத்துக் கொண்டு வியாசர் பாரதத்தைச் சொல்லி முடித்தார்.

விநாயகர் முற்றறிவினராக இருந்தாலும் பக்தனுக்காக சிந்திப்பவர் போல நடித்தார். "இவ்வாறு பாரதம் எழுதி முடிந்தது" எனப் பரம்பரையாக ஒரு கதை வழங்கி வருகிறது. கதை எப்படியிருப்பினும் சைவக் கடவுளாகிய விநாயகர்தான் பாரதத்தை எழுதினார் என்பதைப் பலரும் ஒப்புக்கொள்கின்றனர்.

வியாச பாரதத்தில் அர்ச்சுனனுக்கு அவர் சிவசகஸ்ர நாமத்தைச் சொன்னார் எனக் கூறப்பட்டிருக்கிறது. சிவ சகஸ்ரநாமம் முழுவதும் அதில் வருவதைக் காண்கிறோம். அந்நாமங்கள் சிவனே முழுமுதற்கடவுள் என்பதனைத் தெளிவாக எடுத்தியம்புகின்றன. பாரதத்தில் சிவசகஸ்ர நாமம் இருப்பது இடைச்செருகலென இன்றையவைணவர் சிலர்கூறுகின்றனர். தங்கள் கருத்திற்கு மாறாக ஒன்றிருந்தால்அதனை இடைச் செருகல் எனச் சொல்லுவது இப்பொழுது இயல்பாகிவிட்டது.

பஞ்ச பாண்டவர்கள் சிவ வழிபாடு செய்பவர்களாக இருந்தார்கள் என்பதைப் பாரதம் எந்த ஐயத்திற்கும் இடமின்றிச் சொல்லுகின்றது. அவர்கள் தம் குடும்ப தெய்வமாகச் சிவனை வழிபாடு செய்தார்கள் என்று கூறப்படுவதால், தவம் இயற்றிய அர்ச்சுனனுக்கு வியாசர் சிவசகஸ்ரநாமத்தைச் சொல்லியிருப்பார் என்றே கருத வேண்டியதிருக்கிறது.

பஞ்ச பாண்டவர்கள் சிவ வழிபாட்டில் மிக உறைத்து நின்றவர்கள் என்பதைப் பாரதம் பல இடங்களில் பேசியிருக்கின்றது. வில்லிபாரதத்தில் சொல்லப்பட்டுள்ள பின்வரும் நிகழ்ச்சிகள் இதனை உறுதிப்படுத்தும்.

பாண்டவர்கள் சூதில் நாடு நகரங்கள் அனைத்தையும் தோற்றுவிட்டபின் பன்னிரண்டு வருடங்கள் காட்டிலும் ஒரு வருடம் யாருக்கும் தெரியாமல் நாட்டிலும் வாழ்ந்து வெளியே வந்தால் நாடு நகரங்களைத் திருப்பிக் கொடுப்ப தாகத் துரியோதனன் அவர்களுக்கு வாக்குக் கொடுத்தான். அவன் சொன்னபடி துரோபதையை அழைத்துக் கொண்டு பஞ்சபாண்டவர்கள் காட்டிற்குச் சென்றார்கள். காட்டில் தருமர் மிக மன வருத்தத்தோடு மௌனமாக இருந்தார். வந்தவர்கள் அவருக்கு எவ்வளவோ ஆறுதல் கூறியும் அவர் சாந்தியடையவில்லை. "நாடு நகரங்கள் இழந்ததற்காக நான் வருந்தவில்லை. தருமன் சூதாடினான்

என்று உலகம் சொல்லுமே என்றுதான் வருந்துகிறேன்.'' எனத் தருமபுத்திரர் வந்தவர்கள் அனைவரிடமும் சொல்லிப் பிரலாபித்தார். அவர் ஆறுதல் அடையும் படியாக யாரும் சொல்ல முடியவில்லை. அப்பொழுது வியாச முனிவர் அங்கே வந்தார். தரும புத்திரனின் மன நிலையை அவர் புரிந்து கொண்டார்,

''நீவிரே அல்லீர் முன்னாள் நில முழுதாண்ட நேமி
நாவிரி கீர்த்தியாளன் நளன் எனும் நாம வேந்தன்
காவிரி என்னத் தப்பாக் கருணையான் சூதில் தோற்றுத்
தீவீரி கானம் சேர்ந்த காதை நும்செவிப்படாதோ?''

''தருமபுத்திரா, நீ மட்டும் சூதாடி நாடு நகரங்களைத் தோற்கவில்லை. உனக்கு முன்னரே உலகம் முழுவதையும் ஆண்ட நளன் என்னும் கருணைமிக்க ஓர் அரசன், சூதில் நாடு நகரங்களைத் தோற்றுக் கானகத்திற்குச் சென்றிருக்கிறான். இந்தக் கதை உனக்குத் தெரியாதா?'' என வியாசர் வினவினார். இதனைக் கேட்டதும் தருமபுத்திரனின் மனம் நிம்மதி அடைந்து விட்டது. தனக்கு முன்னரே சூதில் தோற்ற ஓர் அரசன் இருந்திருக்கிறான் என அறிந்ததும் தன்னை மட்டும் உலகம் பழிக்க முடியாது என்பதை அவன் உணர்ந்து கொண்டான். எந்த ஒரு மனிதனும் தனக்கு வந்த துன்பம் போல மற்றவர்களுக்கும் வந்திருக்கிறது எனத் தெரிந்தால் ஆறுதல் அடைவது இயற்கை. எனவே தருமபுத்திரன் நிம்மதியோடு வியாசரிடம் பேசலானான். வயாசர் அவனைப் பார்த்து ''நீங்கள் பன்னிரண்டாண்டு காட்டிலும், ஓராண்டு நாட்டிலும் வாழ்ந்து அதன்பின் போய்த் துரியோதனிடம் நாடு நகரங்களைக் கேட்கப் போகிறீர்கள். அவன் ஒரு போதும் அவற்றைத் திருப்பிக் கொடுக்க மாட்டான். யுத்தம் கட்டாயம் வந்தே தீரும். அந்த யுத்தத்தில் நீங்கள் வெல்வதற்கு வல்லமை மிக்க ஆயுதம் ஒன்றுவேண்டும். அந்த ஆயுதம் சிவபெருமானிடத்

தில்தான் இருக்கிறது. அதற்குப் பாசுபதாஸ்திரம் என்று பெயர் அர்ச்சுனனை இமயமலைச் சாரலுக்கு அனுப்பிச் சிவனை நோக்கித் தவம் செய்யுமாறு நீ கட்டளையிட வேண்டும். அவன் போய்த் தவம் செய்து பாசுபதாஸ் திரத்தைப் பெற்று வருவான்'' என்று கூறினார். தரும புத்திரன் உடனே அர்ச்சுனனைச் சிவனை நோக்கித்தவம் செய்யுமாறு இமயமலைச் சாரலுக்கு அனுப்பி வைத்தான். அங்கே நெருப்பின் நடுவே தனஞ்செயன் நின்று கொண்டு கடுமையான தவத்தைச் செய்தான். சிவபெருமான் அருள் கூர்ந்து அவனுக்குக் காட்சி அளித்தார். அவர் காட்சி அளிப்பதற்கு முன்னர் ஒரு விளையாடலைச் செய்தார். மூகாசுரன் என்பவனைத் துரியோதனன் அர்ச்சுனனிடத்தில் ஏவி அவனைக் கொல்லுமாறு பணித்திருந்தான். அந்த அசுரன் பன்றி வடிவம் எடுத்துக் கொண்டு வந்து அர்ச்சுனன் மீது பாய்ந் தான். சிவபெருமான் அப்பன்றியைக் கொன்று அர்ச்சுனனைக் காப்பாற்ற எண்ணி வேடுவ வடிவத்தில் வில்லும், அம்பும் தாங்கி வந்தார். பார்வதிதேவி வேடுவச்சி வேடம் கொண்டு முருகனைச் சிறுகுழந்தை யாக்கிக் கையில் ஏந்திய வண்ணம் அவர் பின் வந்தாள். பன்றி வடிவில் பாய்கின்ற அசுரனை நோக்கிச் சிவபெருமான் பாணத்தைப் பிரயோகித்தார். அர்ச்சுனன் பன்றி நெருங்கியதும் விழித்துக் கொண்டான். அவனும் உடனே தன் வில்லை எடுத்துப் பன்றி மீது ஒரு பாணத்தை எய்தான். இருவர் அம்பும் பட்டுப் பன்றி இறந்து வீழ்ந்தது. வேடனாக வந்த சிவபெருமான் அர்ச்சுனனை நோக்கி, ''நான் அம்பு எய்த பன்றி மீது நீ எப்படி அம்பெய்யலாம்?'' என வினவினார். அதற்கு அர்ச்சுனன், ''நான் தவம் செய்து கொண்டிருப்பதால் எனக்கு எந்த உணவும் தேவையில்லை; நீ பன்றியை எடுத்துக் கொண்டு போகலாம்,'' என்று சொன்னான். சிவபெருமான் ஏளனமாகச் சிரித்துக் கொண்டு, ''தவம் செய்கின்ற

உனக்குப் பன்றி வந்தது எவ்வாறு தெரிந்தது?'' என்று கேட்டார். அர்ச்சுனன் மிகுந்த சினத்தோடு ''என்னிடம் விவகாரம் செய்தால் உன்னைக் கொன்றுவிடுவேன்; நான் தர்மபுத்திரனுக்கு இளையவரான அர்ச்சுனன் என்பதை நீ தெரிந்து கொள்'' என விடையிறுத்தான். நீ அர்ச்சுனன் என்றால் உன்னுடன் நான் யுத்தம் செய்தே ஆகவேண்டும். எங்கள் குலத்தைச் சார்ந்த ஏகலைவனை நீ பழிவாங்கி யிருக்கிறாய்'' எனச் சிவபெருமான்சொன்னார். இதனைக் கேட்ட அர்ச்சுனன் அவர் மீது பாணத்தை எய்தான். சிவபெருமான் அப்பாணத்தை விலக்கிவிட்டு வேறு ஒரு பாணம் எய்தார். இப்படிச் சிறிது நேரம் இருவருக்கும் யுத்தம் நடந்தது. சிவபெருமான் அர்ச்சுனனின் வில் நாணை அறுத்துவிட்டார். வில் அறுந்ததும் அவன் திகைத்துப் போய் விரைந்து ஓடிவந்து அறுந்த வில்லால் சிவபெருமான் முதுகில் ஓர் அடி அடித்தான். அந்த அடி அர்ச்சுனன் உள்ளிட்ட உலகில் உள்ள எல்லா உயிர்கள் மீதும் பட்டது. இந்நிலையில் அர்ச்சுனனை மல்யுத்தம் புரியுமாறு சிவபெருமான் அழைத்தார். அதுபோல் அவன் அவரோடு மல்யுத்தம் புரிந்தான். சிவபெருமான் அவனைத் தூக்கி ஆகாயத்தில் எறிந்தார். அர்ச்சுனன் தன் முதுகைக் காட்டாமல் நெஞ்சைக் காட்டிக் கொண்டு பூமியில் வந்து விழுந்தான். புறமுதுகு காட்டாத அவன் வீரத்தைச் சிவபெருமான் பாராட்டிவிட்டு மறைந்தார். அர்ச்சுனன் பதைப்போடு எழுந்து பார்த்தான். பார்வதி சமேதராகச் சிவபெருமான் அவனுக்குத் தரிசனம் கொடுத்தார். ''உனக்கு வேண்டும் வரம் யாது?'' என வினவினார், ''யுத்தத்தில் துரியோதனன் முதலியோரை வெல்வதற்குப் பாசுபதாஸ்திரம் வேண்டுமென'' அவன் கேட்டான். அவன் வேண்டியவாறு பாசுபதாஸ்திரத்தை அவனுக்கு வழங்கிவிட்டுச் சிவபெருமான் கைலை சென்றார். இந்த வரலாற்றை வில்லி பாரதத்தில் சொல்லியவாறு இங்கே எழுதியிருக்கிறேன்.

சிவபெருமான் வேடுவ வடித்தோடு பன்றியைத் தேடிப்புறப்பட்ட இடத்தில் வில்லி பின் வருமாறு பாடுகின்றார்.

''ஓர் ஏனம் தனைத்தேட, ஒளித் தருளும் இருபாதத்து
ஒருவன் அந்தப்
போர் ஏனம் தனைத்தேடி, கணங்களுடன் புறப்பட்டான்;
புனங்கள் எல்லாம்
சீர் ஏனல் விளைகிறிக்குத் தேவதைஆம் குழவியையும்
செங்கை ஏந்தி
பார், ஏனை உலகு அனைத்தும் பரிவுடனே
ஈன்றாள் தன் பதி பின் வந்தாள்!',

இப்பாடலில் திருமால் பன்றி வடிவெடுத்துத் தன் அடியைத் தேடியும் அவர்க்கு அதனைக் காட்டாமல் ஒளித்த சிவபெருமான் இப்பொழுது ஒரு பன்றியைத் தேடிப் புறப்பட்டார் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இது சிவபெருமான் முழுமுதற் பொருள் என்பதை உணர்த்துகிறது. வில்லிபுத்தூராழ்வார் வைணவராக இருந்தும் இவ்வாறு பாடியிருப்பது வியப்பைஅளிக்கிறது. வைணவர்கள் சிவபெருமானை முழுமுதற் பொருள் எனக் கூறுவதில்லை. இதனால் சஞ்சலமடைந்த வைணவர்கள் இப்பாட்டின் முதல் அடியைத் திருத்திக் கீழ்வருமாறு சொல்லுகிறார்கள். ''யாரேனும் தனைத்தேட ஒளித்து அருளும் இருபாதத்து ஒருவன்'' என்பது அவர்கள் செய்துள்ள திருத்தம். ஏட்டுப் பிரதிகளில் ''ஓர் ஏனம்'' என்றே இருக்கிறது. ''ஒரு பன்றிக்குத் தன் திருவடியைக் காட்டாத இறைவன் மற்றொரு பன்றியைத் தேடித் திருவடி நோக நடக்கின்றான்'' என்று சொன்னால்தான் பொருள் சிறக்கும். ''யாரேனும் தனைத்தேட' என்பதில் எந்தப் பொருள் நயமும் இல்லை. ஆகவே இத்திருத்தத்தை ஒப்புக்கொள்வதற்கில்லை.

இப்பாடல் ஒரு புறம் இருக்கச் சிவபெருமான் வில்லடிபட்டபோது எல்லா உயிர்கள் மீதும் அதுபட்டது என்னும் செய்தி அவனே வியாகபமாக எங்கும் நிறைந்திருக்கின்ற முழுமுதற் பொருள் என்பதை உணர்த்துகிறது. வில்லியில் உள்ள இப்பகுதியை யாரும் மாற்ற முடியவில்லை. வியாச பாரதத்தில் அர்ச்சுனன் பாசுபதாஸ்திரத்திற்காகத் தவம் செய்த செய்தியும் வில்லடிபட்ட செய்தியும் சிவபரத்துவமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

அபிமன்யுவைக் கொல்வதற்காகத் துரியோதனன் முதலியோர் தம் படையை வியூகம் வகுத்து அவனைத் தன்னம் தனியாக அதன் உள்ளே நுழையுமாறு செய்துவிட்டனர். அபிமன்யு ஒருவனாகப் படையின் நடுவே அகப்பட்டுக் கொண்டு கடுமையாகப் போர் புரிந்தான். அவன் களைப்பதைக் கேள்வியுற்ற பீமன் மிக வேகமாக ஓடிவந்தான். ''பீமன் வந்து போரிட்டால் படை சிதறுண்டு போகுமே!'' என நினைத்த துரியோதனன் கொன்றை மாலையைப் படைகளைச் சுற்றிப் போடும்படி உத்தரவிட்டான். அதுபோல் படையைச் சுற்றிக் கொன்றை மாலையை இட்டு வைத்தனர். படையைச் சிதறடிப்பதற்காக ஓடிவந்த பீமன் கொன்றைமாலையைக் கண்டான்.

> 'இன்று அமரின் யாரும் உயிர்
> பொன்றிடினும், ஈசன் அணி
> கொன்றை கடவேன்' என முன்
> நின்றனன், நராதிபனே,

''யார் இறந்தாலும் சிவபெருமான் அணிந்துள்ள கொன்றை மாலையைக் கடக்க மாட்டேன்'' என்று சொல்லி பீமன் பின் வாங்கினான்.

''என்று, இதழி மாலைதனை
நின்று தொழுது, அன்பினோடு
சென்றனன்—இடும்பனைமுன்
வென்ற திறல் வீமனுமே'

கொன்றை மாலையைத் தொழுதுவிட்டு பீமன் படையினுள் நுழையாமல் திரும்பிச் சென்று விட்டான். இது அவனின் அளவற்ற சிவபக்தியைக் காட்டுகிறது. இந்நிகழ்ச்சி வியாச பாரதத்தில் சொல்லப்படவில்லை. ஆனால் வில்லி, வேறு வடமொழிப் பாரதங்களில் இதனைப் பார்த்திருக்கவேண்டும். ஓர் ஆதாரமுமில்லாமல் அவர் இக்கதையைச் சொல்லியிருக்க மாட்டார். அப்படியே சொல்லியிருந்தாலும் பீமன் அளவற்ற சிவபக்தி உடையவன் என்பதை அறிந்துதான் இதனை அவர் சொல்லியிருப்பார் எனக் கொள்வதில் தவறில்லை. இதிலிருந்து பீமன் சிவ வழிபாடு செய்பவன் என்பது புலனாகும்.

படையின் நடுவே அகப்பட்டுக் கொண்ட அபிமன்யுவைச் சயத்திரதன் கொன்று விட்டான். இதனை அறிந்த அர்ச்சுனன் ''மறுநாள் சூரியன் அஸ்தமிப்பதற்குள் அவனைக் கொன்று விடுவேன்'' என வீர சபதம் செய்தான்.

மறுநாள் பொழுதுக்குள் சயத்திரதனைக் கொல்ல வேண்டுமென்றால் வலிமை மிக்க ஆயுதங்கள் வேண்டும் என்பதைக் கண்ணபிரான் உணர்ந்தார். அவர் அர்ச்சுனனை அழைத்துக் கொண்டு சிவபெருமானிடம் ஆயுதம் பெறுவதற்காகச் சென்றார். போகும் வழியில் அர்ச்சுனன் சிவ பூஜை செய்யவில்லையே? என வருந்தினான். அப்பொழுது கண்ணன்,

'மருவரு கானக மலரினால் எமைப்
பொரு அரு பூசனை புரிதி, ஐய! நீ
இருவரும் ஒருவரே என்பது, இன்று போய்
அருவரை அவன் அடி அடைந்து காண்டியே'

என்று கூறினார். ''என்னை நீ பூசை செய்தால் அப்பூசை சிவபெருமானைச் சென்றடையும். இருவரும் ஒருவரே என்பதனை நீ உணர்வாய்'' என்பது கண்ணன் கூறிய வாக்கின் கருத்தாகும். அதுபோலக் கண்ணனைச் சிவ பெருமானாகப் பாவித்துச் 'சிவாகம' விதிப்படி அர்ச்சுனன் பூசனை செய்தான். பூசை முடிந்ததும் இருவரும் கைலை சென்றார்கள். கைலையில் கண்ணன் மேலிட்ட மலர்கள் சிவபெருமான் மேல் இருப்பதைக் கண்டு அர்ச்சுனன் பேரானந்தம் எய்தினான்.

'கண்ணன் மேல் அணிமலர் அனைத்தும் காய்கனல்
வண்ணன் மேல் காண்டலும், மனம் களிப்புறா
'எணணின் மேல் இரண்டு என இலது' என்று அவ்விறல்
அண்ணல் மேனியும் புளகு அரும்பினான் அரோ.''

''இருவரும் ஒருவரே, மேல் நிலையில் 'இரண்டு' என வேறுபாடில்லை.'' என்பது இப்பாடலின் பொருளாகும். சிவபெருமானிடம் ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டு கண்ணனும் அர்ச்சுனனும் தம் பாசறைக்குத் திரும்பினார்கள் என்று வில்லிபாரதம் சொல்லுகிறது.வில்லிபாரதத்தில் உள்ள இப்பகுதி வைண வர்களுக்குப் பெரும் வருத்தத்தை விளைவித்திருக்கிறது.

அவர்கள் இந்நிகழ்ச்சியை ஒப்புக் கொண்டு, அர்ச்சுனன் கண்ணன் காலில் இட்ட மலர்கள் சிவபெருமான் முடியில் காணப்பட்டதால் கண்ணனே மேலானவன் எனச் சொல்லித் திருப்தி அடைகின்றனர். வில்லி சிவபெருமான் மேல் மலர் காணப்பட்டது என்கிறாரே அன்றி முடிமீது காணப்பட்டதாகச் சொல்ல

வில்லை. அஃது எவ்வாறு இருப்பினும் கீதாஉபதேசம் பெற்ற பின்னரும் அர்ச்சுனன் சிவ பூசை செய்திருக்கிறான் என்பது இதனால் மறுக்க முடியாத உண்மை ஆகிறது.

வியாச பாரதத்திலும் சயந்திரனைக் கொல்லுவதற்காகக் கண்ணனும், அர்ச்சுனனும் கைலை சென்று சிவபெருமானிடம் ஆயுதம் பெற்று வந்தனர் எனச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆழ்வார்கள் காலத்திலிருந்த வியாச பாரதமும் அதனை ஒட்டி எழுந்த வேறு வடமொழிப் பாரதங்களும் சிவபெருமானின் சிறப்பை மிகுந்தெடுத்துக் கூறியிருக்கின்றன. இதனை ஆழ்வார்கள் உருவாக்கிய சித்தாந்தத்தை நாம் ஆராயும் போது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இனி ஆழ்வார்கள் பிரமாணமாகக் கொண்ட வால்மீகி இராமாயணத்தில் வருகின்ற ஒரு பகுதியைக் கவனிப்போம்.

இராமரும், சீதையும் கங்கைக் கரையில் வழிபாடு செய்யும் போது இலக்குவன் எதிரில் இருந்தான். இதனைச் சொல்ல வந்த வான்மீகி, ''பார்வதியும், பரமேஸ்வரனும் வீற்றிருக்க அவர்கள் முன் நந்தி எம் பெருமான் வீற்றிருந்தது போல இலக்குவன் இருந்தான்'' எனக் கூறியிருக்கிறார். ஒப்பிடும் பொழுது உயரிய பொருளைத் தான் கூறவேண்டும். ''பவளம் போல் உதடு'' என்றால் பவளம் உதட்டை விடச் சிவப்பாக இருக்கும் என்பதுதான் பொருள். உபமானம், உபமேயத்தை விடச் சிறப்புடையதாக இருக்கும் என்பது இலக்கண நூல் விதியாகும். இங்கே வால்மீகி காட்டிய உபமானத்தால் பார்வதி, பரமேஸ்வரன் இருவரும் இராமனையும், சீதையையும் விட உயர்ந்தவர்கள் என்றாகி விடுகிறது. உயர்ந்தவர்கள் எனக் கொள்ளத் தயங்கினாலும் இருவரும் சமமானவர்களே என்ற அளவிற்காவது ஒப்புக் கொள்ளத்தான்

வேண்டும். வான்மீகத்தில் சிவபெருமான், "பிறப்பு இறப்பு அற்றவர்" எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இதனையே கம்பன் "ஈறிலான் கைலை" எனக் கூறியிருக்கிறான்.

கோசலை, இராமன் காட்டிற்குப் புறப்படும் போது அவனைக் காப்பாற்ற வேண்டுமெனப் பல தெய்வங்களை வேண்டுகிறாள் என வான்மீகம் சொல்கிறது. அப்பொழுது சிவபெருமானும், முருகப் பெருமானும் இராமனைக் காப்பாற்ற வேண்டும் எனச் சொல்லுகிறாள், பல தெய்வங்களைச் சேர்த்துச் சொன்னாலும் சிவனுக்கும் முருகனுக்கும் உள்ள சிறப்பு இதில் புலனாகவே செய்கிறது.

இராவண சங்காரத்தின் பொருட்டுச் சிவன் அருள் பெற்ற அகத்திய முனிவரிடமிருந்து இராமன் ஆயுதங்களைப் பெற்றான் என வான்மீகம் கூறுகின்றது.

இராமன் இராவணனைக் கொன்ற பிரமகத்தி தீரும் பொருட்டு இராமேஸ்வரத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டான் எனத் தேவாரம் சொல்லுகிறது. ஆனால் வான்மீகி இராமாயணத்தில் வேறு விதமாக இது சொல்லப்பட்டிருக்கிறது.

இராமனும், சீதையும், பரிவாரங்களும் விமானத்தில் அயோத்தி திரும்பும்போது இராமர் சீதையிடம் இராமேசுவரம் நெருங்கியதும், "இவ்விடத்தில்தான் நான் மகாதேவனுடைய அனுக்கிரகம் பெற்றேன்" எனச் சொல்லுகிறார். சேது அணை கட்டுவதற்காக மகாதேவனைப் பூசித்து அருள் பெற்ற இடம் இராமேஸ்வரம் என்பது இதிலிருந்து தெரிகிறது.

இராமாயணத்திற்கு வியாக்கியானம் எழுதிய கோவிந்தராசர் "மகாதேவன்" என்பது வருணனைக் குறிக்கும் எனச் சொல்லுகிறார். வருணனுக்கு மகாதேவன்

என்னும் பெயரில்லை. வான்மீகி பல இடங்களில் சிவபெருமானைத்தான் ''மகாதேவன்' எனக் குறிப்பிடு கிறார். ஆகவே மகாதேவனைப் பூசித்த செய்தியைத்தான் வான்மீகம் சொல்லுகிறது என்பதில் ஐயமில்லை. பிரமகத்தி தீர்வதற்காகப் பூசைசெய்தான் என்று சைவ நூற்களும், சேது அணைகட்டுவதற்காக சிவனைப் பூசை செய்தான் என்று வான்மீகமும் சொல்லுகின்றன. எப்படியோ இராமன் சிவபூசை செய்திருக்கிறான் என்பது இதனால் புலனாகிறது. கம்ப இராமாயணத்தில் இராமன் சிவபூசை செய்த செய்தி விரிவாகப் பல பாடல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் பதிப்பாளர்கள் அத்தனை பாடல்களையும் இடைச்செருகல் எனத் தள்ளி விட்டதால் அவற்றை ஆதாரமாகக் கொண்டு பேசுவதற் கில்லை. வான்மீகத்தைப் பொறுத்த வரையில் பல இடங்களில் சிவபெருமான் போற்றப் பெற்றிருக்கிறார் என்பது தெளிவு.

ஆழ்வார் காலத்திற்கு முன்னே தோன்றிய சங்க நூல்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாகப் போற்றி யிருக்கின்றன. அதியமான் நெல்லிக்கனியை ஔவையாரிடம் கொடுத்ததும் சாவாமை வழங்கக்கூடிய அந்தக் கனியைத் தந்ததற்காக அவனை அவர் பாராட்டுகிறார். ''மணிமிடற்று ஒருவன்போல நீ வாழி' என்று சொல்லுகிறார். ''நஞ்சுண்ட அழகிய கண்டத்தை உடைய ஒப்பற்ற சிவபெருமான் போல வாழ வேண்டும்'' என்பது இதன் பொருள். இதில் வரும் 'ஒருவன் அதாவது ஒப்பற்றவன் எனப் பொருள் தரும் இந்தச் சொல்லைச் சங்க நூற்கள் சிவபெருமானுக்கே வழங்கியிருக்கின்றன.

''மழுவாள் நெடியோன் தலைவனாக' என வரும்' சங்க நூல் அடிகள் சிவபெருமானைத் தலைவன் எனக் குறிப்பிடுகின்றன.

பரிபாடலில் திருமால் மிகவும் சிறந்தெடுத்துப் பேசப் படுகிறார் ''உலகம் முழுவதும் அவரிடமே தோன்றியிருக்

கிறது'' என்றும், ''அவரே முழுமுதற் பொருள்'' என்றும் அது கூறுகிறது. பத்துப்பாட்டு, எட்டுத் தொகை ஆகிய நூற்களை நடுநின்று ஆராய்ந்தால் சிவனுக்கு அவை முதற்சிறப்பும், திருமாலுக்கு அடுத்த சிறப்பும் வழங்கி யிருக்கின்றன என்பது புலனாகும்.

சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவன் வட நாட்டின் மீது படையெடுத்த நிகழ்ச்சி பேசப்பட்டுள்ளது. சிவபெருமானின் திருக்கோவிலில் இருந்து வரப்பெற்ற பிரசாதத்தைத் தலையில் அணிந்து கொண்டு யானை மீதேறிய சேரன் செங்குட்டுவன் போருக்குப் புறப்படு கிறான். அப்பொழுது திருமால் கோவிலில் இருந்து அர்ச்சகர்கள் பிரசாதத்தைக் கொண்டு வந்து கொடுக் கின்றனர். சிரசில் சிவபெருமான் பிரசாதம் இருந்ததால் அதனை வாங்கித் தோளில் அணிந்து கொள்கிறான்.

''தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
ஆங்கது வாங்கி அணிமணி புயத்துத்
தாங்கினனாகி....''

எனச் சிலப்பதிகாரம் பேசுகிறது. சோழ அரசர்கள் சிவபெருமானுக்குப் பெரும் கோவில்களை எழுப்பியிருக் கிறார்கள்; திருமாலுக்கும் பெரும் கோவில்கள் உண்டு. ஆனால் அவை சிவன் கோவில் அளவு எண்ணிக்கையில் பெருகவில்லை. இவ்வாறு ஆழ்வார்களுக்கு முன்னேயிருந்த இந்த நிலையை நாம் சிந்தித்துப் பார்த்தால் சைவததைக் தள்ளக்கூடிய நிலையில் அவர்கள் தம் சித்தாந்தத்தை உருவாக்க முடியவில்லை என்பது தெரியவரும். திருமாலே முழுமுதற் பொருள் என்பதில் அவர்கள் உறுதியாக நின்றார்கள்.

ஆனால் அவர்கள் பிரமாணமாகக் கொண்ட நூற்களே சிவனுக்கு முக்கியத்துவம் அளித்திருப்பதால்

சிவனுக்குத் தகுந்த இடம் கொடுக்க வேண்டும் என அவர்கள் உணர்ந்தார்கள். சிவனுக்கு இடம் கொடுக்கும் போது பிரமாவிற்கும் இடம் கொடுக்க வேண்டும் என அவர்கள் எண்ணினார்கள். அவர்கள் பிரமாணமாகக் கொண்ட புராணங்களும், வேதங்களும் சிவனைப் புகழ்ந்த அளவு நான்முகனைப் புகழா விட்டாலும், ''நான்முகன் வேதத்தை வெளிப்படுத்தியவன்: அவனே வேதத்திற்கு அதிகாரி'' என்றுபேசிஇருக்கின்றன.

இராவணன் முதலிய அரக்கர்கள் பிரமாவிடத்தில் தான் அதிக வரங்கள் பெற்றதாக வான்மீக இராமாயணம் கூறுகிறது. சைவ மதம் சிவனுக்கு முக்கியத்துவம் அளித்தது போல, வேதமதம் பிரமாவிற்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறது. வேதத்தை ஆழ்வார்கள் சிறப்பித்தமை யால் வேதத்திற்கு அதிகாரியாகிய பிரமாவிற்கும் ஒரு சிறப்புக் கொடுக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது. 'திருமால்தான் முழுமுதற்பொருள். அவனே தலைவன்'' என்று கொண்ட ஆழ்வார்சள் பிரமாண நூற்களில் வருகின்ற கருத்துக்களை அமைதிப் படுத்து வதற்காகத் திருமாலுக்கு இரண்டு நிலையை வகுத் தார்கள், இரண்டு நிலையிலும் திருமாலே தலைவன் என்று சொன்னார்கள். கீழ்நிலையில் திருமால் பாற்கடலில் பள்ளிகொண்டு காத்தல் தொழிலை மட்டும் செய்கின்றார் என்றும் தன்னிலிருந்து சிவனையும் பிரமாவையும் பிரித்துப் படைத்தல், அழித்தல் தொழில் களைச் செய்யுமாறு ஏவுகின்றார் என்றும் அவர்கள் கூறினார்கள்.

திருமாலிடமிருந்து தனித்தனியாகப் பிரிந்த சிவனும், பிரமாவும் மிகக் குறைந்த ஆற்றலுடையவர்கள் என்றும் அவர்கள் திருமாலைத் தொழுதுதான் சக்தி பெறு கின்றார்கள் என்றும், சில சமயங்களில் செருக்கால் திருமாலை எதிர்க்கின்றனர் என்றும், அப்பொழுது திருமால் அவர்களை ஒறுத்து அறிவு புகட்டுகிறார்

என்றும் தம் சித்தாந்தத்தை ஆழ்வார்கள் உருவாக்கினார்கள். பிரிந்து நிற்கின்ற பிரமாவையும், சிவனையும் தாழ்த்தியும், குறைத்தும் பேசித் திருமாலின் பரத்துவத்தை நிலை நாட்டினார்கள்.

மேல்நிலையில் அதாவது பரமபதத்தில் இலக்குமி சமேதனாக இருக்கின்ற திருமால் சிவனையும் பிரமாவையும் தன்னோடு இணைத்துக் கொண்டு அதாவது அவர்களைத் தன் உடம்பில் இடம்பெறுமாறு செய்து ஓர்வுருவாய் விளங்குகின்றார் என்றும், அப்பொழுது சிவனையும் பிரமாவையும் திருமாலாகவே கொள்ள வேண்டும் என்றும் அவர்களைப் போற்ற வேண்டுமேயன்றித் தாழ்த்தக் கூடாது என்றும் ஆழ்வார்கள் சொன்னார்கள். இவ்வாறு இருவகையாகத் திருமால் நிலையை வகுத்துக் கொண்டால் தாங்கள் பிரமாணமாகக் கொண்ட நூற்களில் வரும் கருத்துக்களுக்கு அமைதி உண்டாகும் என அவர்கள் கருதினார்கள். மேலும் அவர்களின் அருளனுபவமும் இதற்குத் துணை செய்திருக்கிறதென நாம் கருதுவதில் தவறில்லை. இவ்வாறு அவர்கள் வகுத்த சித்தாந்தத்தை அவர்களுக்குப் பின்னே வந்த வைணவ ஆச்சாரியார்களும் திவ்ய பிரபந்த உரையாசிரியர்களும் அடியோடு மறைத்து விட்டார்கள். ஆழ்வார்கள் பாடல்களுக்கு வலிந்தும், நெகிழ்ந்தும் உரை கண்டு இந்தக் கருத்தை மறுத்தார்கள். ‘‘திருமாலே இரண்டு நிலையிலும் தலைவன்; பரநிலையில் சிவனும் பிரமாவும் அவனோடு ஒன்றாகவில்லை; மூவரும் சேர்ந்த ஒன்று என்பது வைணவத்திற்குப் புறம்பான கருத்து; சிவனும் பிரமாவும் சில சமயங்களில் செருக்குடையவர்களாக நடந்து கொண்டதால் அவர்களைத் தாழ்த்தியும் குறைத்தும் பேச உரிமையுண்டு; அவர்கள் இருவருக்கும் எந்த மதிப்பும் அளிக்கக்கூடாது’’ என்னும் கருத்தில் பின் வந்த ஆச்சாரியார்களும் திவ்வியப் பிரபந்த உரையாசிரியர்களும் தம் சித்தாந்தத்தை உருவாக்கினார்

கள். இதில் அருளனுபவம் இருப்பதாகத் தெரியவில்லை. மூர்த்திகளைப் பொறுத்த வரையில் ஆழ்வார்கள் சித்தாந்தத்திற்கும் ஆச்சாரியார்கள் சித்தாந்தத்திற்கும் வேறுபாடு உண்டு.

இன்றைய வைணவர்கள் ஆழ்வார்கள் கண்ட சித்தாந்தத்தை ஆராயாமல், ஆச்சாரியார்கள் கண்ட சித்தாந்தத்தையே தம் கொள்கையாகக் கொண்டுள்ளனர். கம்பன் திவ்வியப்பிரபந்த உரையாசிரியர்களுக்கு முற்பட்டவன்; ஆதலால் ஆழ்வார்கள் வாக்குகளுக்கு நேரே பொருள் கண்டு அப் பொருளைத் தம் பாடல்களில் அமைத்திருக்கிறான். இனி ஆழ்வார்கள் பாடல்களையும் உரையாசிரியர்களின் கருத்துக்களையும் ஒப்பு நோக்கி நாம் ஆராய்வோமாக:

பொய்கை ஆழ்வார் தம் திருவந்தாதியில்

'முதலாவார் மூவரே; அம்மூவ ருள்ளும்
முதலாவான் மூரிநீர் வண்ணன் – முதலாய
நல்லான் அருளல்லால் நாமநீர் வையகத்துப்
பல்லார் அருளும் பழுது.'

என்று பாடியிருக்கிறார். இவர் சொன்ன கருத்தையே நம்மாழ்வார்,

தேவர் முனிவர்க் கென்றும் காண்டற் கரியன்
மூவர் முதல்வன்; ஒரு மூ வுலகாளி
தேவன் விரும்பி யுறையும் திருநாவாய்
யாவர் அணுகப் பெறுவார்? இனியந்தோ;

எனக் கூறியுள்ளார்.

"உலகிற்கு முதற்கடவுளர் மூவர்; அவர்களுள் தலைவனாக இருப்பவன் திருமால்" என்பது பொய்கையாழ்வார் பாடலின் கருத்தாகும்.

"முதலாவார் மூவரே" என ஒருங்கு வைத்து எண்ணுவதால் மூவரும் கடவுளரே என்பது பெறப்படும். திவ்யபிரபந்த உரையாசிரியர்கள் சிவனும், பிரமாவும்

ஆன்மாக்கள் என்றும் திருமால் ஒருவரே கடவுள் என்றும் எழுதியுள்ளனர். சிவனும் பிரமாவும் ஆன்மாக்களாக இருந்தால் அவர்களோடு ஒருங்கு வைத்துத் திருமாலையும் எண்ணி மூவரையும் முதல்வர்கள் எனச் சொல்வது பொருந்தாது. திருமால் ஒருவனே முதல்வன் என்ற அளவோடுதான் ஆழ்வார் பேசியிருக்க வேண்டும். இப் பாட்டிற்குக் கம்பன்தான் சரியான பொருளைச் சொல்லுகின்றான். ‘முப்பரம் பொருளனுக்குள் முதலை மூலத்தை’’ என்பது அவன் வாக்கு. மூவரையும் பரம்பொருளாகவே அவன் கொள்கிறான், பரம்பொருள் என்று சொல்லிவிட்டதால் சிவனையும் பிரமாவையும் ஆன்மாக்கள் எனச் சொல்வதற்கு இடமில்லாமற் போகிறது. திருமாலே மூலப் பரம்பொருள் என்றும், சிவனும் திருமாலும் துணைப்பரம்பொருள்கள் என்றும் கம்பன் கூறுகின்றான்.

ஓர் அரசாங்கத்தில் பத்து அமைச்சர்கள் இருந்தால் அவர்களுள் ஒருவரே முதலமைச்சர் என்று கொள்வது போல ஆழ்வார் சொல்லியுள்ளார். ஒருவர் முதலமைச்சர் என்றால் ஏனையோர் துணை அமைச்சர்கள் என்பது தானே பெறப்படும். முதலாவான் மூரிநீர் வண்ணன் என்றால் ஏனையோர் துணைமுதல்வர்கள் என்பது தானே புலனாகும்.

மூவரில் திருமால் முதல்வன் என்பதை ஆழ்வார்கள் பல பாடல்களில் பாடியிருக்கிறார்கள்.

‘யாவருமாய் யாவையுமாய் எழில்வே தப்
பொருள்களுமாய்
மூவருமாய் முதலாய மூர்த்தியமர்ந் துறையுமிடம்
மாவரும் திண் படை மன்னை வென்றி கொள்வார்
மன்னு நாங்கை
தேவரும் சென்றிறைஞ்சு பொழில் திருத் தேவனார்
தொகையே!

—திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி,

'மூவரில் முன் முதல்வன் முழங்தார் கடலுள் கிடந்து
பூவலர் உந்தி தன்னுள் புவனம் படைத் துண்டுமிழ்ந்த
தேவர்கள் நாயகனைத் திருமாலிருஞ் சோலை நின்ற
கோவலர் கோவிந்தனைக் கொடியேரிடை கூடுங்
கொலோ?'

—திருமங்கையாழ்வார்—பெரியதிருமொழி

'மூவரில் முதல் வனாய
ஒருவனை, யுலகங் கொண்ட
கோவினைக் குடந்தை மேய
குருமணித் திரளை இன்பப்
பாவினைப் பச்சைத் தேனைப்
பைம் பொன்னை, யமரர் சென்னிப்
பூவினைப் புகழும் தொண்டர்
என் சொல்லி புகழ்வர் தாமே?

—திருமங்கையாழ்வார், திருக்குறுந்தாண்டகம்

மேற்கண்ட பாடல்களிலிருந்து பிரமா, சிவன், திருமால் மூவரும் கடவுளரே என்றும் அவர்களுள் முதல்வன் திருமால் என்றும் ஆழ்வார்கள் கொண்டிருக்கிறார்கள் என்பது புலனாகும். பிரமாவும் சிவனும் ஆன்மாக்களாக இருந்தால் இவ்வாறு பல இடங்களில் ஆழ்வார்கள் அவர்களை ஒருங்கு வைத்துப் பேசியிருக்க மாட்டார்கள்.

இப்பாடல்கள் ஒருபுறம் இருக்கத் திருமால் உடலில் சிவனும் இடம் பெற்று இருவரும் ஒன்றாக இசைந்து இருக்கிறார்கள் என்பதை ஆழ்வார்கள் தம் பாடலில் உணர்த்தியிருக்கிறார்கள். பிரமாவும் திருமாலோடு சேர்ந்திருக்கிறார் என்பதை வேறு பல பாடல்களில் அவர்கள் உணர்த்தியிருக்கிறார்கள். கம்பன் பரம்பொருள் நிலைபற்றிப் பேசுவதற்கு இத்தகைய பாடல்கள்தாம் ஆதாரமாக இருந்திருக்கின்றன.

'தாழ்சடையும் நீண் முடியும் ஒண் மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் – சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து'

—பேயாழ்வார் — திருவந்தாதி

திருப்பதியில் உள்ள வேங்கடாசலபதியின் திருமேனி பற்றி இப்பாடல் பேசுகிறது. அத்திருமேனியில் தாழ் சடையும், ஒளி பொருந்திய மழுவும், பாம்பும் உடைய சிவபெருமான் ஒருபக்கமும் நீண்ட முடியும் சக்கரமும், பொன் நாணும் உடைய திருமால் ஒரு பக்கமுமாகச் சேர்ந்து இரண்டுருவும் ஒன்றாய் இருக்கும் என்று இது கூறுகிறது. இப்பொழுதுள்ள திருப்பதி வேங்கடாசலபதி யின் திருவுருவம் இவ்வாறு இல்லை. பரநிலையில் உள்ள திருவுருவையே வேங்கடாசலபதியின் மீதேற்றி ஆழ்வார் இவ்வாறு பாடியிருக்கிறார். பாற்கடல் பெருமான் தன் உடம்பினின்றும் சிவனைப் பிரித்து விடுவதால் இப்பாடல் வியூக நிலைபற்றிப் பேசவில்லை என்பது தெளிவு. இதனால் பரநிலை வடிவத்தையே ஆழ்வார் நினைந்து பாடியிருக்கிறார் எனக் கொள்ள வேண்டியதிருக்கிறது.

சைவத்தில் சங்கர நாராயணர் வடிவம் என்று ஒன்று சங்கர நயினார் கோவிலில் இருக்கிறது. இதுபோல நாராயண–சங்கர வடிவம் இதன் கண் எடுத்துப் பேசப் படுகிறது. திவ்வியப்பிரபந்த உரையாசிரியர்களுக்கு இப்பாடல் மிகவும் சங்கடத்தை விளைவித்திருக்கிறது.

சிவபெருமான் திருமால் உடம்பில் இடம்பெற வேண்டுமென்று நெடுங்காலம் தவம் செய்தார் என்றும் அத்தவத்திற்கு இரங்கித் திருமால் சிவனைத் தன் உடம்பில் சிலகாலம் இருக்கும்படி ஏற்றுக் கொண்டார் என்றும் உரையாசிரியர்கள் சொல்லுகிறார்கள். சிவன் தவம்

செய்து திருமால் உடம்பில் சிலகாலம் இருக்கின்ற பாக்கியத்தைப் பெற்றிருக்கிறார் என்றே வைத்துக் கொள்வோம். ''சிலகாலம்'' என்பது எவ்வளவு ஆண்டு களைக் குறிக்கும் என்பதை உரையாசிரியர்கள் குறிப்பிட வில்லை. ஆழ்வார்கள் காலத்தில் இரண்டுடம்பும் ஒன்றாக இசைந்திருந்ததால்தான் அவர்கள் அதுபற்றிப் பாடியிருக்கிறார்கள். திவ்வியப்பிரபந்த உரையாசிரி யர்கள் காலத்தில் திருமால் உடம்பை விட்டுச் சிவன் நீங்கி விட்டான் என்று கொண்டாலும் ஆழ்வார்கள் வணங்கி ஏற்றுக்கொண்ட அத்திருவுருவ அமைப்பை நாமும் இன்று ஏற்றுக் கொண்டு வழிபட்டால்தானே அவர்களுக்குச் சிறப்புச் செய்ததாக இருக்கும்? இருவுருவும் ஓர்வுருவாய் இசைந்த திருமேனியை நமக்கு ஏன் அவர்கள் அறிவுறுத்த வேண்டும்? நம் காலத்தில் அத்திருவுரு அவ்வாறு இல்லா திருக்குமானால் ஆழ்வார் அதனை எடுத்துணர்த்தியிருக்க வேண்டிய அவசியமில்லை.

சில காலம்தான் திருமால் உடம்பில் சிவன் இடம் பெற்றிருக்கிறான் என உரையாசிரியர்கள் சொல்லுவது எவ்வளவு போலியானது என்பதைப் பின் வரும் பாடல் இனிதுணர்த்துகிறது.

'பொன்திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்—என்றும்
இருவரங்கத் தால் திரிவ ரேலும் ஒருவன்
ஒருவன் அங்கத் தென்றுமுளன்'

—பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி

'இப்பாடலில் சிவபெருமானைப் 'பொன் திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியன்' என்று ஆழ்வார் கூறுகிறார். ''புரிசடையாம் புண்ணியன்'' என்று கூட ஒரு பாட பேதம் உண்டு. அது உரையாசிரியர்களுக்குப் பிடிக்கவில்லை. ''அம்புண்ணியன்'' என்னும் தொடரையே

அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்பாடலில் பொன் மேனியுடைய சிவபெருமானும் உலகம் அளந்த திருமாலும் இரண்டு உடம்பு கொண்டு திரிந்தாலும் ஒருவர் உடம்பில் ஒருவர் என்றும் இருப்பர் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு திருமேனியோடு தனித்தனியே திரிவது வியூக நிலையில் உள்ளதாகும், பரநிலையில் ஒருவர் உடம்பில் ஒருவர் என்றும் இருக்கிறார் என ஆழ்வார் சொல்லுகிறார். இப்பாடலை நிரல் நிறையாகப் பொருள் கொள்ள வேண்டும். முதலில் வரும் 'ஒருவன்' என்பது பொன் திகழும் மேனியையுடைய சிவபெருமானைக் குறிக்கும். பின்வரும் 'ஒருவன், என்பது திருமாலைக் குறிக்கும். சிவபெருமான் திருமால் உடம்பில் என்றும் இருக்கிறார் என்பது இதன் பொருளாகும். ''என்றும்'' எனச் சொல்லியிருப்பதால் சிலகாலம்தான் சிவபெருமான் திருமால் உடம்பில் இருப்பார் என்று உரையாசிரியர்கள் சொல்லுவது அடிபட்டுப் போகிறது இங்கே உரையாசிரியர்கள் ''என்றும்'' என்பதற்கு நீண்ட காலம் என்று பொருள் கொண்டிருக்கிறார்கள். ''என்றும்'' என்பது நீண்டகாலம் என்னும் பொருளில் வராது. எப்பொழுதும் இருப்பதைத்தான் அது குறிக்கும். உரையாசிரியர்கள் சொல்வது போல நீண்ட காலம் எனக் கொண்டாலும் என்றும் இருப்பது போன்ற ஒரு நீண்ட காலத்தையே அது குறிக்கும். அப்படியானால் இன்றும் அவர்கள் இருவரும் அவ்வாறுதான் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அங்கம் என்பதை ''உடம்பு'' எனக் கொள்ளாமல் அதனை ஆகுபெயராக்கி உயிரைக் குறிக்கிறது என வைத்துக் கொள்வோம். அப்படிக் கொண்டால் சிவபெருமானாகிய உயிர் திருமால் உயிரில் என்றும் இருக்கும் எனப்பொருள் கொள்ள வேண்டியது வரும். திருமால்தான் சிவபெருமான் உயிருக்குள் அந்தர்யாமியாக என்றும் இருக்கிறார் என்று வைணவம் சொல்லும், சிவபெருமான் திருமால்

உயிருக்குள் அந்தர்யாமியாக இருக்கிறார் என்பது சைவத்திற்குப் பொருந்துமேயன்றி வைணவத்திற்குப் பொருந்தாது. ஆகவே ''அங்கம்'' என்பதற்கு உடல் என்று தான் பொருள் கொள்ள வேண்டும். உரையாசிரியர்கள் என்னதான் வலிந்தும், நெகிழ்ந்தும் பொருள் கொண்டாலும் திருமால் உடம்பில் சிவபெருமான் என்றும் இடம்பெற்றிருக்கிறார் என்பதை மறுக்க முடியாத அளவு இப்பாடல் பேசுகிறது.

திருமால் உருவில் சிவபெருமான் இடம்பெற்றிருப்ப தால்தான் ''என்றும் உளன்'' என்று பேசிய ஆழ்வார் பின்வரும் பாடலில் இந்நிலையை இன்னும் வலியுறுத்திச் சொல்லுகிறார்.

'ஏற்றான், புள் ஊர்ந்தான்; எயிலெரித்தான் மார்விடந்தான்
நீற்றான், நிழல்மணி வண்ணத்தான்—கூற்றொருபால்
மங்கையான், பூமகளான்; வார்சடையான் நீண்முடியான்
கங்கையான், நீள்கழலான் காப்பு,

—பொய்கையாழ்வார், முதல்திருவந்தாதி

இப்பாடலில் ஏற்றான் என்பது 'இடபத்தை வாகனமாகக் கொண்டவன்' என்று பொருள்தரும். ஆகவே ஏற்றான், எயிலெரித்தான், நீற்றான், கூற்றொரு பால் மங்கையான், வார்சடையான், கங்கையான் என வருவன சிவபெருமானைக் குறிக்கும். புள் ஊர்ந்தான், மார்விடந்தான், நிழல்மணி வண்ணத்தான், பூமகளான், நீண்முடியான், நீள்கழலான் என வருவன திருமாலைக் குறிக்கும். இருவரும் சேர்ந்த நிலை நமக்குக் காப்பு என்று ஆழ்வார் பேசுகிறார்.

இருவரும் சேர்ந்து காக்க வேண்டும் என்று சொல்வதால் பரநிலையில் உள்ள பரமபதப் பெருமானையே இங்கே ஆழ்வார் குறிப்பிடுகிறார்.

இப்பாடலுக்கு உரையாசிரியர்கள் விநோதமாக ஒரு பொருள் கண்டிருக்கிறார்கள். ஏற்றானும், கங்கையானுமாக இருக்கின்ற சிவபெருமானுக்கு நீண்முடியும், நீள் கழலுமுடைய திருமால் காப்பு என அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சிவபெருமானுக்குத் திருமால் காப்பாக இருப்பதை ஆழ்வார் நமக்கெடுத்து உணர்த்த வேண்டிய அவசியம் இல்லை. இருவரும் சேர்ந்து நம்மைக் காக்க வேண்டும்என்னும் நோக்கில்தான் அவர் பேசிஇருக்கிறார். சிவனுக்குத் திருமால் காப்பு என்பது கருத்தானால் இவ்வாறு இரண்டிரண்டாகச் சொல்லாமல் கங்கையானுக்கு நீள்கழலான் காப்பு என ஒருவரியில் சொல்லியிருப்பார். அடுத்த பாட்டில்,

'காப்புன்னை யுன்னக் கழியும் அருவினைகள்
ஆப்புன்னை யுன்ன அவிழ்ந்தொழியும்—மூப்புன்னைச்
சிந்திப்பார்க் கில்லை திருமாலே நின்னடியை
வந்திருப்பார் காண்பர் வழி''

—பொய்கையாழ்வார். முதல் திருவந்தாதி

எனக் கூறுகிறார்.

முன்பாட்டில் சிவபெருமானுக்குத் திருமால் காப்பு என்றும் பின்பாட்டில் நமக்குத் ''திருமால் காப்பு'' என்றும் இன்றைய வைணவர்கள் இவ்விரண்டு பாடல்களுக்கும் பொருள் கொள்ள முயல்கின்றனர். முன்பாட்டில் வரும் இருவரும் சேர்ந்த நிலை திருமால் நிலையாகவே கொள்ளப்படும். இதனாலேயே பின்பாட்டில் ''திருமாலாகிய நீ காப்பு'' எனச் சொல்லப்பட்டுள்ளது. இரண்டு பாட்டிலும் நமக்குத் திருமால்தான் காப்பு என்றும் பின்னைப்பாட்டில் திருமால் காப்பால் அருவினைகள் ஒழியும் என அக் காப்பின் பயன் விரித்தும் பேசப்பட்டிருக்கிறது. எப்படியிருந்தாலும் இரண்

டிரண்டாகச் சொல்லிக் "காப்பு" எனச் சொல்லுவதால் அவர்கள் இருவரும் சேர்ந்து நமக்குக் காப்பு என்பது தான் உண்மையான பொருளாக இருக்கமுடியும்.

இதே முறையில் பொய்கையாழ்வார் இன்னொரு பாடல் பாடியிருக்கிறார்.

> "அரன். நாரணன் – நாமம்; ஆன்விடை புள் ஊர்தி
> உரைநூல்; மறை; உறையும் கோயில்—வரைநீர்;
> கருமம் – அழிப்பு, அளிப்பு; கையது வேல் நேமி
> உருவம் எரி, கார்; மேனி ஒன்று."
>
> —பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி.

"பெயர் சிவன் என்றும் நாரணன் என்றும் கூறப்படும்; வாகனம் இடபம் என்றும் கருடன் என்றும் கூறப்படும். நூல் ஆகமம் என்றும் வேதம் என்றும் சொல்லப்படும். மலை நீர் இரண்டும் இருப்பிடம் எனச் சொல்லப்படும். அழித்தலும், அருளலும் தொழில் என்று சொல்லப்படும். கையில் உள்ளது வேல் என்றும், சக்கரம் என்றும் கூறப்படும். உருவம் எரி என்றும், "கார்" என்றும் கூறப்படும். உடம்பு ஒன்றென்று சொல்லப்படும். இவ்வாறு இப்பாடலில் சிவனுக்குள்ள பொருட்களையும் திருமாலுக்குள்ள பொருட்களையும் இரண்டிரண்டாகச் சொல்லி முடிவில் மேனி ஒன்று எனக் கூறப்பட்டுள்ளது. சிவனுக்கும் திருமாலுக்கும் வெவ்வேறு ஆயுதங்களும், தொழில்களும், இடங்களும் இருந்தாலும் இருவர் மேனியும் ஒன்றே என்பது இப்பாடல் கூறும் கருத்தாகும். திருமால் உடம்பில் சிவன் இடம்பெற்று இருப்பதை இப்பாடல் நயமாகக் கூறுகிறது. இப்பாடலுக்கு வைணவப் பெரியார் ஒருவர் நூதனமாகப் பொருள் கண்டிருக்கிறார். அது வருமாறு:

"முதன் முதல் சிவபிரானையும் அடுத்துத் திருமாலையும் வைத்து அவரவர்கட்கு உரியவற்றை நிரல் நிறை

யாகச் சொல்லியுள்ளதைக் கவனித்தல் வேண்டும். 'மேனி' என்ற இடம் தவிர மற்றைய இடங்களில் இரண்டிரண்டாகச் சொல்லி வந்தவர் இங்கு ஒன்று மட்டும் சொல்வது பொருந்தாது. எனவே உருவம் ''எரிகார்'' மேனி என்னும் இவ்இருவகையும் ஒன்றே எனப்பொருள் கூறுதல் தகாது. அங்ஙனமாயின் இறுதியில் 'மேனி' என்று சொன்னது போல் 'உயிர்' என்றும் சொல்லலாமே! சொல்லியிருப்பின் ஐயத்திற்கு இடமில்லையே என்பவர்கள்—

'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்,

என்கிற திருக்குறளை நோக்குக. இதனுள் 'பிறவிப் பெருங்கடல் இறைவனடி சேராதார்' 'நீந்தார்' என எழுவாயும், பயனிலையும் இருக்க அடுத்து எழுவாயின்றிப் ''பிறவிப் பெருங்கடல் நீந்துவர்'' எனப் பயனிலை மட்டும் இருக்கின்றது. எனினும் ''இறைவனடி சேராதார் நீந்தார்'' எனவே ''நீந்துவர் இறைவனடி சேர்ந்தார்'' என்று எழுவாய் எளிதில் கொள்ளலாம் அன்றோ? இப்படிச் சொல்லுதல் கவி சமயம்; உய்த்துணர்வு என்ற உத்தியும் ஆகும். அம்முறையே இங்கு 'மேனி' (உடல்) ஒன்று 'அரன்' என்றால் 'உயிர்' (மற்றொன்று) நாரணன் என்பது எளிதாக விளங்கும் அல்லவா? நாராயணன் என்ற சொல்லுக்கு 'எல்லாவற்றுக்கும் ஆதாரமானவன்' என்ற பொருளைக் கொண்டு 'சிவபிரான் உடல்—நாராயணன் உயிர்' எனக் கொள்வதுதான் இங்கு பொருந்திய உரை.

பிறவிப் பெருங்கடல் என்ற குறளில் பொருள் கொள்வது போல இங்கும் விட்ட பொருளை உய்த்துணர்ந்து கொள்ள வேண்டுமேயன்றி 'உருவம் எரிகார் மேனி' (இரண்டும்) ஒன்று என நுனிப்புல் மேய்வது அறிவுடைமையாகாது.''

இவ்வுரையைப் படித்த உடனேயே பெரியார் அவர்கள் எவ்வளவு வலிந்து பொருள் கொள்ள முயன்றிருக்கிறார்கள் என்பது புலனாகிறது. சிவன் உடல் என்றும் திருமால் அவருள் அந்தர்யாமியாக இருக்கும் உயிர் என்றும் பொருள் கொள்ள வேண்டுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். இப்பாடலில் இரண்டிரண்டாக முதலில் சொல்லிவிட்டு இறுதியில் "மேனி ஒன்று" என முடிப்பதால் இருவருக்கும் உடம்பு ஒன்றே என்று தான் பொருள் கொள்ளவேண்டும். ஒருவர் உடல் ஒருவர் உயிர் எனப் பொருள் கொள்ள அஃது இடம் தராது.

திருக்குறளில் "நீந்தார் இறைவனடி சேராதார்" எனச் சொல்லி விட்டதால், "இறைவன் அடி சேர்ந்தவர் நீந்துவர்" என எளிதாகப் பொருள் கொள்ள முடிகிறது. இங்கே "மேனி ஒன்று" என்று சொன்னவுடன் அதற்குள் இருக்கும் உயிர் ஒன்று எனப் பொருள் கொள்வதற்குக் குறிப்பு ஏதும் இல்லை. மாறாக இரண்டிரண்டாக இருக்கின்ற இருவரும் உடம்பால் ஒன்றே எனப் பொருள் தரும் வகையிலேயே பாடல் அமைந்திருக்கிறது. இவ்வளவு வலிந்து பொருள் எழுதிய பெரியார் அவர்கள் அவர் உரைக்கு முற்றிலும் மாறாக நாம் முன்னர் எடுத்துக் காட்டிய பேய் ஆழ்வார் பாடல் இருக்கிறது என்பதைத் தம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளத் தவறி விட்டார்கள்;

'தாழ் சடையும் நீண் முடியும ஒண் மழுவும் சக்கரமும்
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் — சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து''

—பேய் ஆழ்வார், திருவந்தாதி

இப்பாடலில் "இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து" என வருவதுதான் பொய்கையாழ்வார் பாடலில் "மேனி ஒன்றென" வந்திருக்கிறது. ஓர் ஆழ்வார்

பாட்டிற்கு மற்றோர் ஆழ்வார் பாட்டுத்தான் வலிமையான சான்றாகுமேயன்றி நாமே கற்பித்து எழுதும் உரை சான்றாகாது. 'தாழ்சடையும், நீண்முடியும்' என்னும் பாட்டில் இரண்டிரண்டாகச் சொல்லி இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து எனக் குறிப்பிடப் பட்டிருப்பது தான் 'அரன், நாரணன்' என்னும் பாட்டில் ''மேனி ஒன்றெனச்'' சொல்லப்படுகிறது. ''இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து'' என்பது மிகத் தெளிவாக ஆழ்வாரால் பேசப்பட்டிருப்பதால் ''மேனி ஒன்று'' என்பதற்கு 'உடம்பு ஒன்று' என்றுதான் பொருள் கொள்ள வேண்டுமே அன்றி வேறு விதமாய்ப் பொருள் கொள்ளக் கூடாது. பெரியார் அவர்கள் உரையைப் பொய்கையாழ்வார் பாடல் அடியோடு மறுத்து விடுவதால் நாம் அதுபற்றி விரிவாக எழுத வேண்டுவதில்லை. வைணவ உரையாசிரியர்கள் அனைவருமே மூர்த்திகளைப் பற்றிப் பேசுகின்ற இடங்களில் இவ்வாறு வலிந்து பொருத்தமற்ற உரைகளைச் சொல்லியிருக்கிறார்கள். சிவனுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்பது நோக்கமாக இருந்திருக்கிறதேயன்றி உண்மையை உரைக்க வேண்டும் என்பது நோக்கமாக இல்லை. காரணம் சிவனிடத்தே கொண்ட வெறுப்பேயாகும். பாடல்களுக்கு ஆழ்ந்து ஆழ்ந்து உரை எழுதுவதில் திவ்வியப்பிரபந்த உரையாசிரியர்கள்மிகவும் வல்லவர்கள். அவ்விடங்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பத்தைத் தரும். ஆனால் மூர்த்திகளைப் பொறுத்தவரையில் அவர்கள் உரை ஏற்கத் தக்கதாக இல்லை. படித்த உடனேயே அஃது வேண்டுமென்றே வலிந்து சொல்லப பட்டிருக்கிறது என்பது புலனாகிறது.

பொய்கையாழ்வாரின் மற்றொரு பாடல் அவர் உடம்பு ஒன்றே எனச் சொல்லியிருப்பதை வலியுறுத்துவதாக அமைந்திருக்கிறது.

'கைய வலம்புரியும் நேமியும் கார் வண்ணத்
தைய! மலர் மகள் நின் ஆகத்தாள்—செய்ய
மறையான் நின் உந்தியான் மாமதிள் மூன்றெய்த
இறையான் நின் ஆகத் திறை'

—பொய்கையாழ்வார், முதல் திருவந்தாதி

''திருமாலே! இலக்குமி உன் உடலில் இடம் பெற்றிருக்கிறாள் பிரமா உன் கொப்பூழில் தோன்றியிருக்கிறார். திரிபுரம் எரித்த இறைவனாகிய சிவன் உன் உடம்பில் இடம்பெற்றிருக்கிறான்'' என்பது இப்பாடலின் பொருளாகும். சிவனை ''இறையான்'' என்றும் ''இறை'' என்றும் இப்பாடல் சொல்லுவதால் அவன் கடவுளாவானே அன்றி ஆன்மா ஆகமாட்டான் என்பது புலனாகும். சிவபெருமான் திருமாலின் உடலில் இருப்பதாக இது பேசுவதால் ''மேனி ஒன்று: உயிர் ஒன்று', எனப் பொருள் கொள்வது பொருத்தமாக இல்லை.

இதுவரை சிவன் திருமாலின் உடம்பில் இடம் பெற்றிருப்பதைப் பேசினோம். கம்பன் சிவனும் பிரமாவும் திருமாலோடு சேர்ந்து மூவுருவும் ஓர்வுருவாய் விளங்குகின்றனர் எனக் கூறியிருக்கிறான். ஆகவே சிவனும் பிரமாவும் திருமாலின் உடம்பில் இடம்பெற்ற இடங்களை இனி நாம் கவனிக்க வேண்டும்.

'யானும் தானா பொழிந்தானை
யாதும் எவர்க்கும் முன்னோனை
தானும், சிவனும், பிரமனும்
ஆகிப் பணைத்த தனிமுதலை
தேனும், பாலும், கன்னலும்
அமுதும ஆகித் தித்தித்து என்
ஊனில் உயிரில் உணர்வினில்
நின்ற ஒன்றை யுணர்ந்தேனே

—நம்மாழ்வார் திருவாய்மொழி

''தன்னில் தானாய் நிற்கும் திருமால் பரநிலையில் தானும், சிவனும், பிரமனும் ஆகி விளங்குகின்றான்'' என இப்பாடல் கூறுகின்றது. ''தானாய் நிற்பது'' திருமாலின் தன் நிலை என்றும், பிரமனும் சிவனும் தானுமாக நிற்பது திருமாலின் அந்தர்யாமிக நிலை என்றும் உரையாசிரியர்கள் கூறியிருக்கிறார்கள். அந்தர் யாமியாக இருக்கும் நிலையில் திருமால் நுண்ணி தாகவே சிவனுள்ளும், பிரமாவினுள்ளும் இருப்பார். இங்கே ''பணைத்த தனிமுதல்'' அதாவது,''பருத்த தனி முதல்'' என்பதால் அது மூவரும் சேர்ந்த நிலையைக் குறிக்குமேயன்றி நுண்ணியதாக நிற்கும் நிலையைக் குறிக்காது. இப்பாடலைவிட மிகத் தெளிவாகச் சிவனும் பிரமாவும் திருமாலின் உடம்பில் இடம் பெற்று இருப்பதைப் பின்வரும் பாடல் உணர்த்துகிறது—

'ஏறாளும் இறையோனும் திசைமுகனும் திருமகளும்
கூறாளும் தனியுடமபன் குலங்குலமா அசுரர்களை
நீறாகும் படியாக நிறாமித்துப் படைதொட்ட
மாறாளன் கவராத மணிமாமை குறைவிலமே'

—நம்மாழ்வார் திருவாய்மொழி

''ஏறாளும் இறையோன்'' — இடபவாகனத்தை உடைய சிவபெருமான். திசைமுகன் — நான்முகன்' திருமகள் — மகாலெட்சுமி. மூவரும் இடம்பெற்றுள்ள உடம்பை உடையவன் திருமால் என இப்பாடல் சொல்லு கிறது. ''தனி உடம்பன்'' என்பதால் அஃது ஒப்பற்ற உடம்பு என்றும் மூவரையும் தன்னகத்தே இணைத்துக் கொண்டு ஓர்வுருவாய் அது விளங்குகிறது என்றும் இப் பாடல் கூறுகிறது. இப்பாடலில் அந்தர்யாமிகத் தத்துவம் சொல்ல வராது. ''கூறாளும் தனி உடம்பன்' எனச் சொல்லி விட்டதால் இங்கே உடம்பு பற்றித்தான் பேச்சே அன்றி உயிர்பற்றிப் பேச்சில்லை.

காலமும், கணக்கும் நீத்த காரணன் மூவுருவும் ஓர்வுருவாய் விளங்குகின்றான் எனக் கம்பன் சொல்லுவதற்கு மிகப்பெரிய சான்றுகளாகச் சில பாடல்கள் திவ்வியப் பிரபந்தத்தில் விளங்குகின்றன. அப்பாடல்களை வைத்துத் தான் கம்பன் பரநிலை பற்றிய தன் பாடல்களை உருவாக்கி இருக்கிறான். ஆகவே கீழே தரப்படும் பாடல்கள் மிக முக்கியமானவையாகும்:

'தன்னாலே தன்னுநவம் பயந்த தானாய்த்
தயங் கொளிசேர் மூவுலகும் தானாய்வானாய்த்
தன்னாலே தன்னுருவில் மூர்த்தி மூன்றாய்த்
தானாயன் ஆயினான் சரணென் றுய்வீர்

மின்னாடு வேலேந்து விளந்தை வேளை
விண் ணேறத் தனிவேலுய்த் துலகமாண்ட
தென்னாடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே.

— திருமங்கையாழ்வார். பெரிய திருமொழி

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்திவேறாய்
உலகுய்ய நின்றானை — அன்று பேய்ச்சி
விடம் பருகு வித்தகனைக் கன்று மேய்த்து
விளையாட வல்லானை; வரை மீகானில்
தடம் பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில்
தவநெறிக் கோர் பெருநெறியை வையங்காக்கும்
கடும்பரிமேல் கற்கியை நான் கண்டுகொண்டேன்
கடிபொழில் சூழ் கடல் மல்லைத் தலசயனத்தே

— திருமங்கையாழ்வார் — பெரிய திருமொழி

பாருருவி நீரெரிகால் விசும்மாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏருருவில் மூவருமேயென்ன நின்ற
இமையவர் தந்திருவுருவே றெண்ணும்போது

ஒருருவம் பொன்னுருவம்; ஒன்று செந்தீ;
ஒன்று மா கடலுருவம்; ஒத்துநின்ற
மூவுருவும் கண்ட போதொன்றாம் சோதி
முகிலுருவம் எம்மடிகள் உருவந்தானே!

— திருமங்கையாழ்வார் திருநெடுந் தாண்டகம்

'தன்னாலே தன்னுருவம் பயந்ததானாய்'

என்னும் பாடலில் 'தன்னாலே தன் உருவில் மூர்த்தி மூன்றாய், எனத் திருமங்கையாழ்வார் சொல்லுகிறார். தன்னுருவில் மூர்த்தி மூன்றாய் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். "மூன்று கவடாய் முளைத்தெழுந்த சோதி" எனக் கம்பன் சொல்லுவது போலப் பரநிலையில் திருமால் தன்னுருவில் மூன்று மூர்த்தியாக விளங்குகிறார் என்பது இப்பாடல் உணர்த்தும் கருத்தாகும். "தன்னுருவில் மூர்த்தி மூன்றாய்" என்பதற்கு உரையாசிரியர்கள் "சொரூபத்தில் மூன்று மூர்த்திகளை வெளியிட்டவனாய்" என்றும், "ஒன்று தன்னிலை" என்றும் ஏனைய இரண்டும் சரீர, சரீரி பாவ நிலை எனறும் கூறியிருக்கிறார்கள். சொரூப நிலை என்பது அவன் தன்னிலையையேகுறிக்கும். ஆகவே அத்தன்னிலையில் "மூன்று மூர்த்திகளை வெளியிட்டான்" என்றால் அவன் மூவராய் விளங்குகிறான் என்பதுதான் பொருள். சரீர — சரீரி பாவம் என்பது பிரமாவும் சிவனும் சரீரம் என்றும் அவர்களுக்குள் திருமால் சரீரி என்றும் பொருள் தரும்! இவ்வாறு நிற்பது பற்றிய பேச்சு இங்கில்லை. "உருவில் மூன்று மூர்த்தியாய் விளங்குகிறான்" என்பதுதான் இங்கே உணர்த்தப்படும் பொருளாகும்.

"உடம்புருவில் மூன்றொன்றாய்" என்னும் பாடலில் ஆழ்வார் திருமால் உடம்பில் மூன்றுருவும் ஒன்றாய் லிளங்குகிறது என்பதை விளக்கமாகச் சொல்லுகிறார். உலகம் உய்வதற்காகப் படைத்தல், காத்தல், அழித்தலைச் செய்யும்போது வெவ்வேறு மூர்த்தியாய் விளங்குகின்றான் என்றும் அவர் கூறுகிறார். சரீர-சரீரி பாவம் சொன்னா

லும், ''உடம்புருவில் மூன்று மூர்த்தியாய்'' இருப்பதை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும்! இப்பாடலில் ''மூன்றும் ஒன்றாய்'' என ஆழ்வார் சொல்வதால் அது மூன்று மூர்த்திகளும் ஒரு மூர்த்தியாக விளங்குவதையே குறிக்கும்.

'பாருருவி நீரெரிகால்' என்னும் பாடலில் ஏருருவில் மூவருமே என்ன நின்ற இமையவர் தம் திருவுரு' எனக் கூறுகிறார். அழகிய உருவில் மூவருமே ஒன்றாக நிற்கிறார்கள் என்பதை இது குறிக்கிறது. இதில், ''ஓர் வுருவம் பொன் உருவம்'' அதாவது பிரமாவின் உருவம் என்றும், மற்றோர் உருவம் செந்தீ அதாவது சிவனுருவம் என்றும், மூன்றாவது உருவம் கடலுருவம் அதாவது திருமால் உருவம் என்றும் சொல்லி ''ஒத்து நின்ற மூவுருவும் கண்டபோது ஒன்றாம் சோதி முகிலுருவம் எம்மடிகள் உருவந்தானே'' என அம்மூவுருவையும் ஆழ்வார் விளக்குகிறார். மூவுருவும் ஒத்து ஒன்றாய்த் திருமாலாகக் காட்சியளிக்கிறது என்பது இதனால் உணர்த்தப்படும் பொருளாகும். சரீர—சரீரி பாவமாக இருந்தாலும் மூவுருவும் ஒத்து ஒன்றாய் நிற்கும்போது திருமாலாகவே தோன்றுகிறது எனச் சொல்லுவதால் அதுதான் பரம்பொருள் நிலை என்பது புலனாகும்.

கம்பனுக்கு இப்பாடல்களே பரம ஆதாரமாக விளங்கியிருக்கின்றன என்பது இதுகாறும் கூறியவற்றால் இனிது புலனாகும்.

ஆழ்வார்கள் மூவரும் ஒன்றாய் நிற்கிற நிலையில் பிரமாவையோ சிவனையோ தாழ்த்திக் கூறுவதில்லை. வியூக நிலையில் அவர்கள் இருவரும் பிரிந்து நிற்கும்போது அவர்களைத் தாழ்த்திப் பேசியிருக்கிறார்கள்.

''வள்ளி கொழுநன் முதலாய
மக்களொடு முக்கண்ணான்

வெள்கியோட விறல் வாணன்
வியன் தோள் வலத்தைத் துணித்து கந்தான்
பள்ளி கமலத் திடைப்பட்ட
பகுவாய் அலவன் முகம்நோக்கி
நள்ளி யூடும் வயல் சூழ்ந்த
நறையூர் நின்ற நம்பியே!

—திருமங்கையாழ்வார் பெரியதிருமொழி.

வாணாசுரன் என்பவனைத் திருமால் வென்ற செய்தி இப்பாடலில் சொல்லப்பட்டிருக்கிறது. சிவபெருமான், முருகன் முதலியோர் சக்தியற்றவர்கள் என்பது இப்பாடலிலிருந்து தெரிகிறது.

''பின்னிட்ட சடையானும், பிரமனு மிந்திரனும்
துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்
மின்வட்டச் சுடராழி வேங்கடக் கோன்தானுமிழும்
பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவேன் ஆவேனே'

— குலசேகரப்பெருமாள் — பெருமாள் திருமொழி

பின்னிட்ட சடையான் — சிவபெருமான். சிவபெருமானும், பிரம்மனும், இந்திரனும் புகமுடியாத வைகுந்த வாசலென இப்பாடல் பேசுகிறது.

'எறிகடல் நடுவுள் அறிதுயில் அமர்ந்து
சிவன் அயனிந்திரன் இவர் முதலனைத்தோர்
தெய்வக் குழாங்கள் கைதொழக் கிடந்த
தாமரை யுந்தித் தனிப்பெரு நாயக!
மூவுலகளந்த சேவடி யோயே!

— நம்மாழ்வார் — திருவாசிரியம்

இதில் சிவனும், பிரம்மாவும் கை தொழுகின்றனர் என்றும் பாற்கடல் பெருமான் அறிதுயிலில் அமர்ந்திருக்கிறான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

''அளிமலர்மே லயனரனிந் திரனோடு ஏனை
அமரர்கள் தம் குழுவும் அரம்பையரும் மற்றும்
தெளிமதிசேர் முனிவர்கள் தம் குழுவு முந்தித்
திசை திசையில் மலர் தூவிச் சென்றுசேரும்

களிமலர் சேர் பொழிலரங்கத் துரக மேறிக்
கண் வளரும் கடல் வண்ணர் கமலக் கண்ணும்
ஒளிமதிசேர் திருமுகமும் கண்டு கொண்டென்
உள்ளமிக என்று கொலோ உருகும்நாளே?
— குலசேகரப்பெருமாள் — திருமொழி.

பிரமா, சிவன், இந்திரன் முதலியோர் மலரிட்டுத் தொழுகின்ற திருவரங்கப் பெருமான் என இப்பாடலில் பாற்கடல் திருமால் போற்றப்படுகிறார்.

'நீரேறு செஞ்சடை நீலகண்டனும்
நான்முகனும், முறையால்
சீரேறு வாசகஞ் செய்ய நின்ற
திருமாலை நாடு திரேல்
வாரேறு கொங்கை உருப்பிணியை
வலியப் பிடித்துக் கொண்டு
தேரேற்றி சேனை நடுவு போர் செய்யச்
சிக்கெனக் கண்டாருளர்:
—பெரியாழ்வார்—திருமொழி

சிவனும், நான்முகனும் முறையாக வழிபடுகின்ற திருமாலை நாடுதல் வேண்டுமென இப்பாடல் பேசுகிறது. இவ்வாறு சிவனும், பிரமாவும் வியூக நிலையிலுள்ள திருமாலை வழிபடுகிறார்கள் என்றும் அவர் உதவியை நாடுகின்றார்கள் என்றும் அசுரர்களை வெல்லச் சக்தியற்று நிற்கிறார்கள் என்றும் பல பாடல்களில் ஆழ்வார்கள் பாடியிருக்கிறார்கள்.

பரநிலையிலுள்ள சிவனையும், பிரமாவையும் ஆழ்வார்கள் போற்றிப் பாடியிருப்பதை இனிக் காண்போம். நம்மாழ்வார் பாடிய சில பாடல்கள் வைணவ உரையாசிரியர்களுக்குப் பெரும் சிந்தனையை உண்டாக்கியிருக்கின்றன.

உணர்ந்துணர்ந்து கிழிந்தகன் றுயர்ந்துரு வியந்த
விந்நிலைமை
உணர்ந்துணர்ந் துணரிலும் இறைநிலையுணர் வரி
துயிர்காள்
உண்ர்ந்துணர்ந் துரைத்துரைத் தரியய னரனென்னுமி
வரை
உணர்ந்துணர்ந் துரைத் துரைத் திறைஞ்சு மின்
மனப்பட்ட தொன்றே

— நம்மாழ்வார்—திருமொழி

''இறைவனின் உயர்ந்த நிலையை எவ்வளவு உணர்ந்துரைத்தாலும் அறிய முடியாது. எனவே திருமால், பிரமா, சிவன் என்னும் இவரை உணர்ந்து, உரைத்து இறைஞ்சுங்கள்; அவ் வழிபாடு ஒருவனையே குறித்ததாக இருக்கும்'' என்பது இப்பாடலின் பொருளாகும்.

'புலையறமாகி நின்ற
புத்தொடு சமண மெல்லாம்
கலையறக் கற்ற மாந்தர்
காண்பரோ? கேட்பரோதாம்?
தலையறுப் புண்டும் சாகேன்
சத்தியம், காண்மின் ஐயா!
சிலையினால் இலங்கை செற்ற
தேவனே தேவனாவான்'

—தொண்டரடிப் பொடியாழ்வார்

''சமணர்களும், புத்தர்களும் உண்மையை அறிய மாட்டார்கள். சத்தியமாக நான் சொல்லுகின்றேன் இலங்கையை வென்ற திருமாலே தேவதேவனாவான்''
என இப்பாடலில் தொண்டரடிப் பொடி ஆழ்வார் பேசுகிறார். அடுத்து

'மற்று மோர் தெய்வமுண்டே?
மதியிலா மானிடங்காள்
உற்ற போ தன்றி நீங்கள்
ஒருவனென் றுணர மாட்டீர்
அற்றமேல் என்றறியீர்
அவனல்லால் தெய்வமில்லை
கற்றினம் மேய்த்த எந்தை
கழலினை பணி மின் நீரே''

—தொண்டரடிப் பொடியாழ்வார்

என அவர் கூறுகிறார். ''மதியில்லாத மானிடர்களே. திருமாலைத் தவிர வேறு தெய்வமில்லை. அவனையே வணங்குங்கள்'' என்பது இப்பாடல் கூறும் கருத்தாகும். வேறு தெய்வத்தை வணங்காமல் திருமாலையே வணங்கு வதால் தான் ''மறந்தும் புறம் தொழா வைணவர்'' என அவர்கள் போற்றப்படுகின்றனர். இந்நிலையில் நம்மாழ்வார் அரி, அயன், அரன் என்னும் இவரை இறைஞ்சுங்கள் என்று சொல்லுவது எவ்வாறு பொருந்தும்? இதற்கு உரையாசிரியர்கள் பின்வருமாறு சமாதானம் சொல்லியிருக்கிறார்கள்.

''மனப்பட்ட ஒன்றை நீங்கள் வணங்கவேண்டும்; அந்த ஒன்று யாது? என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். சிந்தித்தால் பரதந்திரர்களாக இருக்கின்ற சிவனும், பிரமாவும் முழுமுதற் தெய்வமாக இருக்கமுடியாது என்பது புலப்படும். திருமால் ஒருவனே முழுமுதற் பொருள் என உணர்ந்து அவனை நீங்கள் வழிபடத் துவங்குவீர்கள்'' இந்த சமாதானத்திற்கும் பாட்டிற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது படித்த உடனேயே புலனாகும். அரி, அயன், அரன் என்னும் இவரை இறைஞ்சுங்கள் என்று ஆழ்வார் தெளிவாகச் சொல்லு கிறார். ''நீங்களாகச் சிந்தித்தால் இறை நிலையை உணர்வது அரிது'' என்றும் அவர் கூறுகிறார். இந்த நிலையில் நாமாகச் சிந்தித்துத் திருமால்தான் முழுமுதற்

பொருள் என்பதை எவ்வாறு உணர்வது? சிந்தித்தால் நீங்கள் உணரமுடியாது என ஆழ்வாரே சொல்லி விட்டதால் நம்மைச் சிந்திக்குமாறு உரையாசிரியர்கள் சொல்லுவது எவ்வாறு பொருந்தும்? இன்னொரு வகையாகவும் இதற்குச் சிலர் பொருள்சொல்லுகிறார்கள். ''இம் மூவரில் நீங்கள் விருப்பப்பட்ட ஒருவரை வணங்குங் கள். நாளடைவில் உண்மையான இறைவன் திருமால் தான் என்பது புலப்படும்; அப்புறம் அவனை வணங்கி உய்யுங்கள்'' இந்தச் சமாதானமும் பொருத்தமற்றதாகவே இருக்கிறது. ''திருமாலைத் தவிர வேறு தெய்வமில்லை; அவனேயே வணங்குங்கள்'' எனத் தொண்டரடிப் பொடியாழ்வார் அடித்துச் சொல்லியிருக்கிறார். அதற்கு மாறாக நம்மாழ்வார், ''விருப்பப்பட்ட ஒருவரை வணங்குங்கள் பின்னர் உண்மை புலனாகும்' என்று சொல்வாரா? ஆழ்வார்தான் நமக்கு யாரை வணங்க வேண்டுமென்று வழிகாட்ட வேண்டும். அவர் ''மூவரையும் இறைஞ்சுங்கள்'' என்று சொல்லுகிறார். சொல்லிவிட்டு ''மனப்பட்டது ஒன்றே'' என்கிறார். 'மனப்பட்ட ஒன்று' என்று அவர் சொல்லவில்லை ''நீங்கள் மூவரை வணங்கினாலும் மூவரும் ஓர்வுருவாய் விளங்குவதால் உங்கள் மனத்தில் பட்டது ஒரு வடிவமே'' என்பது இதன் பொருளாகும். மூவராக இருக்கும் பரநிலைப் பெருமானை இறைஞ்சுமின்'' என்பதுதான் நம்மாழ்வார் உணர்த்தும் கருத்தாகும். பரநிலையிலும் திருமால்தான் முழுமுதற் தெய்வம்; அவர் மற்ற இருவரையும் இணைத்துக் கொண்டு விளங்குவதால் அம் மூவரும் திருமாலாகவே கொள்ளப்படுவர். எனவே ''அவர்களை இறைஞ்சுங்கள்'' என ஆழ்வார் கூறுகிறார்.

அடுத்து இதனை விளக்கும் முகத்தான் அவர்,

'ஒன்றெனப் பலவென அறிவரும் வடிவினுள் நின்ற
நற்றெழில் நாரணன் நான்முகன அரனென்னும் மிவரை
ஒன்றநும மனத்துவைத் துள்ளிநும் இருபசையறுத்து
நன்றென நலஞ்செய்வ தவனிடை நம்முடைநாளே

— நம்மாழ்வார் திருமொழி.

எனப்பாடியிருக்கிறார். "ஒன்றா? பலவா? எனத் தெரிய முடியாத வடிவில் பரநிலையில் நாரணன், நான்முகன், அரன் எனும் மூவரும் இருக்கிறார்கள். அவர்களை ஒன்றி நும்மனம் வைத்துத் தியானித்து அகப்பற்று, புறப்பற்று இரண்டினையும் அறுத்து நன்றாக வழிபட்டால் அது தான் நாம் அவனுடன் இருக்கும் நாளாகும்" என்பது இப்பாடலின் பொருள்.

உரையாசிரியர்கள் இதற்குக் கீழ்வருமாறு பொருள் கண்டிருக்கிறார்கள். "ஒன்றா? பலவா? என அறிய முடியாத வகையில் நான்முகன் சிவன் என்னும் இருவருள் நாரணன் அந்தர்யாமியாக இருக்கின்றான். இதனால் அவர்களே இவன் என நினைக்கும்படியாக இருக்கும். உண்மையில் அவர்கள் வேறு; இவன் வேறு. நீங்கள் சிவன் மீதும் பிரமாமீதும் வைத்துள்ள இருபசைகளையும் அறுத்து நாரணன் மீது பற்றை வைத்து வழிபட வேண்டும். அதுதான் நாம் அவனுடன் இருக்கும் நாளாகும்."

இவ்வுரையில் இருபசை என்பது சிவன்மீதும் பிரமா மீதும் உள்ள பசை என உரையாசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். பசை என்பது பற்றைக் குறிக்கும். அகப்பற்று, புறப்பற்று ஆகிய இரண்டையும்தான் நூற்கள் பசையெனச் சொல்லுவது வழக்கம். நம்மாழ்வாரே "நன்றாய் ஞானம் கடந்து போய்" என்னும் பாட்டில் "பசை" என்பதை உலகப் பற்று என்னும் பொருளில் தான் கையாண்டிருக்கிறார். இங்கே நான்முகன் மீதும், சிவன் மீதும் வைத்துள்ள பற்று எனச் சொன்னால் "நன்றெழில் நாரணன் நான்முகன் அரன் என்னும் இவரை, ஒன்றநும் மனம் வைத்து உள்ளி" என வரும் அடி இடிக்கும். எனவே அந்தர்யாமியாக நின்றாலும் மூவரும் ஒன்றாக நிற்கிறார்கள் என்பதுதான் இங்கே உணர்த்தப்படும் பொருளாகும், "பரம்பொருள் நிலையிலுள்ள அவர்களை இறைஞ்சுங்கள்" என்பதே ஆழ்வார் கூறியுள்ள இப்பாடலுக்குச் சரியான பொருளாக இருக்க முடியும்.

பரநிலையிலுள்ள பிரமாவையும், சிவனையும் நம்மாழ்வார் போற்றிப் பாடியுள்ள பாடல் வருமாறு,—

> **'என் திரு மார்பன் றன்னை யென் மலைமகள்**
> **கூறன்றன்னை**
> **என்றும் என் நாமகளை யகம்பால் கொண்ட**
> **நான்முகனை**
> **நின்ற சசிபதியை நிலங் கீண்டெயில் மூன்றெரித்த**
> **வென்று புலம் துரந்த விசும் பாளியைக் காணேனோ?**
>
> — நம்மாழ்வார், திருவாய்மொழி

மூன்று மூர்த்திகளையும் மனம் உருகித் தமக்கு மிகவும் உரிமையுடையவர்களாகக் கொண்டு ஆழ்வார் இப் பாடலில் பாடியிருக்கிறார். 'என் திரு மார்பன் நன்னை' என்றால் ''என் திருமகளை மார்பில் வைத்த திருமால்'' என்று பொருள். 'என் மலைமகள் கூறன்' என்றால் ''என் மலைமகளை ஒரு கூற்றில் வைத்த சிவபெருமான்'' என்று பொருள். ''என் நா மகளை யகம் பால் கொண்ட நான்முகன்'' என்றால் 'என் சரஸ்வதியைத் தன்னிடத்தில் கொண்ட நான்முகன்' என்று பொருள். 'என்' என, உரிமையோடு ஆழ்வார் மூவரையும் ஒருங்கே வைத்து விளித்திருக்கிறார். உரையாசிரியர்கள் சரீரசரீரி பாவத்தால் நாராயணன் சிவனாகவும் நான்முகனாகவும் நிற்பது பற்றி ஆழ்வார் இவ்வாறு பாடியிருக்கிறார் எனக் கூறுகின்றனர்.

''வள்ளி கொழு நன் முதலாய மக்களோடு முக்கண்ணன் வெள்கியோட'' எனவும் ''எறிகடல் நடுவுள் அறிதுயில் அமர்ந்து சிவன் அயனிந்திரன் இவர் முதலனைத்தோர் தெய்வக் குழாங்கள் கைதொழக் கிடந்த'' எனவும் வருகின்ற இடங்களில் ஆழ்வார்கள் சிவனையும் நான்முகனையும் உரிமையோடு 'என்' எனப் பேசாமல் வெறுமனே எந்த அடையுமின்றி, ''அயன் அரன்'' என்றே பேசியிருக்கிறார்கள். அப்பொழுதும்

திருமால் சரீரசரீரி பாவத்தால் சிவனாகவும் பிரமா வாகவும் நிற்கவே செய்கிறார். அவ்விடங்களில் இவ்வளவு உரிமையோடு பாடாமல் இவ்விடத்தில் ஆழ்வார் இவ்வாறு பாடுவதற்குக் காரணம் என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும். சரீர - சரீரி பாவம் எவ்விடத்தும் உண்டு.

'எங்கு வந்துறுகோ, என்னையாள் வானே?
ஏழுல கங்களும் நீயே
அங்கவர்க் கமைத்த தெய்வமும் நீயே
அவற்றவை கருமமும் நீயே
பொங்கிய புறம்பால் பொருளுள வேலும்
அவையுமோ நீ; இன்னே யானால்
மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே;
வான்புலன் இறந்ததும் நீயே

—நம்மாழ்வார் —திருவாய்மொழி

இப்பாடலில் ஆழ்வார், ''திருமாலே எல்லாமாக நிற்கிறான்'' எனக் கூறுகிறார். அந்தர்யாமியாக நிற்கும் ஒற்றுமை பற்றிச் சரீர சரீரி பாவ அடிப்படையில் இப்பாடலை அவர் பாடியிருக்கிறார். பல பாடல்கள் திவ்யப் பிரபந்தத்தில் இவ்வாறு வருகின்றன. ஆனால் அவ்விடங்களில் எல்லாம் அடைமொழிகள் இன்றி வெறுமனே சிவன், பிரமா என்றுதான் ஆழ்வார்கள் சொல்லுகிறார்கள்.

''என் திருமகள் மார்பன் றன்னை' என்னும் பாட்டில் மூவருக்கும் 'என்' என்னும் அடைமொழி சேர்த்து ஆழ்வார் பாடியிருப்பதை நோக்க வேண்டும். இதனால் அந்தர்யாமிய ஒற்றுமை பற்றிப் பேசாமல் வேறு காரணம் பற்றியே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார் என்பது புலனாகிறது. பரம்பொருள் நிலையில் மூவுருவும், ஓர்வுருவாய் நிற்கும் தன்மை பற்றியே அவர் இவ்வாறு அடைமொழி சேர்த்துப் பாடியிருக்கிறார் என அறிதல் வேண்டும். ஆகவே எல்லாவிடத்தும் அந்தர்யாமியாக

நிற்கும் நிலையை இவ்விடத்தில் புகுத்திப் பொருள் காண்பது பொருந்தாது.

இதே போன்ற இன்னொரு பாடலையும் கவனிப் போம்,

'ஒளிமணி வண்ணன் என்கோ?
ஒருவனென் றேத்த நின்ற
நளிர் மதிச் சடையன் என்கோ!
நான் முகக் கடவுள் என்கோ?
அளிமகிழ்ந் துலக மெல்லாம்
படைத்தவை ஏத்த நின்ற
களிமலர்த் துளவன் எம்மான்
கண்ணனை மாயனையே'
—நம்மாழ்வார் —திருமொழி

இப்பாடலில் "ஒருவன் அதாவது ஒப்பற்றவன் என்று பாராட்டப்படுகின்ற குளிர்ந்த சந்திரனை அணிந்த சடையனாகிய சிவபெருமான் என்று உன்னைச் சொல் வேனா? நான்முகக் கடவுள் என்று உன்னைச் சொல் வேனா?" என ஆழ்வார் திருமாலை நோக்கிப் பாடு கிறார். சிவபெருமானுக்கு ஒரு நீண்ட அடை சேர்த்திருக் கிறார். "ஒப்பற்றவன் என்று ஏத்த நின்ற சிவபெருமான்" என அவர் சொல்லுகிறார். "ஒருவன்" என்னும் சொல் சங்க நூலில் ஆட்சி பெற்றுள்ளது. ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவனையே "ஒருவன்" எனத் தமிழ் கூறும் நல்லுலகம் சொல்லும். சிவபெருமானைக் குறைத்துப் பாடிய ஆழ்வார் இங்கே மிக உயர்த்திப் பாடு வதற்குக் காரணம் பரநிலையில் மூவரும் ஒன்றாய் நிற்பதே ஆகும். இவ்விடத்தில் உரையாசிரியர்கள் 'ஒருவன்' என்பதற்கு ஒரு பொருந்தாத உரையைச் சொல்லியிருக்கிறார்கள். "அறியாதார் ஒப்பற்றவன் என்று ஏத்த நின்ற சிவபெருமான்," என்பது அவர்கள் கண்ட பொருளாகும்- இவ்வாறு எழுதுவதிலிருந்தே

அருள் உணர்ச்சியோடு அவர்கள் உரை எழுதவில்லை என்பது தெரிகிறது. ஔவையார் 'மணிமிடற்று ஒருவன்' எனக் கூறுகிறார். உயர்ந்தோர் ஏத்த நின்ற 'ஒருவன்' என்னும் சொல்லை' அறியாதார் ஏத்த நின்ற சொல்'' என உரையாசிரியர்கள் சொல்லுவது எவ்வளவு பொருத்த மற்றதென்பதைக் கூற வேண்டுவதில்லை. அப்படியே ''அறியாதார் ஏத்த நின்ற'' சொல்லாகவே அதனை வைத்துக் கொள்வோம். ''அறியாதார் ஏத்த நின்ற சிவபெருமான் என உன்னைச் சொல்வேனோ?'' எனத் திருமாலை நோக்கி ஆழ்வார் பாடுவாரா? அவ்வாறு சொல்வது திருமாலுக்குச் சிறப்பை உண்டாக்குமா? எனவே உரையாசிரியர் உரை பொருத்தமற்றது என்பது தெளிவு. சிவனையும் நான்முகனையும் சிறப்பித்துச் சொல்லுகின்ற இடங்கள் எல்லாம் அந்தர்யாமியாக நிற்கும் ஒற்றுமை பற்றிக் கூறப்படாமல் பரநிலையில் மூவரும் ஒன்றாக நிற்கும் நிலை பற்றிக் கூறப்பட்டது என அறிதல் வேண்டும்.

பரம்பொருள் நிலையில் உள்ள மூவரையும் புகழ்ந்த நம்மாழ்வார் ஆகக் கடைசித் திருவாய் மொழியில் பின்வருமாறு பாடியிருக்கிறார்:—

'அவாவறச் சூழ் அரியை அயனை அரனை அலற்றி
அவாவற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன சொன்ன
அவாவிலந் தாதிகளால் இவையாயிரமும் முடிந்த
அவாவிலந் தாதியிப் பத்தறிந்தார் பிறந்தார் உயர்ந்தே

—நம்மாழ்வார் —திருவாய்மொழி

''காண வேண்டும் என்ற விடாய் தீரும் படியாகச் சூழ்ந்து அரியை அதாவது திருமாலை, அயனை அதாவது பிரமாவை, அரனை அதாவது சிவனை அலற்றி அதாவது கூவி அழைத்து இனிப் பாட வேண்டும் என்னும் அவாவற்று வீடு பெற்ற குருகூர்ச் சடகோபன்'' என ஆழ்வார் இதில் கூறுகிறார். மூவரையும் ஏத்தித்தான்

வீடு பெற்றதாக அவர் சொல்லுவது உரையாசிரியர்களுக்கு மிகுந்த தொல்லையை விளைத்திருக்கிறது. அவர்கள் இதற்குப் பொருள் எழுதி நிறைவு காண முடியாமையால் இருவகையாகப் பொருள் எழுதியிருக்கிறார்கள்.

''காணவேண்டும் என்ற விடாய் தீரும்படியாக அரியை, அயனுக்குள் அந்தர்யாமியாக இருக்கும் அரியை அரனுக்குள் அந்தர்யாமியாக இருக்கும் அரியைக் கூவி அழைத்து வீடுபெற்ற சடகோபன்'' என்பது அவர்கள் எழுதிய முதல் உரையாகும். வீடுபெறும் நிலையில் திருமாலுக்குரிய நாமங்களைச் சொல்லி அழைக்காமல் அயனுக்குள் இருக்கின்ற அரியே! அரனுக்குள் இருக்கின்ற அரியே! என அழைப்பது பொருத்தமாகுமா? அந்தர்யாமிக ஒற்றுமை பற்றி அழைத்தாலும் சிவன் நாமத்தையும், பிரமன் நாமத்தையும் சொல்லித்தானே அவர்களுக்குள் இருக்கும் அரியெனப் பேச வேண்டியதிருக்கிறது? வீடு பெறும் நிலையில் என்னதான் அந்தர்யாமியாக நின்றாலும் சிவ சப்தமும் பிரம சப்தமும் வரும்படி ஓதலாமா? வைணவர்கள் இதனை ஏற்றுக் கொள்வார்களா? அவர்கள் சிவனை அந்தர்யாமிக ஒற்றுமை பற்றி, ''அரியே'' எனப் பாவித்து வணங்குவார்களா? இவ்விடத்தில் வைணவப் பெரியார் ஒருவரோடு நடந்த ஒருவிவாதம் நினைவுக்கு வருகிறது.

''அனுமன் சிவாம்சம் எனக் கம்பன் கூறுகிறான். சிவாம்சமான அனுமன் இராமபிரானைத் தோளில் சுமந்து போர்க்களத்தில் எங்கும் செல்கிறான். சிவன் திருமாலின் அடிமை என்பது இதிலிருந்து தெரிகிறது'' என அந்த வைணவப் பெரியார் கூறினார். சிவாம்சமாகிய அனுமான் இராமனுக்கு அடிமை என்பதை ஒப்புக் கொள்வோம். அனுமனை வைணவத் திருக்கோவிலில் வைதது வழிபடுகின்றார்கள் திருமால் கோவிலில் முதல் சந்நதியில் அனுமன்தான் இருக்கிறான். அவனுக்குப் பூசைகள் நடைபெறுகின்றன. சிவாம்சமாகிய அனுமனை நீங்கள் வழிபடலாமா? திருமாலுக்கு அடிமையாகச்

சிவன் இருக்கலாம்; ஆனால் உங்களுக்குச் சிவாம்சமாகிய அனுமன் வழிபடும் தெய்வமாக இருக்கிறான் என்பதை ஒப்புக் கொள்ளத்தானே வேண்டும்?'' என நான் அவரிடம் கேட்டேன். உடனே அந்த வைணவப் பெரியார் 'அனுமன் சிவாம்சம் எனக் கம்பன்தான் சொல்லுகிறான். வான்மீகி அவனை வாயு அம்சம் என்றுதான் சொல்லுகிறார். நாங்கள் அனுமனை வாயு அம்சமாகக் கொண்டுதான் வழிபடுகின்றோம்'' எனப் பதில் சொன்னார். சிவாம்சமும் வாயு அம்சமும் அனுமனிடம் சேர்ந்திருப்பதாகக் கம்பன் சொல்லுகிறான். அவனை வழிபடலாமா? எனக் கேட்டதும்பெரியார் அவனுக்குச் சிவாம்சம் இல்லை எனச் சொல்லித் தப்ப முயன்றார். இதிலிருந்து சிவனை எந்தப் பாவத்திலும் வணங்க வைணவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்பது புலனாகிறது. இந்நிலையில் பிரம நாமத்தையும், சிவ நாமத்தையும் முதலில் சொல்லி அவர்களுக்குள் இருக்கும் "அரியே!'' என ஆழ்வார் கூறுவாரா? ''அயன் என்றோ, அரன் என்றோ அவர் சொல்லவில்லை; அவர்களுக்குள் இருக்கும் அரியே என்றுதான் அவர் சொல்லுகிறார்'' என்று உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

இப்பாட்டில் ''அரியே'' என நேரடியாக ஓரிடத்தில் தான் வருகிறது. அப்புறம் "அயன் அரன்'' என்றே பேசியிருக்கிறார்.நாமாக வலிந்து அவர்களுக்குள்இருக்கும் அரியே எனச் சொன்னாலும் அவர்கள் நாமத்தைச் சொல்லித்தானே அப்புறம், அரியைக் கொண்டுவர வேண்டியதிருக்கிறது.

நம்மாழ்வார் பிறிதோர் இடத்தில்,

'மாலரி கேசவன் நாரணன், சீ
மாதவன், கோவிந்தன், வைகுந்தன் என்று
ஓலமிட என்னைப் பண்ணி, விட்டிட்
டொன்றும் உருவும் சுவடும் காட்டான்

ஏல மலர்க்குழல், அன்னை மீர் காள்!
என்னுடைத் தோழியர்காள்! என்செய் கேன்?
காலம் பலசென்றும் காண்பதாணை;
உங்களோடு எங்களிடையில்லையே,

—நம்யாழ்வார்—திருவாய்மொழி

எனப் பாடியிருக்கிறார்.

இப்பாடலில், ''கேசவன், நாரணன், மாதவன்'' என்னும் திருமால் நாமங்களைச் சொல்லித்தான் ஓலமிட்டதாகச் சொல்லுகிறார். இன்னொரு பாட்டில்,

'அறிவரிய பிரானை யாழியங் கையனையேயலற்றி
நறிய நன்மலர் நாடி நன்குரு கூர்ச்சட
கோபன் சொன்ன
குறிகொளாயிரத் துள்ளி வைபத்தும் திருக்
குறுங்குடிய தன்மேல்
அறிடக் கற்றுவல்லார் வைணவர் ஆழ்கடல்
ஞாலத்துள்ளே.

—நம்மாழ்வார் திருமொழி.

எனக் கூறுகிறார்.

இப்பாட்டில் 'அவா அறச் சூழ்'' என்னும் பாட்டில் வரும் அலற்றி, என்னும் சொல்லையே ஆழ்வார் கையாண்டிருக்கிறார். இதில் ''ஆழியங் கையன்'' அதாவது ''சக்கரத்தை ஏந்திய கையன்'' என அலற்றி யிருக்கிறார். இவ்வாறு நேரடியாகத் திருமாலின் நாமங் களைச் சொல்லி அலற்றுவதுதானே நியாயமாக இருக்கும்? அரி, அயன், அரன் என அந்தர்யாமித் தத்துவத்தை வைத்து அலற்றலாமா? ஆகவே உரையாசிரியர்களின் முதல் உரை அறவே பொருத்தமற்றதென்பது புலனாகிறது.

இனிக் ''காண வேண்டும் என்ற விடாய் தீரும்படியாக அரியாகிய திருமாலைச் சூழ்ந்து அயன், அரன் எனப்படும்

சிவன் மீதும் பிரமா மீதும் உள்ள அவாவை அறுத்து வீடுபேறுற்ற சடகோபன்'' என்பது அவர்களின் இரண்டாவது உரையின் கருத்தாகும். இங்கே இரண்டாவது அடியில் வரும் ''அவாவற்று'' என்பதை அயன் மீதும், அரன் மீதும் ஏற்றி அவர்கள் மீதுள்ள ஆசையை அறுத்து அரியை அலற்றி வீடு பெற்ற சடகோபன் எனச் சொற்களைத் தாறுமாறாகக் கூட்டிப் பொருள் கண்டிருக்கிறார்கள். அவர்கள் சொன்னபடியே அயன் மீதும் அரன் மீதும் உள்ள அவாவை அறுத்துச் சடகோபன் வீடு பெற்றதாகவே வைத்துக் கொள்வோம். அங்ஙனமானால் சடகோபருக்கு ஏற்கனவே அயன் மீதும் அரன் மீதும் அவா இருந்திருக்கிறது என்று கருதவேண்டியது வருமன்றோ? சடகோபர் இவ்விடத்தில் தன்னைப் பற்றித் தான் சொல்லுகிறார். நமக்கு அறிவுறுத்தி இருந்தால், ''அயன் மீதும் அரன் மீதும் உள்ள அவாவை அறுங்கள் என்கிறார்'' எனக் கூறலாம். தன்னைப் பற்றிக் கூறுகின்ற இடத்தில் இவ்வாறு சொல்லுவது பொருத்தமாகாது. சடகோபர் பிறவியிலேயே வைணவர்; சைவத்தில் இருந்து வைணவத்திற்கு வந்தவர் அல்லர். ஆகவே அவருக்கு சிவன் மீதும், பிரமா மீதும் அவா இருந்ததெனச் சொல்ல வராது. அவா இருந்தால்தானே அறுக்கலாம்? அவாவே இல்லாத போது அறுப்பது பற்றிய பேச்சிற்கே இடமில்லை இதனால் இந்த இரண்டாவது உரையும் பொருத்தமற்றதாகிறது.

பரம்பொருள் நிலையில் மூவரும் ஒன்றே எனக் கொண்டால்தான் அம்மூவரையும் அலற்றி அவர் வீடு பெற்றதாகச் சொல்வது பொருத்தமாக இருக்கும். ஏற்கனவே அவர், ''நளிர் மதிச் சடையன் என்கோ? மலைமகள் கூறன் என்கோ?'' என அலற்றியிருப்பதை எடுத்துக் காட்டியிருக்கிறோம். இது பரநிலை பற்றிய பாட்டாதலால் வேறுவகையாகப் பொருள் கொள்ள வராது. கம்பன் பரநிலைத் தத்துவத்தை இத்தகைய பாடல்களிலிருந்துதான் உருவாக்கியிருக்கிறான்.

நான் உரையாசிரியர்களைக் குறை கூறுவதாக யாரும் கருதக்கூடாது. அவர்கள் மிகப் பெரியவர்கள்; வைணவத்தில் ஊறித் திளைத்தவர்கள்; வேதம், உபநிடதம்,கீதை முதலிய நூற்களை ஆழ்ந்து பயின்றவர்கள். ஆழ்ந்து, பொருள் நயம் காண்பதில் இணையற்றவர்கள். ஆனால் மூர்த்திகளைப் பொறுத்த உரையில் அவர்கள் அருள் உணர்ச்சியோடு எழுதவில்லை. கம்பனை ஆதாரமாகக் கொண்டு நான் எழுதுவதால் இவ்வாறு அவர்களை மறுக்க வேண்டிய ஒரு துர்ப்பாக்கியம் ஏற்பட்டிருக்கிறது. வைணவ அறிஞர்கள் இதனைப் பொறுத்தருளுமாறு வேண்டுகிறேன்.

5. கம்பன் வைணவனா?

கம்பனைச் சைவன் என்று சொல்பவர்களும் உண்டு. வைணவன் என்று சொல்பவர்களும் உண்டு; சமரசவாதி என்று சொல்லுபவர்களும் உண்டு. ''கம்பனும்—சிவனும்'' என்னும் நூலில் அதன் ஆசிரியர் பின்வருமாறு எழுதுகிறார் :—

''கம்பன் பிறப்பினால் சைவன் என்று அவன் பெயர் காட்டுகின்றது. காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமான் பெயர் கம்பன். ஏகம்பம் என்பது காஞ்சியின் பெயர். ஏகம்பன், கம்பன் என மருவி வந்தது. சுந்தரமூர்த்திகள் தேவாரத்தில் காஞ்சிக் கடவுளைக் கம்பன் என்றே பாடுவார்.

''ஆலம் தான் உகந்து அமுது செய்தான்
ஆதியை, அமரர் தொழுது ஏத்தும்
சீலம்தான் பெரிதும் உடையானை
சிந்திப்பார் அவர் சிந்தையுளானை
ஏல வார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே?''

சுந்தரமூர்த்தி சுவாமிகள் கம்பன் எனப் பாடியிருப்பதால் அப்பெயர் சைவர்களுக்கு உரியது என்று நூலாசிரியர் கருதுகிறார். ஆனால் வைணவர்கள் கம்பத்திலிருந்து நரசிம்ம மூர்த்தி வெளிப்பட்டதால் அவருக்குக்

கம்பன் என்று ஒரு பெயர் உண்டென்றும் அந்தப் பெயரைத்தான் கம்பன் வைத்துக் கொண்டிருக்கிறான் என்றும் சொல்லுகின்றனர். இவ்வரலாறு எப்படியிருப்பினும் பெயரை வைத்து ஒருவன் எந்தச் சமயத்தைச் சார்ந்தவன் என்று முடிவு செய்வது சிரமம். கம்பன் வாழ்க்கை வரலாறு ஒழுங்காக நமக்குக் கிடைக்கவில்லை. கம்பனுக்கு அம்பிகாபதி என்று ஒரு புதல்வன் இருந்தான் என்றும் அந்தப் பெயர் சிவனுக்குரிய பெயர் என்றும் மேற்கண்ட நூலாசிரியர் கூறுகின்றார். கம்பனை ஆதரித்த சடையப்ப வள்ளல் பெயரும் சைவப் பெயரே என்றும் சொல்லுகிறார். இவ்வாறு பெயர்களை வைத்துத் தீர்மானிப்பதைவிட அவன் பாடிய காவியத்திற்குள் நுழைந்து உண்மையைக் கண்டு பிடிப்பதுதான் சரியான வழியாகும். நூலாசிரியரின் உள்ளத்தை அவன் வாக்குகள் தாம் படம் பிடித்துக் காட்டும்.

'கம்பனும் சிவனும்' என்னும் நூலின் ஆசிரியர், ''சைவத்தையும், வைணவத்தையும் சிறிதும் வேறு பாடின்றிப் பேசும் சமரசஞானி கம்பன்'' என்று கூறுகிறார். இதன் உண்மையையும் நூலுக்குள் நுழைந்து ஆய்ந்துதான் முடிவு கட்ட வேண்டும். கம்பராமாயணத் துவக்கப் பாடல்கள் பலவற்றை அவன் பாடியவை அல்ல என்று சென்னைக் கம்பன் கழகப்பதிப்புத் தள்ளி விட்டது. எனவே அவற்றை எடுத்து ஆராய முடியாது.

பாலகாண்டத்தில் இராமன் திருமணக் கோலம் புனையும் போது கம்பன் பாடியுள்ள ஒரு பாடலை முன்னர் எடுத்துக் காட்டியிருக்கிறோம் மீண்டும் ஆராய்வதற்காக அதனைக் கீழே தருகிறோம்:—

'முப்பரம் பொருளிற்குள் முதலை, மூலத்தை
இப்பரம் துடைத்தவர் எய்தும் இன்பத்தை
அப்பனை, அப்பினுள் அமிழ்தை, தன்னையே
ஒப்பனை, ஒப்பனை உரைக்க ஒண்ணுமோ?'

இப்பாடலில் அப்பினுள் அமிழ்தமாக இருக்கின்ற அதாவது திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் திருமாலே மூன்று பரம்பொருளுக்குள் முதலாவதாகவும் மூலமாகவும் இருக்கும் பரம்பொருளாகும் எனக் கூறு கிறான். திருமாலைப் பரம்பொருள் என வைணவர்கள் மட்டுமே கூறுவர். சைவர்கள் சிவனைத்தான் பரம் பொருள் என்று சொல்லுவார்கள். இங்கே கம்பன், இராமனைப் பரம்பொருள் என்று சொல்லியிருந்தால் வேறு விதமாகப் பொருள் கொள்ளலாம். ஆனால் திருமாலாகிய இராமன் பரம்பொருள் என்று சொல்லு கிறான். இது கம்பனின் சொந்த வாக்காகும். திருமாலைப் பரம்பொருள் என்று சொல்லும் அளவோடு மட்டும் இப்பாடலைக் கம்பன் அமைக்கவில்லை. சிவனும் பிரமாவும் துணைப் பரம்பொருள் என்றும் சொல்லு கிறான். அவன் சைவனாக இருந்தால் சிவனைத் துணைப் பரம்பொருள் என்று சொல்லியிருக்க மாட்டான். இதே போலச் சமரச ஞானியாக இருந்தால் சிவனையும் பிரமா வையும் குறிப்பிடாமல் திருமாலைப் பரம்பொருள் என்று மட்டும் குறிப்பிட்டிருப்பான். காவியத்திற்காகத் திருமாலைப் பரம்பொருள் என்று சொல்லியிருக்கிறான் என நாம் சமாதானம் கூறலாம். சிவனையும் பிரமா வையும் கொண்டு வந்து புகுத்தி அவர்களின் மேற்பட்டவன் திருமால் என்பதால் கம்பன் சமரச ஞானி யாகவும் இல்லை; சைவனாகவும் இல்லை என்பது தெளிவாகிறது. இங்கே கம்பன் சிவனையும் பிரமாவையும் தள்ளி வட்டுத் திருமாலே பரம்பொருள் என்பதால் இந்த ஒரு பாடலைக் கொண்டே அவன் வைணவன் என முடிவு கட்டலாம்.

பரதன் கோசலையிடம் தனக்குக் கைகேசி செய்த சூழ்ச்சியில் எந்தப் பங்கும் இல்லை என்பதை உணர்த்து வதற்காகச் சூளுரைகள் பல சொல்லுகிறான்.

''அறம் கெட முயன்றவன், அருள் இல் நெஞ்சினன்,
பிறன்கடை நின்றவன், பிறரைச் சீறினோன்
மறம்கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன்
துறந்த மாதவர்க்கு அருந் துயரம் சூழ்ந்துளோன்

குரவரை, மகளிரை, வாளின் கொன்றுளோன்,
புரவலன் தன்னோடும் அமரில் புக்குஉடன்
விரவலர் வெரிநிடை விழிக்க மீண்டுளோன்,
இரவலர் அருநிதி எறிந்து வெளவினோன்

''தழைத்த தண் துளவினோன் தலைவன் அல்லன்''
என்று
அழைத்தவன், அறநெறி அந்தணா ளரில்
பிழைத்தவன், பிழைப்பு இலா மறையைப் பேணலாது
''இழைத்தவன் பொய்'' எனும் இழுதை நெஞ்சினோன்

அயோத்தியா காண்டம்—பள்ளி படைப்படலம்—
98, 99, 100ம் பாடல்கள்

இப்பாடல்களில் கைகேசி சூழ்ச்சிகளில் தனக்குத் தொடர்பு இருக்குமானால், ''இன்ன இன்ன பாவம் செய்தவன் செல்லும் நரகத்திற்கு நான் செல்வேன்'' எனச் சொல்லுகிறான். ''அறங்கெட முயன்றவன், அருளில்லாத நெஞ்சினன், பிறன்மனை விழைந்தவன், பிறரைச் சீறியவன், உயிர்களைக் கொன்றவன், மாதவர்களுக்கு அருந்துயர் அளித்தவன், குருமார்களையும் பெண்களையும் கொன்றவன், அரசனோடு போருக்குச் சென்று புறமுதுகு காட்டியவன், இரவலர் பெற்ற நிதியைக் கவர்ந்தவன் எந்த நரகத்திற்குச் செல்வானோ அந்த நரகத்திற்குச் செல்வேன்'' எனக் கூறுகிறான். அப்புறம் மூன்றாவது பாட்டில் அவன் சொல்லுவதுதான் இங்கே சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். ''துளசி மாலையை அணிந்த திருமாலைத் தலைவன் என்று சொல்லாதவன் எந்த நரகத்திற்குச் செல்வானோ அந்த நரகத்திற்கு நான் செல்வேன்'' எனக் கூறுகிறான்.

வான்மீகத்தில் இதே போலப் பல சூளுரைகள் வருகின்றன. ஆனால், "திருமாலைத் தலைவன் என்னாதவன் செல்லும் நரகத்திற்குச் செல்வேன்" என்னும் சூளுரை அதில் காணப்படவில்லை. கம்பனாகத் தான் புதிதாகப் பரதன் வாக்கில் இதனைப் புகுத்தியிருக்கிறான். "திருமால்தான் தலைவன்; அதனை மறுத்தால் நரகம் கிட்டும்" என்பதை உணர்த்துவதற்காகவே கம்பன் இவ்வாறு பாடியிருக்கிறான்.

இந்தப் பாட்டு சென்னைக் கம்பன் கழகப் பதிப்பில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஆனால் அதில் வாட்குறி (†) இட்டுப் பதிப்பித்திருக்கிறார்கள். வாட்குறி இடப்பட்டிருப்பதற்கு என்ன பொருள் என்பதை அப்பதிப்பில் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார்கள்:—

"எல்லாப் பிரதிகளிலும் காணப்பட்டாலும் பொருத்தமில்லாதவைகள் போல் தோன்றும் பாடல்களும் ஆராய்ச்சி முறையில் சிலர் ஐயப்படும் பாடல்களும் வாட்குறியிடப்பட்டுள்ளன"

இதிலிருந்து இந்தப் பாடல் எல்லாப் பிரதிகளிலும் காணப்படுகிறது என்பது தெளிவாகிறது. ஆராய்ச்சியாளர்களுக்குப் பொருத்தமில்லாமல் தோன்றுவது வேறு; பாட்டு எல்லாப் பிரதிகளிலும் உண்டா? இல்லையா? என்பது வேறு. எல்லாப் பிரதிகளிலும் இந்தப் பாட்டு இருப்பதால் இதனைக் கம்பன் பாடல் எனக் கொள்வதில் தவறில்லை. திருமாலே பரம்பொருள் என்றும் சிவனும், பிரமாவும் துணைப் பரம்பொருள் என்றும் சொல்லியுள்ள கம்பன் இப்பாட்டில் திருமாலே தலைவன் என்று சொல்வது பொருத்தமாகவே தோன்றுகிறது.

பரதன் வாக்காக இதனைச் சொன்னாலும்கம்பன் தன் கருத்தைத்தான் இதில் வெளிப்படுத்தியிருக்கிறான். கவி தன் வாக்காகவும் சில கருத்துக்களைச் சொல்லுவான்;

பாத்திரத்தின் வாக்காகவும் சில கருத்துக்களைச் சொல்லுவான். சற்பாத்திர வாக்காக இருந்தால் அது கம்பன் கருத்தைத்தான் பிரதி பலிக்கிறது என நாம் தீர்மானிக்க வேண்டும்.

இராமரும் இலக்குமனும், சீதையும் ஆரணியத்திற்குள் செல்லும்போது விராதன் எதிர்ப்படுகிறான். அவன் சீதையை ஒரு கையால் முகர்ந்து கொண்டு ஆகாயத்தில் பறந்தான்; அதாவது சீதையை ஒரு கையால் தொட்டுத் தூக்கி மேலே சென்று விட்டான். இராவணன் சீதையைத் தொட்டுத் தூக்கினான் என்றால் அவள் கற்பிற்கு இழுக்கு வரும் எனக் கருதிக் கம்பன் அவளைப் பர்ணசாலையோடு தூக்கிச் சென்றான் எனச் சொல்லுகிறான். வான்மீகத்திற்கு மாறாகத் தமிழ்ப் பண்பாட்டின் அடிப்படையில் இவ்வாறு பாடியிருக்கிறான் என அறிஞர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் இங்கே விராதன் ஒரு கையால் சீதையைத் தொட்டுத் தூக்கி விட்டான் என்று கம்பன் சொல்வது வியப்பாக இருக்கிறது. இது கற்பிற்கு இழுக்காகாதா? என வினாவியபோது ஓர் அறிஞர், ''விராதன் மோகத்தால் அவளைத் தூக்கவில்லை; தின்பதற்காகவே தூக்கினான்; எனவே கற்புப்பற்றிய பேச்சு இங்கில்லை'' எனக் கூறினார்.

அனுமன் அசோக வனத்தில் சீதையைச் சந்தித்த பொழுது, ''அம்மா' என் தோளில் ஏறிக் கொள்; நான் இராமரிடத்தில் உன்னைத் தூக்கிக்,கொண்டு போய் விடுகிறேன்'' எனச் சொல்லுகிறான். அதற்குச் சீதை ''என்ன இருந்தாலும் நீ ஆண்மகன்; நீ என்னைத் தொடக் கூடாது'' எனச் சொல்லுகிறாள். அனுமன் எந்தவிதமான மோக உணர்வுமின்றிக் குழந்தை தாயை நோக்கிச் சொல்லுவது போலத்தான் சொல்லியிருக்கிறான். அப்படியிருந்தும் சீதை ''நீ ஆண் மகனாதலால் உன்னைத் தொடக் கூடாது'' எனக் கூறியிருக்கிறாள். இதிலிருந்து எந்தக் காரணத்தைக் கொண்டும் ஓர்

ஆண்மகன் பிற பெண்ணைத் தொடக்கூடாது என்பது புலனாகிறது. ஆகவே விராதன் உணவிற்காகத் தூக்கியிருந்தாலும் சீதையைத் தொட்டது ஒரு குற்றமே ஆகும். ''ஒரு கொடியை முடிந்து சீதையின் மீது எறிந்து கட்டி விராதன் அவளைத் தூக்கினான்'' எனக் கம்பன் பாடியிருக்கலாம். அவ்வாறு பாடாமல் கையால் முகந்தே தூக்கினான் எனச் சொல்வது பொருத்தமாக இல்லை.

வான்மீகத்தில் விராதன் சீதையைக் கையால் தொட்டுத் தூக்கினான் என்றே வருவதால் அதனைக் கம்பன் அப்படியே மொழி பெயர்த்து விட்டான் என்றே நினைக்க வேண்டியதிருக்கிறது. இது மூலநூலுக்குள்ள வலிமையைக் காட்டுகிறது.

இராமன் விராதன் மீது அம்பெய்தான். விராதன் சீதையை விட்டுவிட்டு இராம, இலக்குமரோடு போராடத் துவங்கினான். அவர்கள் அவன் தோளை வெட்டி எறிந்து கொன்று அவனைப் பூமியில் புதைத்தார்கள். அப்பொழுது விராதன் சாபம் நீங்கி இராமனைத் துதிக்கத் துவங்குகிறான். அவ்வாறு துதித்த துதிகளுள் ஒரு துதி பின் வருமாறு அமைந்துள்ளது:—

''மெய்யைத் தான் சிறிது உணர்ந்து, நீ விதித்த மன்னுயிர்கள்
உய்யத்தான் ஆகாதோ? உனக்கு என்ன குறை உண்டோ?
வையத்தார், வானத்தார், மழுவாளிக்கு அன்று அளித்த
ஐயத்தால், சிறிது ஐயம் தவிர்ந்தாரும் உளர், ஐயா!''

— ஆரண்யகாண்டம்-விராதன் வதைப்படலம் 58ம்பாடல்

இப்பாடலுக்குள்ள பொருள் வருமாறு: ''எம்பெருமானே! உன்னால் படைக்கப்பட்ட நிலைபேறுடைய உயிர்கள் நீயே பரம்பொருள் என்கிற உண்மையைச் சிறிது தெரிந்து உய்தல் கூடாதா? அவர்கள் உய்ந்தால் உனக்கு என்ன குறை உண்டாகும்? மழுப்படையை உடைய சிவபெருமானுக்கு அக்காலத்தில் நீ இட்ட பிச்சை

யால் மண்ணுலகத்தாரும், விண்ணுலகத்தாரும் தமக்கு இருந்த சிறிது ஐயத்தையும் நீக்கிக்கொண்டார்கள் என்பது உண்மையன்றோ?''

''சிவபெருமான் பரம்பொருளா? திருமால் பரம்பொருளா? என்று விண்ணுலகத்தாருக்கும் மண்ணுலகத்தாருக்கும் ஐயம் உண்டாயிற்று. ஆனால் அவர்கள் திருமாலே பரம்பொருள் என உணர்ந்து கொண்டாலும் அதில் அவர்களுக்குக் கொஞ்சம் ஐயம் இருந்தது. சிவபெருமானுக்கு நீ இட்ட பிச்சையால் அவர்கள் நீயே பரம்பொருள் என ஐயமின்றித் தெளிந்து கொண்டார்கள்'' என்பது இப்பாடல் உணர்த்தும் கருத்தாகும்

முன்னொரு காலத்தில் சிவபெருமான், பிரமன் தலைகளுள் ஒன்றைக் கொய்துவிட்டார். கொய்த தலை பிரமன் சாபத்தால் சிவபெருமான் கைத்தலத்தை விட்டு நீங்காதாயிற்று. இதனால் சிவபெருமான் மிகவும் தொல்லைப்பட்டார். பலர் பிச்சையிட்டும் பிரம்ம கபாலம் நிரம்பவும் இல்லை; சிவன் கையை விட்டு நீங்கவும் இல்லை. திருமால் பிச்சை இட்டதும் இந்தக் கபாலம் நிரம்பியது; சிவன் கையில் ஒட்டிக் கொண்டிருந்த அது அவர் கையை விட்டு நீங்கியது; இதிலிருந்து திருமால், சிவனுக்கு மேற்பட்டவர் என்பதும், அவரே பரம்பொருள் என்பதும் மெய்ப்பிக்கப்பட்டன'' என வைணவ புராணங்கள் கூறுகின்றன. சைவபுராணங்கள் இதற்கு மாறாக திருமால் இரத்தத்தைப் பிச்சையாக இட்டு மயங்கிவிழச் சிவபெருமான் அவரைக் காப்பாற்றினார் எனச் சொல்கின்றன. வைணவ புராண அடிப்படையில் விராதன் தன் துதியில் ''நீயே பரம்பொருள் என்பது இவ்வரலாற்றால் புலனாயிற்று''எனக் கூறுகிறான்.

திருமாலின் சிறப்புக்களை விராதன் எடுத்துக் கூறித் துதிப்பது பொருத்தமேயாகும். ஆனால் சிவபெருமானைக் குறைத்துக் கூறித் திருமால் பெருமையைப் பேசுவது

வைணவ சமய முறையாகுமேயன்றிச்சமரசமுறையாகாது. கம்பன் விராதன் துதியாக இப்பாடலைப் பாடியிருப்பது அவன் வைணவ சமயத்தைச் சார்ந்தவன் என்பதை உறுதிப்படுத்துகிறது. அவன் சைவக் கவிஞனாக இருந்தால் பாத்திரத்திற்கு ஏற்றபடி துதியை அமைத்தாலும், சிவனைக் குறைத்துப் பேசுகின்ற துதியை அமைத்திருக்க மாட்டான்; சமரசவாதியாக இருந்தாலும் அவ்வாறு செய்திருக்க மாட்டான். திருமாலைச் சிறப்பிப்பதோடு மட்டும் கம்பன் கவிகளை அமைத்திருந்தால் நாம் அவன் எந்தச் சமயத்தைச் சார்ந்தவன் என்பதைத் தீர்மானிக்க முடியாமல் போயிருக்கும். ஆனால் இங்கே அவன் சிவனைக் குறைத்துச் சொல்லியிருப்பதால் அவனை வைணவன் என்றே முடிவு காண வேண்டியதிருக்கிறது.

இப்பாடல் சென்னைக் கம்பன் கழகப் பதிப்பில் எந்த அடையாளக் குறிப்புமின்றிப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆராய்ச்சியாளர்கள் இந்தப் பாடல் பற்றி எந்த சந்தேகமும் எழுப்பவில்லை என்பது தெரிகிறது.

''கம்பனும் - சிவனும்'' என்னும் நூலில் அதன் ஆசிரியர் சிவனைக் கம்பன் புகழ்ந்திருக்கிற பாடல்கள் அனைத்தையும் தொகுத்து வெளியிட்டிருக்கிறார். அப்பாடல்களுள் சில வருமாறு:—

பாழிப்புயம் உயர்திக் கிடை
அடையபுடை படர் அச்
சூழிச்சடை முடிவிண் தொட
அயல் வெண்மதி தோற்ற
ஆழிப்புனல், எரி, கால், நிலம்
ஆகாயமும், அழியும்
ஊழிக்கடை முடிவில் தனி
உமைகேள்வனை ஒப்பான்

வெஞ்சுடர் உருவிற்று என்னும்
மேனியர்; வேண்டிற்று ஈயும்
நெஞ்சினர்; ஈசன் கண்ணில்
நெருப்பு உறா அனங்கன் அன்னார்;

செஞ்சிலைக் கரத்தார்; மாதர்
புலவிகள் திருத்திச் சேந்த
குஞ்சியர் சூழ நின்ற
மைந்தர் தம் குழாங்கள் கண்டார்.

நஞ்சு அட எழுதலும்
நடுங்கி, நாள் மதிச்
செஞ்சடைக் கடவுளை
அடையும் தேவர் போல்,
வஞ்சனை அரக்கரை
வெருவி மாதவர்,
"அஞ்சன வண்ண! நின்
அபயம்யாம்" என்றார்

மூவர் ஆய், முதல் ஆகி, மூலம் அது
ஆகி ஞாலமும் ஆகும் அத்
தேவ தேவர் பிடித்த போர்வில்
ஒடித்த சேவகன், சேண்நிலம்
காவல் மாமுடி சூடு பேர் எழில்
காணலாம் எனும் ஆசை கூர்
பாவை மார்முகம் என்ன, முன்னம்
மலர்ந்த; பங்கய ராசியே.

இப்பாடல்கள் சிவனைப் புகழ்ந்துரைப்பன என்பதில் ஐயமில்லை. இவற்றுள் கூடக் கடைசியாகக் குறிப்பிடப் பட்டிருக்கிற பாட்டு "இவ்வளவு பெருமை படைத்த சிவனின் வில்லை உடைத்தவன் இராமன்" எனக் கூறிச் சிவனிலும் பார்க்க இராமன் மேற்பட்டவன் என்பதைத் தெரிவிக்கிறது. இருந்தாலும் சிவனைப் புகழ்ந்துள்ள பாடல்கள் பல கம்பராமாயணத்தில் உண்டு என்பது உண்மை. ஆனால் சிவனைக் குறைத்துச் சொல்லுகின்ற பாட்டுக்களும் அதன் கண் உண்டு என்பதை மறக்கக் கூடாது. சிவனைப் புகழும் அளவில் பாடல்களைச் செய்திருந்தால் சைவ, வைணவ வேறுபாடின்றி அவன் பாடியிருக்கிறான் எனக் கொள்ளலாம். சிவனைக்

குறைத்தும் பாடியிருப்பதால் அவனைச் சமரசவாதியாகக் கொள்ள முடியவில்லை. கவிஞன் தான் பாடுகின்ற சந்தர்ப்பத்தை நோக்கி அந்தந்தத் தெய்வங்களைப் புகழ்ந்து பாடுவது இயல்பு. ஆனால் எவ்விடத்தும் அவற்றைக் குறைத்துச் சொல்லக் கூடாது.

கம்பன் சிவனைப்புகழும் இடங்களை நோக்கினோமானால் துணைப் பரம்பொருளாகச் சிவன் இருக்கிறான் எனக் கருதி ஆழ்வார்கள் 'என் மலைமகள் கூறன் என்கோ'' எனப் பாடியது போலப் பாடியிருக்கிறான் என்றேதான் தீர்மானிக்க வேண்டியிருக்கிறது. மேலும் சிவனைப் புகழ்ந்து அவருக்கும் மேற்பட்டவன் இராமன் எனச் சொல்லி மகிழ்வதும் அவன் இயல்பாக இருந்திருக்கிறது.

அந்தக் காலத்தில் எந்தக் கவிஞனும் ஏதேனும் ஒரு சமயத்தைச் சார்ந்தவனாகத்தான் இருந்திருப்பான். ஆனால் பிற சமயத் தெய்வங்களை எவ்விடத்திலும் குறைக்காமல் பாடியிருந்தால் அவனைப் பெருந்தன்மை மிக்க சமயவாதி எனச் சொல்லலாம். சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள் இத்தகைய பெருந்தன்மை மிக்க சமயவா யாக இருந்திருக்கிறார்.

'மதியின் வெண்தோடு சூடுஞ்சென்னி
நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்துப்
பவள வாய்ச்சி தவளவாள் நகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி வெஞ்சினத்து
அரவு நாண் பூட்டி நெடுமலை வளைத்தோள்
துளையெயிற் றுரகக் கச்சுடை முலைச்சி
வளையுடைக் கையிற் சூலமேந்தி
கரியின் உரிவை போர்த்தணங் காகிய
அரியின் உரிவை மேகலையாட்டி
சிலம்புங் கழலும் புலம்புஞ் சீறடி
வலம்படு கொற்றத்து வாய் வாட் கொற்றவை

இரண்டுவே றுருவில் திரண்டதோள் அவுணன்
தலைமிசை நின்ற தையல் பலர் தொழும்
அமரி குமரி கவுரி சமரி
சூலி நீலி மாலவற் கிளங்கிளை
ஐயை செய்யவள் வெய்யவாள் தடக்கைப்
பாய்கலைப் பாவை பைந்தொடிப் பாவை
ஆய்கலைப் பாவை அருங்கலப் பாவை
தமர் தொழ வந்த குமரிக் கோலத்து
அமரிளங் குமரியும் அருளினள்
வரியுறு செய்கை வாய்ந்ததா லெனவே!

என இதில் சிவபெருமானையும், கொற்றவையையும் ஒருவராகப் பாவித்துப் பாடியிருக்கிறார். அடுத்துத் திருமாலைப் பின்வருமாறு அழகுறப் பாடுகிறார்:

''காவியசே வடிசேப்பத் தம்பியொடுங்கான் போந்து
சோவரணும் போர் மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே;
பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே;
கண்ணிமைத்துக் காண்பார் தம் கண்ணென்ன கண்ணே
மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர் பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே''

இதில் ''கரியவனைக் காணாத கண் என்ன கண்ணே,' என்றும், ''கண் இமைத்துக் காண்பார் தம் கண் என்ன கண்ணே?'' என்றும், நாராயணா வென்னா நாவென்ன நாவே,'' என்றும் அவர் பாடியிருக்கும் அடிகள்

உள்ளத்தை உருக்குகின்றன. ஆழ்வார்கள் கூட இவ்வளவு நெகிழ்ச்சியாகப் பாடவில்லை. இனி முருகனைப் பற்றிப் பின்வருமாறு பாடுகிறார் :-

'சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமும் நீங்கா இறைவன் கை வேலன்றே
பாரிரும் பௌவத்தின் உள்புக்குப் பண்பொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே;
அணிமுகங்க ளோராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்
மணி விசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே.
சரவணப்பூம் பள்ளியறைத் தாய் மா ரறுவர்
திரு முலைப்பா லுண்டான திருக்கை வேலன்றே
வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகுபெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே

இதில் 'சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண் குன்றும்,ஏரகமும் நீங்கா இறைவன் கை வேலன்றே' எனச் சொல்லுவது நெஞ்சைக் கவர்கிறது. அருணகிரி நாதர் கூட இவ்வளவு அருமையாகப் படைவீடுகளைப் பாட வில்லை.

மேற்கண்டவாறு எல்லாத் தெய்வங்களையும் பாடிய இளங்கோவடிகள் அவ்தெய்வங்களை எவ்விடத்தும் தம் வாயாலோ, பாத்திரத்தின் வாயாலோ குறைத்துச் சொல்லவில்லை. இதுதான் கவிஞன் பெருந்தன்மை மிக்கவனாக இருக்கிறான் என்பதைக் காட்டும் அடையாளமாகும். இப்படிப் பாடியிருப்பதற்காக அவர் எந்தச் சமயத்தையும் சாராத சமரசவாதி எனக் கூற முடியாது. அவர் சமணக் கோட்பாட்டினைத் தழுவியவர். இதனை எவ்வாறு தீர்மானிக்கலாம்? என வினவலாம்.

புறஞ்சேரி இறுத்த காதையில், மாதவியின் ஓலை கொண்டு வந்த கோசிகனைச் சமாதானம் சொல்லிப்

போக்கி விட்டுக் கோவலன் கண்ணகியும், கவுந்தி அடிகளும் இருந்த இடத்திற்கு வருவது பற்றிக் கூறப் பட்டுள்ளது. அப்பொழுது கவுந்தி அடிகளைக் குறித்து இளங்கோவடிகள் கூறுவது கவனத்திற்குரியதாகும். கவுந்தியடிகள் சமணத் துறவி என்பதை யாவரும் அறிவர். அவரைப்பற்றி இளங்கோவடிகள் பின்வருமாறு கூறு கிறார் :—

> ''மாசில் கற்பின் மனைவி யோடிருந்த
> ஆசில் கொள்கை அறவிபால் அணைந்தாங்கு''

இதில் கவுந்தி அடிகளை ''ஆசில் கொள்கை அறவி'' என அவர் சுட்டுகிறார். ''ஆசில் கொள்கை அடிகள்'' என்றால், ''குற்றம் இல்லாத கோட்பாட்டினை உடைய சமண சமயத்தைச் சார்ந்த அடிகள்'' என்று பொருள். சமண சமயம் குற்றம் இல்லாத கோட்பாட்டினை உடையதென அவர் கூறியிருக்கிறார்.

சமண சமயம் குற்றம் இல்லாத கொள்கையுடைய தெனச் சைவர்களும் சொல்லமாட்டார்கள்,' வைணவர் களும் சொல்லமாட்டார்கள்; சாக்தர்களும் சொல்ல மாட்டார்கள்சங்கரவேதாந்திகளும்சொல்லமாட்டார்கள். தேவாரத் திருமுறைகளிலும் திவ்யப் பிரபந்தத்திலும் சமணக் கொள்கை குற்றம் உடையதெனப் பாடியிருப்பதை யாவரும் காணலாம். இளங்கோவடிகள், ''குற்றமில்லாத கோட்பாட்டினை உடையது சமண சமயம்'' என்பதால் அவர் சமணர் என்றே கருத வேண்டியிருக்கிறது. அவர் சமணராக இருந்தும் சைவ வைணவத் தெய்வங்களைத் தாழ்த்தாமல் பாடியிருக் கிறார். இதனால் தான் அவரைச் சமரசவாதி எனச் சொல்லாமல் பெருந்தன்மைமிக்க சமயவாதி எனக் குறிப்பிட்டு இருக்கிறோம்.

கம்பன் காலத்தில் சைவ சமயம் மிகவும் வலிமை மிக்க ஒன்றாக விளங்கியிருக்கிறது. பெரும்பான்மையான

மக்கள் சைவசமயத்தைச் சார்ந்தவர்களாகவே இருந்திருக்கிறார்கள். இந்நிலையில் கம்பன் விராதன் துதியில் ''திருமாலே பரம்பொருள் சிவன் அல்லன் என யாவரும் தெளிந்தனர்'' எனக் கூறியிருக்கின்றான் என்றால் அவன் அழுத்தமான வைணவன் என்பது தெளிவாகிறது.

கம்பன், தான் பாடிய காவியத்தில் இரணியன் கதையை எடுத்துக் கூறியிருக்கிறான். இராவணனுக்கு அறிவு தெருட்டுவதற்காக வீடணன் அவ்வரலாற்றைக் கூறுகின்றான் எனச் சொல்கிறான். இந்த வரலாறு வான்மீகத்தில் இல்லை. கம்பன் தான் தன் விருப்பத்திற்கு அதனைப் பாடியிருக்கிறான். நரசிம்ம அவதாரத்தில் அவன் கொண்டுள்ள ஈடுபாட்டை உணர்த்துவதற்காகவே இதனைப் பாடியிருக்கிறான் எனக் கொள்வதில் தவறில்லை. இராவணனுக்கு அறிவு புகட்டுவதற்காக இதனை அவன் சொல்லியிருந்தாலும், இதனைப் பாடுகின்ற போக்கை நாம் கவனிக்கின்ற போது கம்பன் மிக்க ஈடுபாட்டோடு இதனைச் சொல்லியிருக்கிறான் என்பது புலனாகிறது.

தேவர், மனிதர், விலங்கு முதலிய பிராணிகளாலும் ஐம்பெரும் பூதங்களாலும் தனக்கு மரணம் இல்லாதபடி அளவற்ற வரங்களைப் பெற்றுத் தேவர் முதலிய யாவருக்கும் கொடுமை இயற்றித் தன்னையே கடவுளாக வணங்கச் செய்து வந்தான இரணியன். அவன் வல்லமையைப் பற்றிக் கம்பன் பின்வருமாறு பாடுகின்றான்:—

'பெண்ணில், பேர் எழில் ஆணினில், அலியினில், பிறிதும்
உள்நிற்கும் உயிர் உள்ளதில், இல்லதில், உலவான்;
கண்ணில் காண்பன, கருதுவ, யாவினும் கழியான்;
மண்ணில் சாகிலன்; வானிலும் சாகிலன்; வரத்தால்

'நீரின் சாகிலன்; நெருப்பினும் சாகிலன்; நிமிர்ந்த
மாருதத்தினும்,மண்ணின் மற்று வெற்றினும் மாளான்;
ஓரும தேவரும் முனிவரும் பிறர்களும் உரைப்பச்
சாரும் சாபமும், அன்னவன் தனைச் சென்று சாரா

உள்ளில் சாகிலன்; புறத்தினும் உலக்கிலன்; உலவாக்
கொள்ளைத் தெய்வ வான் படைக்கலம் யாவையும்
கொல்லா
நள்ளின் சாகிலன்; பகலிடைச் சாகிலன், நமனார்
கொள்ளச் சாகிலன், ஆர் இனி அவன் உயிர்கொள்வார்?

—யுத்தகாண்டம்—இரணியன் வதைப்படலம்
14, 16, 17ம் பாடல்கள்

அவன் எவ்வாறு வாழ்ந்தான் என்பதைக் கீழ்க்கண்ட இரண்டு பாடல்களில் கம்பன் தெரிவிக்கிறான்.

'வண்டல் தெண்திரை ஆற்று நீர் சில ஒன்று மருவான்
கொண்டல் கொண்ட நீர் குளிர்ப்பு இல என்று அளப
குடையான்
பண்டைத் தெண் திரைப்பரவை நீர் உவர் என்று
படியான்
அண்டத்தைப் பொதுத்து, அப்புறத்து அப்பினால்
ஆடும்

மரபின் மாபெரும் புறக்கடல் மஞ்சனம் மருவி,
அரவின் நாட்டிடை மகளிரோடு இன் அமுது அருந்தி
பரவும் இந்திரன் பதியிடைப் பகற்பொழுது அகற்றி
இரவின் ஓலக்கம் நான்முகன் உலகத்துள் இருக்கும்.

—யுத்தகாண்டம்—இரணியன் வதைப்படலம்
4, 5 பாடல்கள்

முதல் பாட்டிற்குரிய பொருள் :— ஆற்றுநீர் சிறிய அளவினதாக இருக்கிறது என்று இரணியன் அதில் குளிப்பதில்லை. மேகத்தினின்றும் சொரியும் நீர் குளிர்ச்சி போதாது என்று அதிலும் குளிப்பதில்லை. கடல்நீர்

உப்பு என்று அதிலும் அவன் நீராடுவதில்லை. பூமியைப் பொத்தல் செய்து அடியில் உள்ள பெரும்புறக் கடலின் நீர் அப்பொத்தல் வழியாக விழ அதில் அவன் நீராடுவான்''

இதிலிருந்து அந்தக் காலத்திலேயே இரணியன் நிலத்தடி நீரைத் துளைபோட்டு எடுத்துப் பயன்படுத்தி யிருக்கிறான் என்பது தெரிகிறது. இக்காலத்தில் நாம் ஆழ்குழாய் நீரைப் பயன்படுத்துவதை இது நினைப்பூட்டு கிறது.

இரண்டாவது பாட்டிற்குரிய பொருள் :— ''பெரும் புறக் கடலில் நீராடிய இரணியன் நாகலோகத்திலே உணவு உண்டு, தேவலோகத்திலே பகற்காலத்தைக் கழித்து இரவில் பிரமலோகத்தில் கொலு வீற்றிருப்பான்.

இப்படி வாழ்ந்து வந்த இரணியனுக்குப் பிரகலாதன் என ஒரு மகன் பிறந்தான். உரிய வயது வந்ததும் இரணியன் அவனுக்குக் கல்வி கற்பிப்பதற்காக ஓர் அந்தண ஆசிரியரிடம் அனுப்பி வைத்தான். அந்த ஆசிரியர் வேதத்தைத் துவங்கும் போது ''ஓம் இரணியாய நம'' என உரைக்கும்படி பிரகலாதனிடம் சொன்னார்.

'ஓதப் புக்கு அவன், ''உந்தைபேர் உரை'' எனலோடும்
போதத் தன் செவித் தொளை இரு கைகளால்
பொத்தி,
''மூதக்கோய்! இது நல்தவம் அன்று'' என மொழியா,
வேதத்து உச்சியின் மெய்ப் பொருட் பெயரினை
விரித்தான்

''ஓம் நமோ நாராயணாய!'' என்று உரைத்து. உளம்உருகி
தான் அமைந்து, இரு தடக்கையும் தலைமிசைத் தாங்கி,
பூநிறக் கண்கள் புனல் உக மயிர்ப் புறம் பொடிப்ப,
ஞான நாயகன் இருந்தனன்; அந்தணன் நடுங்கி,

—யுத்தகாண்டம்—இரணியன் வதைப்படலம்
23, 24ம் பாடல்

'ஓம் இரணியாய நம' என்று ஆசிரியர் சொன்னதும் பிரகலாதன் இரு செவிகளையும் கைகளால் பொத்திக் கொண்டு, "ஆசிரியப் பெருமானே. நீவீர் சொன்னபடி சொல்லுவது முறையன்று' எனக் கூறி வேதத்தின் உச்சியில் கூறப்படுகிற உண்மைக் கடவுளின் பெயரை எடுத்துரைக்கத் துவங்கினான்; எட்டெழுத்தாகிய 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரத்தை உளம் உருகக் கூவி, கைகளைத் தலைமேல் கூப்பிக் கண்ணீர் சிந்த ஆசிரியன் நடுங்கப் பிரகலாதன் எடுத்துச் சொன்னான்'' என்பது மேற்கண்ட பாடல்களின் கருத்தாகும். வேதத்துச்சியில் இருக்கும் மெய்ப் பொருள் 'ஓம் நமோ நாராயணாய' என இப்பாடல்கள் கூறுகின்றன. வேதத்தில் பாராட்டப் படுகின்ற மந்திரங்கள் பலவாகும். ஆனால் பிரகலாதன் வாயினால் கம்பன் 'ஓம் நமோ நாராயணாய' என்னும் மந்திரம்தான் எல்லாவற்றிலும் உயர்ந்ததெனக் கூறும்படி செய்கிறான்.

பிரகலாதன் இவ்வாறு சொன்னதும் ஆசிரியன் அதனை மறுத்து, "உன் தந்தை பெயரைத்தான் சொல்ல வேண்டும்'' எனக் கூறுகிறான். அப்பொழுது பிரகலாதன் நாம் முன்னரே எடுத்துக் காட்டியுள்ள இரண்டு பாடல்களில் உள்ள கருத்துக்களைச் சொல்லுகிறான்.

"ஆரைச் சொல்லுவ தந்தண ரருமறை யறிந்தோர்
ஓரச் சொல்லுவ தெப் பொருளுப நிடதங்கள்
தீரச் சொல்பொருள் தேவரும் முனிவருஞ் செப்பும்
பேரைச் சொல்லுவ தல்லது பிறிது மொன்றுளதோ'

வேதத் தானும் நல் வேள்வியினானும்: மெய் உணர்ந்த
போதத்தானும், அப்புறத்துள எப்பொருளானும்
சாதிப்பார் பெறும் பெரும் பதம் தலைக் கொண்டு
சமைந்தேன்;
ஓதிக் கேட்பது பரம்பொருள் இன்னம் ஒன்று உளதோ?

—யுத்த காண்டம்—இரணியன் வதைப்படலம் 29, 30
பாடல்கள்

இப்பாடல்களில் கம்பன் பிரகலாதன் வாக்காக திருமாலைத் தவிர வேறு பரம்பொருள் இல்லையென அறுதியிட்டுக் கூறுகிறான்.

பிரகலாதன் நாராயண நாமத்தைத்தான் சொல்ல வேண்டுமென வலியுறுத்திக் கூறியதும் ஆசிரியன் சென்று இரணியனிடம் செய்தியைத் தெரிவிக்கிறான். இரணியன் பிரகலாதனை அழைத்து ''நீ சொன்ன மந்திரம் யாது?'' என வினவுகிறான். அப்பொழுது பிரகலாதன் ''ஓம் நமோ நாராயணாய' என்பதுதான் நான் சொன்ன மந்திரம்'' என்று சொல்லி அதன் மகிமையை விளக்கப் புகுகிறான்:—

''முக்கண் தேவனும் நான்முகத்து ஒருவனும் முதலா;
மக்கள்காறும், இம்மந்திரம் மறந்தவர் இறந்தார்;
புக்குக் காட்டுவது அரிது; இது பொதுவுறக் கண்டார்
ஒக்க நோக்கினர்; அல்லவர் இதன் நிலை உணரார்.

இப்பாடலில், ''மூன்று கண்களை உடைய சிவபெருமானும் நான்கு முகங்களை உடைய பிரமதேவனும் முதலாகச் சாதாரண மனிதர்கள் அளவும் இந்தத் திருமந்திரத்தை மறந்தவர்கள் இறந்தவர்களே ஆவர். இதன் மகிமை பிறருக்கு எடுத்துக் காட்டுவதற்கு அருமையானது. மத வேறுபாடுகள் பற்றிய பட்சபாதம் இல்லாமல் நடுவுநிலை பொருந்தப் பார்க்கும் ஞானிகள், இதன் மகிமையைக் கண்டுள்ளார்கள். ஞானிகள் அல்லாத பிறர் இதனை உணர மாட்டார்கள்'' எனப் பிரகலாதன் கூறுகிறான். இவ்வாறு எட்டெழுத்தின் பெருமையைப் பிரகலாதன் வாயலாகக் கம்பன் மிக உணர்ச்சியோடு கூறுவது நோக்கத் தக்கதாகும்.

சைவ சமயம் ஐந்தெழுத்திற்கு மேற்பட்ட மந்திரமில்லையெனக் கூறுகிறது. அதன் பெருமையைச் சைவ நூற்கள் மக விாவாகச் சொல்லியிருக்கின்றன. கம்பன் காலத்தல் மக்க வலிவோடு சைவ சமயம் விளங்கியிருந்தும் எட்டெழுததைச் சிவன் ஓதாவிட்டால் அவர் இறந்தவரே.

யாவார் எனக் கம்பன் சொல்லுவதற்கு வைணவ உறைப்பே காரணமாக இருக்க வேண்டும். பிரகலாதன் தானே சொல்கிறான்? கம்பன் சொல்லவில்லையே? என வினவலாம்.

பல ஆண்டுகளுக்கு முன் திரைப்படம் ஒன்று வெளியாயிற்று. அதில் வருகின்ற ஒரு கதாபாத்திரம் மகாத்மா காந்தியைக் கண்டித்துப் பேசுவதாக வசனம் அமைக்கப் பட்டிருந்தது. தணிக்கைக் குழுவினர் அதனை அநுமதிக்க முடியாதெனக் கூறினர். ''கதாபாத்திரம் சூழ்நிலைக்கு ஏற்ப இவ்வாறு பேச வேண்டியதாகி விட்டது; மகாத்மா காந்தியை இழிவு படுத்தும் நோக்கத்தில் இதனை நான் அமைக்கவில்லை'' என வசனகர்த்தா தணிக்கைக் குழு விடம் கூறினார். அக்குழுவினர் அவர் சொல்வதை ஏற்றுக் கொள்ளாமல் அந்தப் படத்திற்குத் தடைவிதித்து விட்டனர். கதாபாத்திரங்கள் சூழ்நிலைக்கு ஏற்பப் பேசுவதாக வார்த்தைகளை அமைக்கத்தாம் வேண்டும். ஆனால் பிற மதத்தலைவர்களையோ, பிறமதத்தையோ புண்படுத்தும் படியான வாக்குகளை அமைக்கக்கூடாது. பாத்திரம் பேசுகிறதெனச் சொல்லித் தப்ப முயல்வதை உலகம் ஒப்புக்கொள்ளாது.

''சிவன் எட்டெழுத்து மந்திரத்தை ஓதாவிட்டால் இறந்தவனே யாவான்'' என வீடணன், பிரகலாதன் வாயிலாகச் சொன்னாலும் அது சைவ சமயத்தவரைப் புண்படுத்துவதாகவே இருக்கிறது. இத்தகைய வாக்கை வைணவ சமயத்தவர்தாம் பாத்திரங்களின் வாக்காக அமைக்க முடியும். சமயப் பொறை உடையவர்கள் இவ்வாறு அமைக்க மாட்டார்கள். எனவே கம்பன் சரியான வைணவன் என்பதை இது தெளிவாகக் காட்டு கிறது.

சென்னைக் கம்பன் கழகப் பதிப்பில் ''இறந்தார்'' என்பது ''மறந்தார்'' எனப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. பல கம்பன் ஏடுகளில் ''இறந்தார்'' என்றேயிருக்கிறது.

''மறந்தார்'' என்றே கொண்டாலும் அது அம்மந்திரத்தை ஓதாத சிவன் செயலற்றுப் போவான் என்பதையே குறிக்கும்.

பிரகலாதன் பேச்சு இரணியனுக்குச் சினத்தை ஊட்டியது. அவன் ''இவ்வாறு நீ பேசக்கூடாது'' எனக் கண்டித்தான். மீண்டும் பிரகலாதன் தந்தைக்குப் பல அறிவுரைகளைக் கூறலானான்.

''வித்து இன்றி விளைவது ஒன்று இல்லை; வேந்த! நின்
பித்து இன்றி உணர்தியேல், அளவைப் பெய்குவேன்;
உய்த்து ஒன்றும் ஒழிவு இன்றி உணர்தற்பாற்று' எனா
கைத்து ஒன்று நெல்லி அம் கனியின் காண்டியால்,

''தன்னுளே உலகங்கள் எவையும் தந்து, அவை
தன்னுளே நின்று, தான் அவற்றுள் தங்குவான்
பின் இலன் முன் இலன் ஒருவன்; பேர்கிலன்;
தொல்நிலை ஒருவரால் துணியற் பாலதோ?''

—யுத்தகாண்டம்— இரணியன் வதைப்படலம் 58,
59ஆம் பாடல்கள்.

இவ்விடத்தில் வைணவ சித்தாந்தத்தைப் பிரகலாதன் சுருக்கமாக எடுத்துரைக்கிறான். இதனையே பின்னர் பிரமதேவன் இராமனுக்கு எடுத்துச் சொல்லுகிறான். அவ்விடத்தில் அச்சித்தாந்தம் பற்றிச் சிந்திப்போம். எவ்வளவோ அறிவுரை பகன்றும் இரணியன் மனமாற்றம் அடையாமல் வெகுண்டு மகனைக் கொல்லுமாறு தன் ஆட்களை ஏவினான். அவர்கள் பல ஆயுதங்களைக் கொண்டு அவனைத் தாக்கினர்; நெருப்புக் குழியில் அவனை இட்டனர்; நாகங்களை விட்டுக் கடிக்கச் செய்தனர். யானையை விட்டு மோதச் செய்தனர். பிரகலாதன் திருமால் நாமத்தையே சொல்லிக் கொண்டிருந்ததால் அவனுக்கு எந்தத் துன்பமும் உண்டாகவில்லை. பின்னர் அவன் உடலில் மலையைக் கட்டிக் கடலில் விட்டனர். அவன் அப்பொழுதும் சாகாமல் மீண்டு

வந்தான். இதனைக் கண்ட இரணியன் தானே மகனைக் கொல்வதாகச் சொல்லி அழைத்துவரச் செய்தான்.

"நீ சொன்ன அரி எங்கேயிருக்கிறான்? அவனை வெளி வரச் செய்'' என மகனிடம் கூறினான்.

'சாணினு முளனோர் தன்மை யணு வினைச் சத கூறிட்ட
கோணினு முளன்மா மேருக் குன்றினும் உளன் இந்நின்ற
தூணினு முளன் சொன்ன சொல்லினு முளனித் தன்மை
காணுதி விரைவின் என்றான் நன்றெனக் கனகன்
சொன்னான்:

இப்பாடலில் திருமால் எங்கும் நிறைந்த வியாபகப் பொருள் என்பதும் அந்தர்யாமியாக ஒவ்வொரு பொருளி னுள்ளும் உறைகிறான் என்பதும் தெளிவாக உணர்த்தப் படுகிறது. இது வைணவ தத்துவத்தின் ஒரு சிறப்பான அம்சமாகும். தூணைக் காட்டிப் பிரகலாதன் இவ்வாறு சொன்னதும் இரணியன் அதனை ஓங்கி அறைந்தான். அப்பொழுது அத்தூணுக்குள் இருந்து நரசிம்ம மூர்த்தி அவனைப் பார்த்துக் கோபச் சிரிப்புச் சிரித்தார்.

'நசை திறந்து இலங்கப் பொங்கி.'' நன்று, நன்று! என்ன
நக்கு
விசை திறந்து உருமுவீழ்ந்ததென்ன ஓர் தூணின், வென்றி
இசை திறந்து உயர்ந்த கையால் எற்றினான்; எற்ற முலாமும்
திசை திறந்து, அண்டம் கீறச் சிரித்தது, அச்செங்கண்சீயம்.
—யுத்த காண்டம்-இரணியன் வதைப்படலம் 127ம் பாடல்

இரணியன் வாளையும் கேடயத்தையும் ஏந்திக் கொண்டு நரசிம்ம மூர்த்தியைத் தாக்கச் சென்றான். அச் சமயம் நரசிம்மப் பெருமான் வெளிப்பட்ட நிகழ்ச்சியைக் கம்பன் மிக ஈடுபாட்டோடு பாடுகிறான்:—

'பிளந்தது தூணும்; ஆங்கே பிறந்தது சீயம்; பின்னை
வளர்ந்தது, திசைகள் எட்டும்; பகிரண்டம் முதல்மற்றும்
அளந்தது; அப்புறத்துச் செய்கையார் அறிந்து
அறையகிற்பார்?
கிளர்ந்தது; ககன முட்டை கிழிந்தது, கீழும்மேலும்

மன்றல் அம் துளப மாலை மானுட மடங்கல் வானில்
சென்றது தெரிதல் தேற்றாம்; சேவடி படியில் தீண்ட
நின்றது ஓர் பொழுதின், அண்ட நெடுமுகட்டு இருந்த முன்னோன்
அன்று அவன் உந்தி வந்தானாம் எனத் தோன்றினானால்

—யுத்தகாண்டம்-இரணியன் வதைப்படலம் 130, 131 ம் பாடல்கள்.

நரசிம்மமூர்த்தி கொண்ட பெருவடிவை இதற்கு மேல் யாரும் வர்ணிக்கமுடியாது. விசுவரூபம் கொண்ட நரசிம்மமூர்த்தி இரணியனுக்குத் துணை நின்ற அசுரர் களை எல்லாம் வாரி வாரி விழுங்கினார். அம்மூர்த்தியை நோக்கித் தொழும்படி இரணியனைப் பிரகலாதன் வேண்டினான். அதற்கு இரணியன்

'கேள், இது; நீயும் காண, கிளர்ந்த கோள் அரியின் கேழ் இல்
தோளோடு தாளும் நீக்கி, நின்னையும் துணித்து, பின், என்
வாளினைத் தொழுவது அல்லால், வணங்குதல் மகளிர் ஊடல்
நாளினும் உளதோ?'' என்னா, அண்டங்கள் நடுங்க நக்கான்

—யுத்தகாண்டம்-இரணியன் வதைப்படலம்

''நான் நரசிங்கத்தை வாளால் கொன்று பின் அவ் வாளைத்தான் தொழுவேன்'' எனக் கூறி இரணியன் நரசிங்கத்தோடு போர் செய்யச் சென்றான். நரசிங்கம் அவன் மார்பினைப் பிளந்து கீழே வீழ்த்தியது. அக் கண்டம் அவன் உயிர் துறந்தான். தேவர்கள் திரண்டு வந்து நரசிங்க மூர்த்தியைத் தொழுதனர்.

'என்று ஆங்கு இயம்பி, இமையாத எண் கணனும்
வன் தாள் மழுவோனும், யாரும் வணங்கினரால்
நின்றார், இருமருங்கும்; நேமிப் பெருமானும்
ஒன்றாத சீற்றத்தை உள்ளே ஒடுக்கினான்.

—யுத்தகாண்டம்-இரணியன் வதைப்படலம் 161ம்பாடல்.

இப்பாடலில் பிரமதேவனும், சிவபெருமானும் தேவர்களும் நரசிங்கப் பெருமானை வணங்கினர் எனக் கூறப்படுகிறது.

பிரம்ம தேவனுக்குரிய மதம் "இரணிய கர்ப்பம்" என்று சொல்லப்படும். அது சைவத்திற்குள்ளும், வைணவத்திற்குள்ளும் கலந்து விட்டதால் அதற்குத் தனித்தன்மை இல்லாமல் போய்விட்டது. அதனால் பிரமதேவன் நரசிங்கத்தை வணங்கினான் என்பதை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை தனித்தன்மை வாய்ந்த சைவமதத்தில் முழுமுதற் பொருளாக விளங்கும் சிவபெருமான் நரசிங்க மூர்த்தியை வணங்கினான் என வைணவ சமயத்தினர் தான் துணிந்து சொல்ல முடியும். கம்பன் வைணவ சமயத்தினனாக இருப்பதால்தான் இவ்வாறு பாத்திரத்தின் வாயிலாகப் பேசியிருக்கிறான் என முடிவு காண வேண்டியதிருக்கிறது.

"நரசிங்கப் பெருமானின் சீற்றத்தை மாற்றுவதற்காகத் தேவர்கள் திருமகளை அனுப்பினார்கள் அவளைக் கண்டு அவர் சீற்றம் ஒடுங்கினார். பிரகலாதனுக்கு அவர் வரம் அருளித் தேவர்களைப் பார்த்து அவனுக்கு முடிசூட்டும்படி பணித்தார். பிரகலாதன் தேவர்களால் முடிசூட்டப்பெற்று மூவுலகையும் ஆண்டான்" என வீடணன் இராவணனுக்கு இவ்வரலாற்றைக் கூறி முடிக்கிறான். இவ்வரலாற்றைச் சொல்லும் கம்பனின் மனோபாவத்தை நோக்கும் போது அவன் வைணவக் கோட்பாட்டில்ஆழமான பிடிப்புக் கொண்டவன் என்பது புலனாகிறது.

சீதாப்பிராட்டியார் அசோகவனத்திலிருந்து மீண்டு வந்ததும் தம் கற்பை நிரூபிப்பதற்காக அக்னிப்பிரவேசம் செய்தாள். அதன் பின் பிரமன் தோன்றி இராமனுக்கு அவன் உண்மை நிலையை உணர்த்துகின்றான். அதில் வைணவ சித்தாந்தஉண்மைகளை எடுத்துப் பேசுகிறான்.

'எனக்கும், எண்வகை ஒருவற்கும், இமையவர்க்கு இறைவன்
தனக்கும், பல் பெருமுனிவர்க்கும் உயிருடன் தழீ இய
அனைத்திறுக்கும், நீயே பரம் என்பதை அறிந்தார்
வினைத் துவக் குடை வீட்ட அருந்தளை நின்று மீள்வார்.

—யுத்தகாண்டம்-மீட்சிப்படலம் 103 ம் பாடல்.

எனக் கூறுகிறான். இதில் "தனக்கு மட்டும் இராமன் தலைவன் அல்லன்; சிவபெருமானுக்கும் அவனே பரம்" எனப் பிரமன் சொல்லுகிறான். பிரமன் வாயால் சிவபெருமானுக்கும் இராமனே பரம் எனச் சொல்ல வைத்திருப்பது கம்பனின் வைணவ மனப்பான்மையைக் காட்டுகிறது. இவ்விடத்தில் வைணவ சித்தாந்தம் பற்றி நாம் சிறிது அறிந்து கொள்ள வேண்டும்.

இராமானுஜர் பிரமசூத்திர உரையில் விசிட்பித்துவித தத்துவத்தைச் சொல்லுகிறார். "யாராலும் படைக்கப் படாதஅநாதியாக உள்ள உலகமும், உயிர்களும் திருமா லிடத்தே அடங்கியிருக்கின்றன; அவன் அவற்றை வெளிப் படுத்திஇயக்குகிறான். எனவே அவனே உபாதானகாரண னாகவும் நிமித்த காரணனாகவும் விளங்குகிறான்" என அவர் கூறுகிறார், சங்கரர் பிரம்மத்தைத் தவிர வேறு பொருள்இல்லைஎன்றும்,ஆன்மாதன்னைப்பிரம்மம்என்று உணர்வதே முக்தி என்றும் சொல்லுகிறார். "அத்வைதம்" என்னும் சொல்லுக்கு, "இரண்டு இல்லை" எனச் சங்கரர் கொண்ட பொருளையே இராமானுஜர் ஒப்புக் கொண்டு, பிரம்மத்திற்கு விசேடணமாக உலகமும், உயிர்களும் உண்டெனக் கூறுகிறார். இதனால்தான் அவரது சித்தாந்தத்திற்கு "விசிட்பித்துவிதம்" எனப் பெயர் வந்தது. உலகத்தையும் உயிர்களையும் தன் வயிற்றினுள் அடக்கி வைத்திருந்து திருமால் வெளிப் படுத்துகிறார் என்னும் கருத்தை ஆழ்வார்கள் தம் பாடல் களில் நிறைய எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சங்கரர் ,'நான் பிரமம்" அதாவது "ஆன்மாவே பிரமம்" எனச் சொல்வதை இராமானுஜர் வன்மையாகமறுத்திருக்கிறார்.

"நான் பிரமம்" என்னும் கொள்கையை மறுப்பதற்காகவே வைணவ புராணங்கள் இரணியன் கதையை எடுத்துக் கூறியிருக்கின்றன, "பிரமம்" என்பது திருமாலே என்றும், அவனுக்கு மேற்பட்ட பொருள் வேறில்லை என்றும் இராமானுஜர் தம் பிரம சூத்திர உரையில் நிலைநாட்டுகிறார்.

பரநிலையில் உள்ள மூர்த்திகள் பற்றித்தாம் ஆழ்வார்களுக்கும் வைணவ ஆசாரியர்களுக்கும் வேறுபாடிருப்பதாகத் தெரிகிறது. மற்ற கொள்கைகள் அனைத்தும் அவர்களுக்குள் ஒன்றாகவே காணப்படுகின்றன. உயிர்கள் மாயை காரணமாகக் கர்ம வசப்பட்டு உழல்கின்றன என்றும் அவை பக்தியாலும் பிரபத்தியாலும் திருமாலின் அடியைப் பற்றி உய்கின்றன என்றும் வைணவம் சொல்கிறது. உலகிடை நிற்கும்போது எந்த ஆன்மாவும் ஜீவ முக்தி நிலையை அடையமுடியாதென்றும், பரமபதமாகிய வைகுண்டத்தில் தான் அஃது அப்பிராகிருதத் திருமேனியோடு சாந்நித்திய முக்தியைப் பெறும் என்றும் அது கூறுகிறது. இச்சித்தாந்தக் கருத்துக்களைப் பிரகலாதனும், பிரமதேவனும் எடுத்துச் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லும்போது,

'ஐ-அஞ்சு ஆகிய தத்துவம் தெரிந்து, அறிந்து அவற்றின்
மெய் எஞ்சாவகை மேல் நின்ற நினக்கு மேல யாதும்
பொய் எஞ்சா இலது' என்னும் ஈது அருமறை புகலும்
வய்யம் சான்று; இனி சான்றுக்குச் சான்று இலை வழக்கால்

—யுத்தகாண்டம்-மீட்சிப்படலம் 104ம் பாடல்

எனப் பிரமதேவன் கூறுகிறான். ஐ-அஞ்சு - அதாவது இருபத்தைந்து தத்துவங்களைத் தாம் கம்பன் இங்கே பேசுகிறான். வைணவ சித்தாந்தம் இருபத்தைந்து தத்துவங்களைத்தாம் ஒப்புக்கொள்கிறது. சைவ சித்தாந்தம் 36 தத்துவங்கள் பற்றிப் பேசுகிறது. கம்பன் எந்தச் சித்தாந்தமும் பேசவில்லை எனச் சிலர் சொல்வது

தலறாகும். அவன் வைணவ சித்தாந்தக் கருத்துக்களைத் தன் பாடல்களில் நிறைய எடுத்துரைத்திருக்கிறான். வேறு சித்தாந்தங்கள் பற்றி அவன் எதுவும் பேசவில்லை, வைணவ சித்தாந்தம் ஒன்றையே அவன் விவரித்துச் சொல்வதால் அவன் வைணவ சமயத்தினன் என்பது இனிது புலனாகிறது.

கம்பராமாயணத்தில் காண்டத்திற்குக் காண்டம் கம்பன் கடவுள் வணக்கம் பாடியிருக்கிறான். முதற் காண்டமாகிய பாலகாண்டத்தின் துவக்கத்தில் அவன் பாடியுள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிந்தனைக் குரியனவாகும்.

'உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்,
நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா
அலகு இலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே!

—பாலகாண்டம்—பாயிரம்—1ம் பாடல்.

இப்பாடலில், "படைத்தலைச் செய்யும் பிரமாவும் காத்தலைச் செய்யும் திருமாலும் அழித்தலைச் செய்யும் சிவனும் தங்கள் தங்கள் தொழில்களைச் செவ்வனே செய்வதற்கு முதற்காரணமாகப் பரநிலையில் விளங்கு கின்ற பரநிலைத் திருமாலே நம் தலைவராவார். அவர்க்கு நாங்கள் அடைக்கலம்" எனச் சொல்லப் பட்டுள்ளது முதல் பாடலைப் பரநிலைப் பரம்பொருள் வணக்கமாகக் கம்பன் செய்திருக்கிறான் படைத்தல் என்பது சூக்கும நிலையிலிருந்து தூல நிலைக்குப் பொருட்களைக் கொண்டு வருவதேயாகும். இல்லாததை உண்டாக்குவது படைப்பிற்குரிய பொருள் அன்று. படைத்தல், காத்தல், அழித்தல் மூன்றையும் இயக்குகின்ற பரநிலைத் திருமாலுக்கு இத் தொழில்கள் எவ்வித சிரமமுமின்றி விளையாட்டுப் போலச் செய்யப்படுவன வாகும். இதனாலேயே "அலகிலா விளையாட்டுடையார் அவர்" எனக் கம்பன் கூறியிருக்கின்றான். இதனைப்

பொதுப்பாடலெனக் கொள்வோரும் உண்டு; அவர்கள் கருத்துப் பொருந்தாது என்பதை அடுத்த பாடல் காட்டுகிறது.

'சிற்குணத்தர் தெரிவு அரு நல் நிலை
எற்கு உணர்த்த அரிது; எண்ணிய மூன்றனுள்
முற்குணத்தவரே முதலோர்; அவர்
நற்குணக் கடல் ஆடுதல் நன்று அரோ,

—பாலகாண்டம்—பாயிரம் 2-ம் பாடல்

இதன் பொருள் வருமாறு: சிற்குணத்தவர்களும் அதாவது ஞானிகளும் இறைவன் நிலையை அறிந்து உணர்த்த முடியாது. ஆயினும் சத்துவம்,இராசதம்,தாமதம்என்னும் மூன்று குணங்களுள் சிறந்த குணமாகிய சத்துவ குணத்தை உடைய திருமாலே முதல் மூர்த்தியாவன். அவன் குணப்பெருங்கடலிலே நாம் ஆடுவோமாக!''

மூன்று மூர்த்திகளுள் திருமால்தான் முதலோன் எனத் தெளிவாக இப்பாடல் கூறுகிறது. முதல் பாட்டைப் பரநிலைப் பாட்டு என்றும் இதனை வியூகநிலைப்பாட்டு என்றும் கொள்ளுவது பொருத்தமாகும். எப்படியிருப்பினும் திருமாலே முதலோன் என்பது இதனால் தெளிவாகிறது. காவியத்திற்கேற்ற வணக்கத்தைக் கம்பன் சொல்லுகிறான் எனக் கூறுவோர் உண்டு. அப்படிக் கூறினாலும் சிவனையும் பிரமாவையும் சுட்டி அவர்களுக்கு மேற்பட்டவன் திருமால் எனச் சொல்வதால் கம்பன் வைணவ உணர்வு மிகவே இதனைப் பாடியிருக்கிறான் என்பது தெளிவு. காவியத்திற்கு ஏற்ற வணக்கமாக இருந்தால் மற்ற இரண்டு மூர்த்திகளையும் கொண்டு வராமல் பொதுவாக திருமால் புகழைப் பாடியிருக்க வேண்டும்.

'ஆதி, அந்தம் அரிஎன, யாவையும்
ஓதினார், அலகு இல்லன, உள்ளன
வேதம் என்பன மெய்ந் நெறி நன்மையன்
பாதம் அல்லது பற்றிலர் பற்று இலார்

—பாலகாண்டம்—பாயிரம் 3ம் பாடல்.

''வேதத்தை ஓதத் துவங்கும் போதும் முடிக்கும் போதும், 'ஹரி ஓம்' என்று சொல்லுவதே பெரியோர்கள் கையாளும் மரபாகும். அத்தகைய பெரியோர்களுக்கு அரியாகிய திருமாலின் பாதம் அல்லது வேறு பற்றில்லை.''

இப்பாடலில் 'அரி' என்றே தெளிவாகச் சொல்லி விட்டதால் திருமாலைக் குறித்துத்தான் கம்பன் கடவுள் வணக்கம் பாடுகிறான் என்பதை மறுக்க இயலாது. இதே போலக் காண்டத்திற்குக் காண்டம் அவன் பாடுகின்ற பாடல்களும் திருமாலைக் குறிப்பனவேயாகும். கடைசியாக உள்ள யுத்த காண்டத்தில் கம்பன் பின்வரும் கடவுள் வணக்கப் பாட்டைப் பாடியிருக்கிறான்:—

'ஒன்றே' என்னில், ஒன்றே ஆம்;
'பல' என்று உரைக்கின், பலவே ஆம்;
அன்றே என்னில், அன்றே ஆம்;
'ஆமே' என்னில் ஆமே ஆம்;
'இன்றே' என்னில் இன்றே ஆம்;
உளது என்று உரைக்கின், உளதே ஆம்
நன்றே, நம்பி குடி வாழ்க்கை;
நமக்கு இங்கு என்னோ பிழைப்பு? அம்மா!

—யுத்தகாண்டம்—கடவுள் வாழ்த்து 1ம் பாடல்.

'ஒன்றே' என்னில் ஒன்றே ஆம்—பரநிலையில் மூவுருவாக இருந்தாலும் அவர் ஒருவரே எனக் கூறுவது பொருத்தமே யாகும். பல என்று உரைக்கில் பலவே ஆம்—மூவுருவாக இருப்பதால் ''பல'' எனச் சொல்வதும் ஏற்புடையதே யாகும். இதனை நம்மாழ்வார்,

''ஒன்றெனப் பலவென வறிவரும் வடிவினுள் நின்ற, நன்றெழில் நாரணன்'' என்று அருளியிருக்கிறார். ''அன்றே எனில் அன்றேயாம்''—எந்தப் பொருளைச் சுட்டினாலும் அஃது இறைவனாக மாட்டாது. அதனால் ''அன்றேயாம்'' எனவும் கூறலாம். ''ஆம் என்றுரைக்கில்

ஆமேயாம்''—ஒளியுடைப் பொருள்களைச் சுட்டிக்காட்டி ''இதுபோல இறைவன் இருப்பான்'' என்று சொன்னால் அஃதே ஆம்—இறைவனை இப்படி இருப்பான் எனச் சொல்ல முடியாததைத்தான் கம்பன் இவ்வாறு கூறுகிறான். இதனையே நம்மாழ்வார் திருவாய் மொழியில்'படியே இது வென்றுரைக்கலாம் படியனல்லன்' எனக் கூறுகிறார். ''இன்றே என்னில் இன்றே ஆம்'—கடவுள் இல்லை என்பதற்குக் கருத்தாவாக அவன் இருப்பதால் 'இன்றே ஆம்' என்றும் கூறலாம். ''உளதென்று உரைக்கின் உளதேயாம்''—கடவுள் உளது எனில் உளதாய் இருக்கும் என்றும் கூறலாம். இதனை நம்மாழ்வார்

> உளன் எனில் உளன் அவனுருவம் இவ்வுருவுகள்
> உளனலன் எனிலவன் அருவம் இவ்வுருவுகள்
> உளனென இலனென இவை குணமுடையான்
> உளனிரு தகைமையோடு ஒழிவிலன் பரந்தை

எனக் கூறுகிறார். கடவுளைக் கூறுமிடத்தில் இவ்வாறு பலவாகக் கூறவேண்டியிருப்பதால் ''நன்றே நம்பி குடி வாழ்க்கை'' என்றும் ''நமக்கு இங்கு என்னோ பிழைப்பு?'' என்றும் கம்பன் இரங்கிக் கூறுகிறான். ''கடவுளை நாம் அறிந்து சொல்ல முடியாது. அவன் அருளால்தான் அறிய வேண்டும்'' என்பது இப்பாடலின் கருத்தாகும். நம்மாழ்வாரும், ''கோணை பெரிதுடைத் தெம் பெம்மானைக் கூறுதலே' எனக் கூறியிருக்கிறார். இப்பாடலைக் கூர்ந்து நோக்கினோமானால் அஃது ஆழ்வார் பாசுரங்களை அப்படியே பிரதிபலிக்கிறது என்பது புலனாகும். திருமாலைப் பற்றிப் பேசும் பொழுதெல்லாம் ஆழ்வார்களைப் பின்பற்றியே கம்பன் பாடல்களை அமைத்திருக்கிறான். இந்திரன் துதி, கருடன் துதி முதலியவற்றிலும் திருமாலை இவ்வாறே கம்பன் சிறப்பித்துப் பாடியிருக்கிறான்.

ஆழ்வார்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கம்பன் பாடுவதால் அவனைச் சிறந்த வைணவன் என்றே கொள்ள வேண்டியதிருக்கிறது.

கிட்கிந்தா காண்டத்தில் அனுமன் முதலியோரைச் சீதையைத்தேடி வருமாறு அனுப்பும்போது சுக்கிரீவன் அவர்களிடம் பின்வருமாறு கூறுகின்றான்.

'அரன் அதிகன்; உலகு அளந்த அரி அதிகன்
என்று உரைக்கும் அறிவிலோர்க்குப்
பரகதி சென்று அடைவு அரிய பரிசேபோல்
புகல் அரிய பண்பிற்று ஆமால்;
சுர நதியின் அயலது, வான் தோய் குடுமிச்
சுடர்த் தொகைய, தொழுதோர்க்கு எல்லாம்
வரன் அதிகம் தரும் தகைய, அருந்ததி ஆம்
நெடுமலையை வணங்கி, அப்பால்

—கிட்கிந்தா காண்டம்—நாடவிட்டபடலம்
24ம் பாடல்.

இப்பாடலில் வரும், ''அரன் அதிகன், உலகு அளந்த அரி அதிகன் என்று உரைக்கும் அறிவிலோர்க்குப் பரகதி சென்று அடைவு அரிய பரிசே போல்'' என்னும் அடிகள் பலருக்குக் குழப்பத்தை விளைவித்திருக்கின்றன. ''சிவன் பெரியவனா? திருமால் பெரியவனா? என வாதிடுவோர் அறிவில்லாதவர்கள். அவர்கள் பரகதி சென்று அடைய முடியாது'' என்பது இவ்வடிகளின் பொருளாகும். இங்கே கம்பன் சமரசம் பேசியிருக்கிறான் என்று பலர் கருதுகின்றனர். விராதன் துதியில், ''திருமாலே பெரியவன்'' எனச் சொல்லி உள்ள பாடலை முன்னர் எடுத்துக் காட்டியுள்ளோம். எனவே சிவன் அதிகனா? திருமால் அதிகனா? என விவாதிப்போர் அறிவில்லாதவர் என்றால் கம்பனும் அறிவில்லாதவனாகி விடுவான். கம்பனின் முன்பின் பாடல்களைக் கவனித்தே இவ்வடிகளுக்குப் பொருள் சொல்ல வேண்டும். பரசுராமப் படலத்தில் ''சீரிது தேவர் தங்கள் சிந்தனை'' என்னும் பாடலில் 'மூலத்து ஒருவராம் இருவர்' எனக் கம்பன் கூறியிருப்பதை முன்னர் எடுத்துக் காட்டியிருக்கிறோம். மூல நிலையாகிய பரநிலையில் திருமாலும் சிவனும் ஒருவராகவே விளங்குவர். திருமாலே தலைவராக

இருந்தாலும் இருவரும் ஒருவராக விளங்கும் நிலையில் அவர்களுள் யார் பெரியவர்? என்னும் விவாதத்தை எழுப்புவது அறியாமையாகும். அவ்வாறு எழுப்பினால் பரகதிக்கு அதாவது பரநிலையில் இருக்கின்ற பெருமானின் திருவடிக்குச் செல்வது தடைப்படும்'' என்பதே இவ்விடத்தில் கம்பன் கூறும் கருத்தாகும்.

சிவனுக்கும் உருத்திரனுக்கும் சைவத்தில் வேறுபாடுண்டு. மும்மூர்த்திகள் எனப்படுவோர் பிரம, விஷ்ணு, ருத்திரர் என்றும் சிவன் அவர்களின் வேறாய் முழுமுதற் கடவுளாக விளங்குபவன் என்றும் சைவ சித்தாந்தம் சொல்லும். சில சமயம் இடம் நோக்கிப் பேதம் இன்றியும் பேசும். வைணவம் சிவ—ருத்திரபேதம் இன்றி இருவரையும் எப்பொழுதும் ஒருவராகவே கொள்ளும். கம்பன் வைணவ சித்தாந்தப்படி உருத்திரனையும், சிவனையும் ஒருவனாகவே கொண்டு எவ்விடத்தும் பாடியிருக்கிறானாதலால் அவனை வைணவன் என்றே தான் கொள்ள வேண்டியுள்ளது.

''முப்பரம் பொருளுக்குள் முதலை மூலத்தை'' எனக் கம்பன் தன் வாக்காகத் திருமாலே பரம்பொருள் எனக் கூறுவதால் அந்த ஒன்றே அவன் வைணவன் என நினைப்பதற்குப் போதுமானதாகும்.

6. நிறைவுரை

கம்பன் வைணவன் எனச் சொல்லுவது சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். உண்மை கசப்பாக இருப்பதற்காக அதனை மறுப்பது நியாயமாகாது. அந்தக் காலத்தில் ஒவ்வொரு கவிஞனும் ஏதேனும் ஒரு மதத்தைச் சார்ந்தவனாகவே இருப்பான். சைவமும், வைணவமும் கம்பன் காலத்தில் தழைத்தோங்கியிருந்தன. இவ்விரு சமயங்களுள் ஒன்றைப் பின்பற்றுபவனாகவே அவன் இருந்திருக்க வேண்டும்,

சமயப் பொறையுடன் பேசுகின்ற அக்காலக் கவிஞர்கள் கூடத் தம் மதத்தில் அழுத்தமாகவே இருந்திருக்கின்றனர் என்பதை இளங்கோவடிகள் மூலம் அறிகின்றோம். நாம் நமக்குரிய சமயத்தைச் சார்ந்திருப்பதில் எவ்வித இழிவும் இல்லை. இதுபோலக் கம்பன் அவனுக்குரிய வைணவ மதத்தைச் சார்ந்திருப்பதை நாம் குறை கூறமுடியாது. அக்காலத்தில் வைணவ சமயத்தினர் சைவ சமயத்தைக் குறைத்தும், சைவ சமயத்தினர் வைணவ சமயத்தைக் குறைத்தும் பேசிவந்திருக்கின்றனர். கம்பன் இதற்கு விதிவிலக்கன்று. கம்பனை நாம் அவன் பாடியிருக்கின்ற காவியத்தில் காணப்படும் சொற்சுவை, பொருட்சுவைக்காகவே மதிக்கிறோம். அபாரமான காவிய நயத்தோடு அவன் பாடியிருப்பதால் அப்பாடல்கள் நம்மைக் கவர்கின்றன. சிவனைப் பற்றிப் பாடும் பொழுதும் கூடக் கம்பன் அருமையான சொற்களைக் கையாண்டிருக்கிறான்.

தேவார ஆசிரியர்கள் இராவணன் கைலையைத் தூக்கும் பொழுது சிவபெருமான் தன் திருவடிப்பெருவிரல் நுனியால் அம்மலையை அழுத்தினார் என்றே கூறியிருக்கின்றனர். கம்பனோ இதனைப் பாடும் பொழுது, "சிவபெருமான் தன் சேவடிக் கொழுந்தால் அம்மலையை அழுத்தினார்" எனக் கூறுகிறான். "கொழுந்து" என்னும் சொல் நம் உள்ளத்தைத் தொடுகிறது. காவிய நயத்திற்காகத்தான் கம்பனை எல்லா மதத்தினரும் பாராட்டுகின்றனர். அவரவர் மதத்தைஅவரவர் உயர்த்திப் பேசுவதை அக்கால வழக்கெனக் கொண்டு தள்ளிவிடுவதே அறிவுடைமையாகும்.

சீவகசிந்தாமணி, சமண காவியம் என்பதை யாவரும் அறிவர். அதனைப் பதிப்பிப்பதற்காகச் சைவராகிய சாமிநாத அய்யர் அவர்கள் பட்டபாடு கொஞ்சம் அன்று, இன்று எல்லாச் சமயத்தையும் சார்ந்த தமிழ்ப்பெருமக்கள் இலக்கியச் சுவைக்காக அதனைப் பயில்வதை நாம் அறிவோம்.

மணிமேகலை ஒரு பௌத்த காவியம். அதில் சைவத்தையும், பிற மதங்களையும் எவ்வளவோ குறைத்து சொல்லப்பட்டிருக்கிறது. சாமிநாத அய்யர் அவர்கள் அதற்கு உரை எழுதும் பொழுது அதன் சொற்சுவை, பொருட்சுவைகளை வியந்து பாராட்டியிருக்கிறார். பௌத்த மதக் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காகப் பல பௌத்த அறிஞர்களோடு கலந்து பேசி அவற்றை மணிமேகலைப் பதிப்பில் விரிவாக எழுதியிருக்கிறார்.

"தேம்பாவணி" ஒருகிறித்துவ காவியம் "இரட்சண்ய யாத்திரை" என்னும் நூலும் அதுபோலக் கிறித்துவ சமயத்தைச் சார்ந்த காவியமாகும். உமறுப் புலவர் பாடிய 'சீறாப்புராணம்' நபிகள் நாயகம் வரலாற்றைக் கூறும் இஸ்லாமியக் காப்பியம் ஆகும் அவற்றை எல்லாம் மத வேறுபாடு கருதாமல் தமிழ் இலக்கியம் என்னும் அளவில் நாம் உளமாரச் சுவைக்கின்றோம். கம்பன்

வைணவன் என்பதற்காக அவன் காவியத்தின் பெருமை ஒரு போதும் குன்றாது. எல்லாச் சமயத்தினரும் அக் காவியத்தைப் படித்து மகிழவே செய்வர். ''சமரசவாதி'' என்றும் ''சைவன்'' என்றும் அவனைச் சொல்லிச் சிறப்பளிக்க வேண்டிய அவசியம் எதுவுமில்லை. அவன் காவியமே அவனுக்குப் பெரும் சிறப்பை வழங்கும்.

இந்நூலை எழுதியிருக்கிற நான் பிறப்பால் சைவன் என்பது மட்டுமில்லாமல் சைவசித்தாந்தத்தில் அளவற்ற ஈடுபாடுடையவன் என்பதைத் தமிழ் உலகம் நன்கறியும். நான் இந்நூலில் வைணவ சித்தாந்தக் கருத்துக்களை வைணவ சித்தாந்தப்படியேதான் எழுதியிருக்கிறேன். வைணவசித்தாந்தம் சரியா?பிழையா? என்னும் ஆராய்ச்சியில் நான் இறங்கவில்லை. அந்தந்தச் சித்தாந்தத்தை அந்தந்தச் சித்தாந்தத்தின் படிதான் எழுத வேண்டும். என் கருத்துக்கு இழுக்காமல் கம்பனைக் கம்பனாகவே கொண்டு இந்நூலில் ஆராய்ந்திருக்கிறேன்.

சைவ சித்தாந்திகள் இதனைக் கண்டு மருட்சி அடையக் கூடாது. நான் வைணவ சித்தாந்தக் கருத்துக்களை எழுதுகின்ற பணியை மேற்கொண்டதால் அதன்படி எழுதுவதுதான் முறையாகும். இனிப் பரநிலை பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

நம்மாழ்வார் நான் முன்னர் எடுத்துக் காட்டியபடி,

''ஏறாளும் இறையோனும், திசைமுகனும் திருமகளும்
கூறாளும் தனியுடம்பன்

எனத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். சிவனும் நான்முகனும், திருமாலின் உடம்பில் இடம் பெற்றிருப்பதை இப்பாடல் மிக விளக்கமாகக் கூறுவதால் இதனை யாரும் மறுக்க முடியாது. உரையாசிரியர்களும் இதனை மறுக்கவில்லை, ''சிலகாலம்,'' ''பலகாலம்'' என வேறுபாடுகள் சொல்லுகின்றார்களேயன்றித் திருமால் உடம்பில் சிவனும், நான்முகனும் இடம்

பெற்றிருப்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள், இப் பாட்டு பரநிலையைக் குறிக்கின்ற பாட்டு என நான் சொல்லுவதற்கு ஆதாரம் கம்பன்தான். அவன் ''மூலமும், நடுவும், ஈறும'' என்னும் பாட்டில் ''காலமும் கணக்கும் நீத்த காரணன் சூலமும் திகிரி சங்கும் கரகமும் துறந்து வந்தான்'' எனப் பரம்பொருள் நிலையைச் சுட்டுகிறான். இதனாலேயே இதனைப் பரம்பொருள் பாட்டெனச் சொல்ல வேண்டியதாயிற்று. மேலும் சுக்கிரீவன் ''முளரிமேல் வைகுவான்' என்னும் பாடலில் சொல்லுவது பரநிலையைக் குறிக்கும் எனப் பொருள் கொண்டால்தான் பொருத்தமாக இருக்கும்; இல்லையேல் மூலம்பரம் பொருள் எனக் கம்பன் சொல்லும் திருமால் சிவனும் பிரமாவும் இல்லாவிட்டால் வலிமையற்றவர் ஆகிவிடுவார் என்னும் விபரீதப் பொருள் கொள்ள வேண்டியது வரும். ஆகவே பரநிலை என்றும், வியூகநிலை என்றும் பிரித்துப் பொருள் கொள்ளுவதுதான் கம்பன் பாடல்களுக்கு ஏற்றவையாக இருக்கும். கம்பன் பாட்டுடைத் தலைவனைப்புகழ்வதற்காகவே பலவாறாகப் பாடியிருக்கிறான் என்னும் ஓர் எண்ணத்தைத் தமிழ் நாட்டில் அறிஞர்கள் உண்டாக்கியிருக்கிறார்கள். அதனை மாற்றுவதற்காகவே இந்நூலை எழுதியிருக்கிறேன்.

பரநிலை, வியூகநிலை பற்றிய விவரங்களை வைணவ நூற்களில் பரக்கக் காணலாம். வை.மு. கோபாலகிருஷ்ண மாச்சாரியார், கம்பராமாயணம் பாலகாண்டம் கடிமணப் படலத்தில் வரும் ''முப்பரம் பொருளுக்குள் முதலை மூலத்தை'' என்னும் பாடலுக்கு உரை எழுதும்போது, ''பரம், வியூகம், விபவம், அர்ச்சை, அந்தர்யாமிகத் தத்துவம்'' என்னும் ஐவகை நிலைகளைக் குறித்திருக் கிறார். சந்தேகப்படுவோர் அவர் உரையில் இதனைக் கண்டு தெளியலாம்.

கம்பன் காவியம் பற்றி எத்தனையோ வகையான நூற்கள் வெளியாகி இருக்கின்றன. அவற்றுள் எந்த

நூலும் பரம், வியூகம் என்னும் வேறுபாட்டை அறிந்து உரை கண்டதாகத் தெரியவில்லை. எனக்குத் தெரியாமல் யாரும் எழுதியிருக்கவும் கூடும்.

பரம், வியூகம் என்னும் இருவகை நிலைகளை வைத்துக் கம்பன் பாடல்களுக்குப் பொருள் கண்டால்தான் அவன் பாடியுள்ள பாடல்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று முரணாமல் தெளிவாகப் பொருள் தரும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இதனை முடிக்கும் சமயம் வைணவ அன்பர் ஒருவர் பின் வரும் மூன்று வினாக்களை எழுப்பினார்.

வினா 1. திருமால் உடம்பில் சிவனும், நான்முகனும் இடம் பெற்றால் அவர்களுக்குரிய தேவிமார்கள் எங்கே இடம் பெறுவார்கள்?

வினா 2. 'முளரி மேல் வைகுவான்' என்னும் சுக்ரீவன் பாட்டில் இராமனுக்கு ஈடாக யாரும் இல்லை என்பதை அவன் மீது கொண்ட ஈடுபாட்டால் கம்பன் சொல்லு கிறான். வான்மீகி, ''இராமன் மலைக்கு ஒப்பாக மாட்டான்'' ''கடலுக்கு ஒப்பாக மாட்டான்'' என்று சொல்லுவது போலச் சுக்ரீவன் சொல்லியிருக்கிறான். திருமால் இராமனுக்கு ஈடாக மாட்டார் என்பது இராமன் மீது கொண்ட ஈடுபாட்டைக் குறிக்குமேயன்றி அவன் திருமால்அல்லன் என்பதைக் குறிக்காது; இது பற்றித் தங்கள் கருத்தென்ன?

வினா 3. பாத்திரங்கள் பேசுவதை வைத்துக் கம்பன் கருத்து இதுதான் எனச் சொல்லுவது பொருத்தமாகுமா? இம்மூன்று வினாக்களுக்கும் பின்வருமாறு விடையளித்தேன்.

1 அந்தந்த மூர்த்திகளுக்குரிய தேவிமார்களும், ஆயுதங்களும் இருப்பிடங்களும் அந்தந்த மூர்த்தியிடம் ஒடுங்கி இருக்க அவர்கள் திருமால் உடம்பில் இடம் பெறுவார்கள், இது காரணமாகத்தான் நம்மாழ்வார் 'என் மலைமகள் கூறன் என்கோ' எனப் பாடியிருக்கிறார். கம்பனும் 'சூலமும் திகிரியும்' துறந்து எனப் பாடியுள்ளார். இருநிலையிலும் இதனால் தான் பேதமின்றி அந்தந்த மூர்த்திகளுக்குரிய அடையாளங்களை ஆழ்வார்கள் சொல்லியிருக்கிறார்கள்.

2. இராமன் மீதுள்ள ஈடுபாட்டால் திருமால் அவனுக்கு இணையாக மாட்டார் எனச் சொல்லலாம். ஆனால் திருமாலும், சிவனும். பிரமாவும் சேர்ந்து அவனுக்கு ஈடாவார்கள் எனச் சொல்லுவதுதான் சிந்தனைக்குரியது. எதற்கும் யாருக்கும் இராமன் ஈடாக மாட்டான் எனச் சொன்னால் பொருத்தமாக இருக்கும். ஆனால் மூவரும் சேர்ந்தால் அவனுக்கு ஈடு என்று சொல்லுவதால்தான் அது பரநிலையைக் குறிக்கிறது எனக் கூறுகிறோம். வான்மீகி மலையும், கடலும் இராமனுக்கு ஈடாகமாட்டா எனச் சொன்னாரேயன்றி அவை இரண்டும் சேர்ந்து இராமனுக்கு ஈடாகும் எனச் சொல்லவில்லை கம்பன் இராமனுக்கு ஈடு சொல்வதால்தான் பரநிலைப் பாட்டாக அதனைக் கொள்ள வேண்டியிருக்கிறது.

3. பாத்திரப் பேச்சுகள் பற்றி முன்னரும் கூறியிருக்கிறேன். சில கருத்துக்களைப் பாத்திரங்கள் தெரிவிக்கின்றன. "சம்பராசுர யுத்தத்தில் உனக்குத் தருவதாகச் சொன்ன இரண்டு வரத்தையும் நீ இப்பொழுது கேள்" என மந்தரை கைகேயியிடம் சொல்லுகிறாள். சம்பராசுர யுத்தம் எங்கே நடந்தது? எதற்காக நடந்தது? ஏன் வரம் கொடுப்பதாகத் தசரதன் சொன்னான்? என்னும் விவரங்கள் மந்தரை பேச்சில் இல்லை. நாம் அவற்றை

விரித்துச் சொல்ல வேண்டியவர்களாகிறோம். பாத்திரங்கள் சில கருத்துக்களை எதற்காகச் சொல்லின? அவற்றின் அடிப்படை என்ன? என்பதை விவரித்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். அவ்வாறு காரண—காரியங்களைச் சொல்ல முற்படும்போது நாம் கூறியுள்ள வைணவ சித்தாந்தம் தானே உருவாகி விடுகிறது. கம்பன் வைணவனாக இருப்பதால் சற்பாத்திரங்கள் கூறும் வைணவக் கருத்துக்களை அவன் கருத்தாகவே கொள்ள வேண்டியதிருக்கிறது.

கம்பனைப் பற்றிய இந்த ஆராய்ச்சியை ஒப்புக் கொள்ளாதவர்கள் உடனே இதனை நிராகரித்து விடாமல் நாம் சொல்லியுள்ள காரணங்களை விருப்பு வெறுப் பின்றிச் சிந்திக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.



சித்தாந்த வித்தகர்

முரு.பழ. இரத்தினம் செட்டியார்

சித்தத்தைச் சிவன்பாலே வைத்ததனாலே சைவசித்தாந்தத்தில் சிந்தனைக்கு எட்டா நுண்மான் நுழைபுலம் வாய்க்கப் பெற்றவர். படித்ததோ மலேசியாவில் சீனியர் கேம்பிரிட்ஜ்; பார்ப்பதோ லேவாதேவித் தொழில்; பள்ளி ஏறித் தமிழ் படித்தறியா இவர் பெற்ற பட்டங்களோ பற்பல; குறிப்பாக, மலேசியத் தமிழ்ச் சங்கத்தார் அளித்த 'புலவர்மணி', அருள்நெறிக் கூட்டத்தார் அளித்த 'சித்தாந்த வித்தகர்', மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் அளித்த' தமிழ்க் கடல்', குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனகர்த்தர் அளித்த 'ஞானத் தமிழாகரர்', ஹிந்து பரிஷத் அளித்த 'வித்யாரத்னா'.

கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த பசுந்தமிழ்ப் பாலைத் தானாய்ச் சுவையறிந்து நெஞ்சு மண்ட நிறையக் குடித்தவர்: நெஞ்சு மாசு குறையக் குடித்தவர்: பண்டிதமணியார், தமிழ்த் தென்றல் திரு. வி. கல்யாண சுந்தரனார், தனித் தமிழ் வல்ல மறைமலையார், யாழ்நூல் கண்ட விபுலானந்தர் ஆகியோரிடம் சேவடி படரும் செம்மல் உள்ளமொடும் செந்தமிழ்ச் சித்தாந்தம், சாத்திரம் அணுகிக் கற்றவர் : நுணுக்கம் தெளிந்தவர்.

'திருவாசகச் சுவை' முதல் தடைகள் எழுப்பி விடைகண்டது உள்பட இதோ சைவ சித்தாந்தம்' என்று பலரும் தெரிந்து கொள்ள பற்பல நூல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதிய பெற்றியர். நயவுரைகள் தேடிக் கொழிக்கும் நாவிறு கொண்ட இவர்தம் குரல் ஒலிக்காத மலேசியக் கிராமமே இல்லை எனலாம். தமிழ் கூறும் நல்லுலகம் எல்லாம் தன்னேரிலாத தமிழ்ச் சமய, இலக்கியப் பொழிவுகளால் ஆர்வலர் தம் உள்ளமெல்லாம் கவர்ந்த கள்வர்; கன்னல் நிகர் தமிழ் ஞான சம்பந்தமுடையவர்.

ஆண்டு எழுபது ஆனாலும் இவர் சொற்கண்டு பிறா வெஃகும் கற்கண்டுத் தமிழ் மாணிக்கம் ; புலவர்களுக்குள்ளே வைர மணி ஞானத் தமிழாகரப் புஷ்பராகம்; ஆழ்தமிழ்க் கடல் முத்து : சைவ சித்தாந்த வித்தக ரத்தினம்.